# 1941 ம் ஆண்டு 27ம் இலக்க சம்பளச் சபை கட்டளைச் சட்டம்

# முகவுரை

போதனு மொழிகளாக சிங்களமும், தமிழும் மாறியதுங் காரணமாகவும், அனேக தொழிற் சட்டங்கள் ஆங்கில மொழியிலிருப்பதாலும், தொழிலாளர்களும் தொழில்தருநர்களும் ஆங்கில மொழியறிவு தரக்குறைவினுல் தமது உரிமைகள் என்ன, கடமைகள் என்ன என்பதை போதியளவு அறிந்துகொள்ள முடியாதவர்களாக இருக்கின்றுர்கள். அதுமட்டுமல்ல, தொழிற் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய பல அரச உத்தியோகத்தர்களும்கூட ஆங்கில அறிவு போதாமையால் இச்சட்டங்களைப் படித்து பூரணமாக விளங்கிக்கொள்ளும் நிலையில் இல்லை. இவை பலவித மோசடிகளுக்கும் இடம் அளித்துள்ளன.

சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தையும், தொழிற் பிணக்குச் சட்டத்தையும், சிங்கள, தமிழ் மொழிகளில் மொழி பெயர்ப்பதன் மூலம் இத்தகைய கஷ்டங்கள் தவிர்க்கப்படும் என்பது எனது அபிப்பிராயம். மேலும், தொழில்தருநர்களும் தொழிலாளர்களும் தமது உரிமைகள், கடமைகளை அறிந்து சட்டங்களால் பயன்அடைய இது வழியமைத்துள்ளது என்பது எனது நம்பிக்கையாகும்.

எமக்கு குறுகிய காலத்தில் இலகுநடையில் மொழிபெயர்ப்புகளைச் செய்து தருவதில் பேருதவியாக இருந்த சட்டவரைஞர் நாயகம் திரு. நளின் அபயசேகர அவர்களுக்கு எனது மனமுவந்த நன்றி உரித்தாகும். இவ்விடயத்தை வெற்றிகரமாக நிறைவு செய்ய முயற்சி செய்த தொழில் தரப் பகுதியின் பிரதி ஆணையாளர் திரு. கே. விஜயரத்தினம் அவர்களுக்கும் எனது மனமுவந்த நன்றிகள் உரித்தாகும். இவரது வழிகாட்டுதல் கிடைக்காவிட்டால் இத்தகைய ஒரு செயலைச் செய்து முடிப்பதற்குச் சிரமமாக இருந்திருக்கும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

இறுதியாக, இதனை வெளியிடுவதற்கு எமக்குப் பெருமளவில் உதவிய பிரற்றிக் ஈபேர்ட் வரையறுக்கப்பட்ட சங்கத்திற்கும் அதன் பிரதிநிதி ஆனல்ட் பேயின் ஹோனர் அவர்களுக்கும் எனது மனம்நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஜீ. வீரக்கோன்,
தொழில் ஆணையாளர்.

# சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

தொழில்களில் ஊழியத்துக்கமர்த்தப்பட்ட ஆட்களின் சம்பளங்களையும் ஏனைய வேதனநிலைகளையும் ஒழுங்குபடுத்துவதற்கும், சம்பளச் சபைகளைத் தாபிப்பதற்கும் அமைப்பதற்கும், மேற்கூறப்பட்ட கருமங்களுடன் சம்பந்தப்பட்ட அல்லது அவற்றின் இடைநேர்வினவான ஏனைய நோக்கங்களுக்குமான கட்டளைச் சட்டம்.

ஆளுநரின் சம்மதத் தேதி : யூலை 31, 1941

தொடங்கும் தேதி : செத்தெம்பர் 19, 1941

பிரிவுகள் பற்றிய பட்டியல்

1\. சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும் — 1941ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க, சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம். (அத்தியாயம் 136 — 1956ஆம் ஆண்டின் மீளாய்வு)

பாகம் 1

எல்லாத் தொழில்களும் தொடர்பான ஏற்பாடுகள்.

2\. சம்பளக் கொடுப்பனவு.

3\. சம்பளப் பதிவேடுகள் 3அ — பௌர்ணமி (போயா) நாளன்று விடுமுறை வழங்குதல்.

3ஆ. பௌர்ணமி (போயா) நாளன்று ஊழியத்துக் கமர்த்துதல்.

3இ. வேலையாளருக்கு அல்லது அவரது தொழிற் சங்கத்துக்குக் கொடுத்துதவப்பட வேண்டிய சம்பளங்கள் பற்றிய விபரங்கள்.

3ஈ. குறித்த சில விடயங்களில் சம்பள நிலுவைகளை அறவிடுதல்.

4\. பாகம் 1இன் ஏற்பாடுகளுள் எவற்றேடும் இணங்கி யொழுகுவதற்குத் தவறியமைக்கான தண்டம்.

5. பிரிவுகள் 2 (ஆ), 3 ஆகியவற்றின் ஏற்பாடுகளினது கால எல்லை.

பாகம் 2

குறிப்பிட்ட தொழில்கள் தொடர்பான ஏற்பாடுகள்.

கட்டளைச் சட்டத்தின் II ஆம் பாகம் குறிப்பிட்ட தொழில்களுக்கு ஏற்புடையதாதல்

6. பாகம் குறிப்பிட்ட தொழில்களுக்கு ஏற்புடையதாதல்.

7. பாகம் IIஐ ஏற்புடையதாக்குவதற்கான முன் எண்ணம் பற்றிய அறிவித்தல்.

## சம்பளச் சபைகள்

8. சம்பளச் சபைகளைத் தாபித்தல்.

9. சம்பளச் சபைகளை அமைத்தல்.

10. சம்பளச் சபைகளின் தவிசாளரும் செயலாளரும்.

11. சம்பளச் சபைக் கூட்டங்களிலான நடவடிக்கைமுறை.

12. சம்பளச் சபை உறுப்பினரின் பதவிக்காலம்.

13. ஒழுங்கு விதிகள்.

14. ஐயமேற்படும் விடயங்களில் எது பொருத்தமான சம்பளச் சபை என்ற பிரச்சினையைத் தீர்மானித்தல்.

15. அமைச்சரினால் அல்லது ஆணையாளரினால் சம்பளச் சபைக்குக் கருமங்கள் ஆற்றுப்படுத்தப்படுதல்.

16. விசாரணை நடாத்துவதற்குச் சம்பளச் சபைக்குள்ள தத்துவம்.

17. சம்பளச் சபை முன்னரான நடவடிக்கைகளில் கொடுக்கப்பட்ட தகவல் குறித்து சில விடயங்களில் அந்தரங்கமானதாகக் கொள்ளப்படுதல்.

## மாவட்ட சம்பளக் குழுக்கள்


18. மாவட்டச் சம்பளக் குழுக்கள்.

19. மாவட்டச் சம்பளக் குழுக்களுக்குச் சம்பளச் சபையினால் கருமங்கள் ஆற்றுப்படுத்தப்படுதல்.

20. ஆகக்குறைந்த சம்பள வீதங்கள்.

21. ஆகக்குறைந்த சம்பளத்தைச் செலுத்துவதற்குத் தொழில் தருநருக்குள்ள பொறுப்பு.

22. வழமையான வேலைநாளுக்குக் குறைவாக வேலைசெய்கின்ற அல்லது ஏதேனும் நாளன்று எவ்விதமான வேலையும் செய்யாத வேலையாளருக்கான சம்பளம்.

23. சம்பளம் செலுத்தப்பட வேண்டிய கால இடைவெளிகள்.

24. வேலை மணித்தியாலங்களும் வாராந்த விடுமுறை நாளும்.

25. ஆண்டு விடுமுறை நாட்கள்.

26. விடுமுறைநாட்களின் நோக்கங்களுக்காக சேவையைக் கணித்தல்.

27. விசேட சூழ்நிலைகளுக்கு ஏற்ப வித்தியாசமான சம்பள வீதங்கள் முதலியவற்றைத் தீர்மானித்தல்.

28. சம்பளச் சபைகளினால் உத்தேசிக்கப்பட்ட முடிபுகள் வெளியிடப்படுதல்.

29. சம்பளச் சபை முடிபுகள் அமைச்சரினால் அங்கீகரிக்கப்படுவதற்கான நடவடிக்கைமுறை.

30. சம்பளச் சபையின் முடிபுகளை நீக்குதல் அல்லது திருத்துதல்.

31. சம்பளச் சபைகளின் முடிபுகள் பற்றிய எண்பிப்பு.

32. இக்கட்டளைச் சட்டம் தவிர்ந்த வேறேதேனும் எழுத்திலான சட்டத்தைப் பொருட்படுத்தாது, சம்பளச் சபையின் முடிபுகள் பயனுடையனவாதல்.


### ஆகக்குறைந்த பொது நேரவீதம் ஆணையாளரினால் தீர்மானிக்கப் படுதல்


33. குறித்தசில விடயங்களில் ஆகக்குறைந்த பொது நேர வீதம் ஆணையாளரினால் தீர்மானிக்கப்படுதல்.

34. இல்லாதொழிக்கப்பட்ட, அல்லது அதன் அதிகாரம் சிறுக்கப்பட்ட சம்பளச் சபையின் முடிபுகள்.

## விசேட விடயங்கள் தொடர்பான ஏற்பாடுகள்

35. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வகுப்பினலான வேலையைப் புரிகின்ற வேலையாளர்.

36. துண்டு வேலையைப் புரிகின்ற வேலையாளர்.

37. தொழில்தருநரின் வளவுகளின் மீது வேலைக்கெனக் காத்திருக்கின்ற வேலையாளர்.

38. தொழில் என்றவகையாகச் செய்யப்பட்ட ஒழுங்கொன்றன் கீழ் செய்யப்படுகின்ற வேலை.

39. உடற்குறைபாடுள்ள வேலையாளர்.

40. தொழில்புரிஞநர் அல்லது தொழில்பழகுநர்.

## தொழில்தருநர்களின் கடமைகள்

41. இடாப்பை வைத்திருப்பதற்குத் தொழில்தருநருக்குள்ள கடமை.

42. தொழில்தருநர்களினல் அறிவித்தல்கள் வெளிக்காட்டி வைக்கப்படுதல்.

43. வேலையைப் பிரித்துக்கொடுக்கும் ஆட்களினல் வைத்திருக்கப்பட வேண்டிய இடாப்பு.

43 அ. தொழில்தருநர்களினல் ஏனைய பதிவேடுகள் பேணப்படுதல்.

## தவறுகள்

44. சம்பளங்கள் முதலியவற்றைச் செலுத்தத் தவறுவதற்கான தண்டம்.

45. நேரடித் தொழில்தருநர், தாமே இன்னேராளின் ஊழியத்திலிருத்தல்.

45 அ. ஒப்பந்தக்காரரினல் ஊழியத்துக்கமர்த்தப்பட்ட வேலையாளரொருவருக்கு வருமதியான சம்பளங்கள் தொடர்பாக ஒப்பந்தக்காரருக்குள்ள பொறுப்பு.

46. இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் வேலையாளர்களுக்கு வருமதியான பணத் தொகைகளை அறவிடுதல்.

47. எண்பிப்பதற்கான பொறுப்பு.

48. தொழில்தருநர்களிநற் புரியப்படும் தவறுகள்.

49. ஒரு சம்பளச் சபையின் உறுப்பினராகவிருத்தல் முதலியவற்றுக்கு வேலையாளரைப் பதவிநீக்குதல்.

50. பிரிவு 35க்கு முரணுகத் தொழில்தருநர் கட்டுப்பணம் பெறுதல்.

51. பிரிவு 17 (2)க்கு முரணுகத் தகவலை வெளியிடுதல்.

## பாகம் III

### பொது

## அலுவலர்களின் நியமனம், தத்துவங்கள் முதலியன

52. அலுவலர்களை நியமித்தல்.

53. தமது சார்பில் செயலாற்றவென ஆணையாளரின் அல்லது இன்னேர் அலுவலரின் அதிகாரவளிப்பு.

54. விபரத் திரட்டுக்கள் முதலியவற்றைக் கோருவதற்கு ஆணையாளருக்குள்ள தத்துவம்.

55. விதித்துரைக்கப்பட்ட அலுவலர்களின் தத்துவங்கள்.

56. உறுப்பினரொருவருக்கு வருமதியாகவுள்ள பணத்தை வழக்கு மூலம் அறவிடுவதற்கு தொழில் ஆணையாளருக்கு அல்லது பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கத்துக்கு உள்ள தத்துவம்.

57. சம்பளங்கள், தொழிலின் சொத்துக்களின் மீது முதற் பொறுப்பாதல் வேண்டும்.

57அ. சேவைச் சான்றிதழ்.

### தவறுகள்

58. தவறுகள்.

## நானாவிதமானவை

59. தொழில்தருநரின் முகவருக்குள்ள பொறுப்பு.

59அ. தொழில் என்றவகையாக அல்லது ஏதேனும் வர்த்தக நோக்கத்துக்காகச் செய்யப்பட்ட ஒழுங்கொன்றின் கீழ் வேலை செய்வதற்கு ஆட்கள் ஊழியத்துக்கமர்த்தப்படுமிடத்து ஏற்புடையனவான விசேட ஏற்பாடுகள்.

60. ஆணையாளரின் அனுமதியுடனன்றியும் தவறு புரியப்பட்டதிலிருந்து நான்கு ஆண்டுகளினுள்ளன்றியும் குற்றவழக்கு இல்லை.

61. தவறுகளுக்கான விளக்க நீதிமன்றம்.

62. கட்டளைச் சட்டத்தின் கீழான உரிமைகளிலிருந்து அல்லது பொறுப்புகளிலிருந்து ஒப்பந்தஞ்செய்தல்.

63. ஒழுங்குவிதிகள்.

64. பொருள்கோடல்.

65. கட்டளைச் சட்டத்தின் பயன்.

136ஆம் அத்தியாயம்

# சம்பளச் சபைகள்

தொழில்களில் ஊழியத்துக்கமர்த்தப்பட்ட ஆட்களின் சம்பளங்களையும், ஏனைய வேதனுநிகளையும் ஒழுங்குபடுத்துவதற்கும், சம்பளச் சபைகளைத் தாபிப்பதற்கும், அமைப்பதற்கும், மேற்கூறப்பட்ட கருமங்களுடன் சம்பந்தப்பட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான ஏனைய நோக்கங்களுக்குமான கட்டளைச் சட்டம்.

கட்டளைச் சட்டங்கள் 1941இன் 27ஆம் இல. 1943இன் 40ஆம் இல. 1945இன் 19ஆம் இல. 1945இன் 22ஆம் இல.

(1941, செத்தெம்பர் 19)

சட்டங்கள் 1953இன் 5ஆம் இல. 1957இன் 27ஆம் இல. 1952இன் 27ஆம் இல. 1966இன் 33ஆம் இல. 1966இன் 24ஆம் இல. 1972இன் 10ஆம் இல. 1989இன் 10ஆம் இல. 1982இன் 36ஆம் இல.

சுருக்கப் பெயர்.

1. இக்கட்டளைச் சட்டம் சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

## பாகம் I

### எல்லாத் தொழில்களும் தொடர்பான ஏற்பாடுகள்

சம்பளக் கொடுப்பனவு

2. ஏதேனும் தொழிலிலுள்ள வேலையாளர்களின் தொழில் தருநர், அத்தகைய ஒவ்வொரு வேலையாளருக்கும் சம்பளக் கொடுப்பனவு செய்தல் தொடர்பாக இப்பிரிவின் பின்வரும் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும் :—

(அ) இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டதற்கமைய, அவர், இதனகத்துப் பின்னர் வரைவிலக்கணங் கூறப்பட்டதும், வேலையாளரின் சம்மதத்துடன் செய்யப்பட்டதுமான அதிகாரமளிக்கப்பட்டவொரு கழிப்பனவல்லாத வேறு ஏதேனும் கழிப்பனவு இன்றி, வேலையாளருக்கு நேரடியாகச் சட்டப்படியான நாணயத்தில் அத்தகைய சம்பளத்தைச் செலுத்துதல் வேண்டும்.

ஆயின், ஏதேனும் ஒரு நேரத்தில் அவ்வாறு செய்யப்பட்ட கழிப்பனவுகளின் கூட்டு மொத்தம் பின்வருவதனை விஞ்சுதலாகாது:—

(i) வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவிப்பின் மூலம் இப்பந்தியின் நோக்கங்களுக்காக அமைச்சரினால் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தொழிலில் உள்ள வேலையாளரொருவரின் விடயத்தில், வருமதியாகவுள்ள சம்பளத்தின் எழுபத்தைந்து சதவீதம்; அத்துடன்

(ii) வேறேதேனும் தொழிலில் ஊழியத்துக்கமர்த்தப்பட்ட வேலையாளரொருவரின் விடயத்தில் வருமதியாகவுள்ள சம்பளத்தின் ஐம்பது சதவீதம் ;

ஆயின், மேலும், இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ள எதுவும், பின்வருவதனைப் பாதித்தலோ அல்லது பாதிப்பதாகக் கருதப்படுதலோ ஆகாது :—

(i) வருமானவரிக் கட்டளைச் சட்டத்தினால் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினால் அத்தகைய சம்பளத்திலிருந்து செய்யப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் கழிப்பனவு ; அல்லது

(ii) ஏதேனும் சட்ட நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் கட்டளையை, மன்றுணையை, அல்லது தீர்வையைப் பின்பற்றி அல்லது அதற்கிணங்கியொழுகச் செய்யப்பட்ட அத்தகைய சம்பளம் முழுவதினதும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தினது பிடித்து வைத்திருக்கை அல்லது கொடுப்பனவு.

இப்பந்தியின் நோக்கங்களுக்காக, வேலையாளருக்குச் சம்பளம் செலுத்தப்பட்ட பின்னர் உடனடியாக, வேலையாளினால் தொழில் தருநருக்கு அல்லது தொழில் தருநரின் முகவரொருவருக்குச் சம்பளத்திலிருந்து செய்யப்படும் கொடுப்பனவொன்று சம்பளத்திலிருந்து செய்யப்படும் கழிப்பனவொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(பிரிவு 2, 1957 இன் 27) இப்பந்தியில் "அதிகாரமளிக்கப்பட்ட கழிப்பனவு" என்பது பின்வருவன தொடர்பில், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய நிபந்தனைகளுக்கமையவும் (ஏதேனுமிருப்பின்), செய்யப்படும் கழிப்பனவொன்று என்று பொருளாகும்:-

(i) தொழில்தருநரினால் வேலையாளருக்குக் கொடுக்கப்படும் ஏதேனும் முற்பணம்.

(ii) வேலையாளரின் ஏதேனும் கடப்பாட்டை நிறைவேற்றுவதற்கு அல்லது வேறேதேனும் நோக்கத்துக்காக, வேலையாளரின் வேண்டுகோளின் பேரில், தொழில் தருனரல்லாத அல்லது தொழில் தருநரின் முகவரொருவரல்லாத வேறு அனைவருக்கும் வேலையாளரின் சம்பளத்திலிருந்து தொழில்தருநரினாற் செய்யப்படும் ஏதேனும் கொடுப்பனவு, அல்லது

(iii) வேறேதேனும் விதித்துரைக்கப்பட்ட கருமம்.

(ஆ) ஐந்தாம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அவரினுல் ஊழியத்துக்கமர்த்தப்பட்ட ஒவ்வொரு வேலையாளர் தொடர்பிலும், (ஒரு மாதத்தை விஞ்சாத) சம்பளக் காலப்பகுதியை அவர் நிர்ணயித்தல் வேண்டுமென்பதுடன், அவ்வேலையாளருக்கு அக்காலப்பகுதிக்கான சம்பளத்தைப் பின்வருமாறு செலுத்துதலும் வேண்டும் :—

(i) அக்காலப்பகுதி ஒரு வாரத்தை விஞ்சாதவிடத்து, அக்காலப்பகுதி முடிவுற்ற பின்னர், மூன்று நாட்களினுள், அல்லது

(ii) அக்காலப்பகுதி ஒரு வாரத்தை விஞ்சி ஆனல் இரு வாரங்களை விஞ்சாதவிடத்து, அக்காலப்பகுதி முடிவுற்ற பின்னர் ஐந்து நாட்களினுள், அல்லது

(iii) அக்காலப்பகுதி இருவாரங்களை விஞ்சுமிடத்து, அக்காலப்பகுதி முடிவுற்ற பின்னர் பத்து நாட்களினுள்;

ஆயின், எவ்வாறுயினும், எவரேனும் வேலையாளரின் வராமை காரணமாக அல்லது வேறேதேனும் தவிர்க்க முடியாத காரணத்துக்காக, இப்பந்தியினல் வரையறுக்கப்பட்ட காலத்தினுள் எவரேனும் வேலையாளரின் சம்பளத்தைச் செலுத்த இயலாதுள்ளவிடத்து, அவர் அத்தகைய சம்பளத்தை வைத்திருக்கலாமென்பதுடன், அதன்பின்னர் இயன்றவரை கூடியவிரைவிலான சந்தர்ப்பத்தில் அத்தகைய சம்பளத்தை அவ்வேலையாளருக்குச் செலுத்துதலும் வேண்டும்.

இப்பந்தியிலுள்ளதெதுவும், ஏதேனும் ஒப்பந்தத்தை முடிவுறுத்துவதற்காக இக்கட்டளைச் சட்டம் தவிர்ந்த வேறு எழுத்திலான சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின் கீழ் அவசியமான அறிவித்தற் காலப்பகுதியை அல்லது எச்சரிக்கைக் காலப்பகுதியை எவ்வகையிலும் பாதித்தலாகாது.

(பிரிவு 2 (அ) (இ) 1957ன் 27) ஏதேனும் தேதியன்று அவர் வேலையாளரொருவரின் ஊழியத்தை முடிவுறுத்தினால் அல்லது எவரேனும் வேலையாளர் அவரின் கீழான ஊழியத்தைச் சட்டமுறையாக முடிவுறுத்தினால், அவர், அத்தேதிக்குப் பின்னர் இரண்டாம் வேலைநாள் முடிவுறுமுன்னர் அவ்வேலையாளருக்கு கொடுக்குமதியான சம்பளத்தைச் செலுத்துதல் வேண்டும்.

சம்பளப் பதிவேடுகள். (பிரிவு 3, 1957ன் 27).

3. (1) ஐந்தாம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, ஏதேனும் தொழிலிலுள்ள வேலையாளர்களின் தொழில்தருநர், அத்தொழில் கொண்டுநடாத்தப்படும் வளவுகளில் பின்வருவனவற்றைக் குறித்துரைத்து அத்தகைய வேலையாளர்களின் ஒவ்வொரு சம்பளக் காலப்பகுதி தொடர்பிலும் (இதனைத்துப் பின்னர் " சம்பளப் பதிவேடு " எனக் குறிப்பீடு செய்யப்படும்) தெளிவானதும் செம்மையானதுமான பதிவேடொன்றை எழுத்தில் பேணிவருதலும், வைத்திருத்தலும் வேண்டும் :—

(அ) சம்பளக் காலப்பகுதி,

(ஆ) அத்தகைய சம்பளக் காலப்பகுதி தொடர்பில் சம்பளம் செலுத்தப்படும் வேலையாளர்களின் பெயர்கள்,

(இ) அத்தகைய வேலையாளர் ஒவ்வொருவரும் அத்தகைய சம்பளக் காலப்பகுதியில் வேலை செய்துள்ள மணித்தியாலங்களின் அல்லது நாட்களின் எண்ணிக்கை,

(பிரிவு 3, 1957ன் 27). (ஈ) அத்தகைய சம்பளக் காலப்பகுதி தொடர்பில் அத்தகைய ஒவ்வொரு வேலையாளருக்கும் செலுத்தப்பட்ட சம்பளம்,

(உ) அத்தகைய சம்பளக் கொடுப்பனவின் தேதி,

(ஊ) அத்தகைய சம்பளத்திலிருந்து செய்யப்படும் கழிப்பனவுகள், அத்துடன்

(எ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு கருமங்களின் விபரங்கள்.

(பிரிவு 3, 1957ன் 27). (2) தொழில்தருநரொருவராக ஏதேனும் சம்பளக் காலப்பகுதி தொடர்பிலான சம்பளப் பதிவேடொன்றை (1)ஆம் உட்பிரிவின் கீழ் பேணுகின்ற அல்லது பேணியுள்ள ஆள் ஒவ்வொருவரும், அத்தகைய காலப்பகுதியின் கடைசி நாளன்று தொடங்குகின்ற நான்காண்டுகளுக்கு அத்தகைய பதிவேட்டைப் பேணிக் காத்தல் வேண்டுமென்பதுடன், தொழில் ஆணையாளரினால் அல்லது எவரேனும் விதித்துரைக்கப்பட்ட அலுவலரினால் அவ்வாறு (பிரிவு 2, 1962ன் 27). செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படும் போது அத்தகைய பதிவேட்டைச் சோதனைக்குக் காண்பித்தலும் அத்தகைய பதிவேட்டுடன் அல்லது அத்தகைய பதிவேட்டின் ஏதேனும் பாகத்தின்

உண்மைப் பிரதியைக் கொடுத்துதவுதலும் அல்லது அத்தகைய வொரு பிரதி எடுக்கப்படுவதற்கு அனுமதித்தலும் வேண்டும்.

1971இன் 1ஆம் இலக்க விடுமுறை நாட்கள் ஒழுங்கு விதிகள், (போயா) பௌர்ணமி நாளன்று விடுமுறை வழங்குதல்

3அ. ஏதேனும் தொழிலிலுள்ள வேலையாளர்களின் தொழில் தருநரொருவர், அத்தகைய வேலையாளர்களுக்கு ஒவ்வொரு பௌர்ணமி (போயா) நாளன்றும் விடுமுறை வழங்குதல் வேண்டும் ;

ஆயின், வாராந்த விடுமுறைநாள் பௌர்ணமி (போயா) நாள் அன்று வருமிடத்து மேலதிக வாராந்த விடுமுறை நாட்கள் எவையும் வேலையாளர்களுக்கு வழங்கப்படுதலாகாது.

பௌர்ணமி நாளன்று ஊழியத்துக் கமர்த்துதல்.

3ஆ. பிரிவு 3அ என்பதன் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், ஏதேனும் தொழிலிலுள்ள வேலையாளர்களின் தொழில்தருநர், வழமையான ஊழியக் காலப்பகுதிக்கு பௌர்ணமி (போயா) நாளன்று வேலையாளரொருவரை, அவருக்கு அவரது வழமை யான நாட்சம்பள வீதத்தின் ஒன்றரை மடங்குக்குக் குறையாமல் செலுத்தப்படுதல் வேண்டுமென்ற நிபந்தனைக்கமைய, ஊழியத் துக்கமர்த்தலாம்.

(பிரிவு 2, 1978இன் 10) வேலையாளுக்கு அல்லது அவரது தொழிற் சங்கத்துக்குக் கொடுத்துத வப்பட வேண்டிய சம்பள விபரங்கள்

3இ. பிரிவு 3இன் கீழ் சம்பளப் பதிவேடொன்றைப் பேணு கின்ற அல்லது பேணியுள்ள தொழில்தருநர் ஒவ்வொருவரும், வேலையாளரொருவரினால் அல்லது அவர் சேர்ந்துள்ள தொழிற் சங்கத்தினால் செய்யப்படும் ஏதேனும் வேண்டுகோளின் மீது, அத்தகைய வேலையாளருக்குச் செலுத்தப்பட்ட சம்பளத்தின் எல்லா விபரங்களையும் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் கொடுத்துதவுதல் அல்லது கொடுத்துதவச் செய்தல் வேண்டும்.

குறித்தசில விடயங்களில் சம்பள நிலுவைகளை விறவிடுதல்

3ஈ. (1) ஏதேனும் தொழிலிலுள்ள வேலையாளர் எவரினதும் தொழில்தருநர், தொழிலில் கொண்டுநடாத்தப்படும் வளவுகளில் 3ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் கீழ் வைத்திருக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்ட சம்பளப் பதிவேட்டைப் பேணி வரு வதற்கும், வைத்திருப்பதற்கும் தவறியுள்ளவிடத்து, அல்லது அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் கீழ் அவ்வாறு செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படும்போது சோதனைக்கென அத்தகைய பதிவேட்டைக் காண்பிக்கத் தவறுமிடத்து, ஆணையாளர் அவருக்குக் கிடைக்கின்ற வாய்மூலமானதும், ஆவண மூலமானது மான எல்லாச் சான்றினதும் அடிப்படையில் இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் அத்தகைய வேலையாளருக்குச் செலுத்தப்பாற் பாலதான, விடயத்துக்கேற்ப, சம்பளத்தை அல்லது சம்பளத் தின் குறைவான கொடுப்பனவை மதிப்பிடுவதற்கு இத்நால்

நத்துவமளிக்கப்படுகின்றன என்பதுடன், (2)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய ஏதேனும் சம்பளக் கொடுப்பனவின் தவறுகைபுரியப்படுமிடத்து ஏற்புடையனவாதலும் வேண்டும்.

2. தொழில்தருநரொருவர் (1)ஆம் உட்பிரிவின் கீழ் செலுத்துவதற்கு அவர் ஆளாகவுள்ள ஏதேனும் பணத்தொகையைக் கொடுப்பனவு செய்வதில் தவறுகைபுரியுமிடத்தும், அப்பணத் தொகையை இக்கட்டளைச் சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாட்டின் கீழ் அறவிடுவது செயல்முறைக்குகந்ததல்ல அல்லது உசிதமானதல்ல என ஆணையாளர் அபிப்பிராயப்படுமிடத்தும், அப்பொழுது, அவர், அவ்வாறு வருமதியாகவுள்ள பணத்தொகையின் விபரங்களையும், தவறுகைபுரிகின்ற தொழில்தருநரின் பெயரையும் வதிவிடத்தையும், கொண்டுள்ள சான்றிதழொன்றை அத்தகைய இடம் அமைந்துள்ள பிரிவில் நியாயாதிக்கம் கொண்ட நீதிவானுக்கு வழங்கலாம். நீதிவான் அதன் மேல், வருமதியான பணத்தொகையை அறவிடுவதற்கு மேலும் நடவடிக்கைகள் அவருக்கெதிராக ஏன் எடுக்கப்படக் கூடாதெனக் காரணங்காட்டுவதற்கு அத்தகைய தொழில் தருநரைத் தமக்கு முன்னர் கட்டளையிட்டழைத்தல் வேண்டுமென்பதுடன், போதிய காரணம் காட்டுவதில் தவறுகை புரியப்படின், அத்தகைய பணத்தொகை அத்தகைய தொழில்தருநர் மீது அத்தகைய நீதிவானால் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்றெனக் கருதப்படுதலும் அதற்கிணங்க அறவிடப்படுதலும் வேண்டும். அவ்வாறு அறவிடப்பட்ட ஒவ்வொரு பணத்தொகையும் ஆணையாளருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

3. இப்பிரிவின் நோக்கங்களுக்காக ஆணையாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றிலுள்ள ஏதேனும் கூற்றின் சரிபிழை, இப்பிரிவின் கீழான எவையேனும் நடவடிக்கைகளில் கேள்விக்குட்படுத்தப்படுதலோ அல்லது நீதிமன்றத்தினால் பரிசோதனை செய்யப்படுதலோ ஆகாதென்பதுடன், அதற்கிணங்க இப்பிரிவிலுள்ளதெதுவும் அத்தகைய சான்றிதழிலுள்ள கூற்று எதனதும் சரிபிழையைச் சீர்தூக்கிப் பார்க்கவோ அல்லது முடிவு செய்யவோ நீதிமன்றத்துக்கு அதிகாரமளித்தலுமாகாது; அத்துடன் ஆணையாளரின் சான்றிதழ், தவறுகைபுரிகின்ற தொழில்தருநரிடமிருந்து (1)ஆம் உட்பிரிவின் கீழ் வருமதியான தொகை உரியமுறையில் கணக்கிடப்பட்டுள்ளதென்பதற்கும் அத்தகைய தொகை செலுத்தத் தவறப்பட்டதென்பதற்கும் போதிய சான்றாதல் வேண்டும்.

பாகம் 1இன் ஏற்பாடுகளுள் எவற்றேனும் இணங்கியொழுகுவதற்குத் தவறியமைக்கான தண்டம்.

4. 1. இக்கட்டளைச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏதேனும் ஏற்பாட்டுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற தொழில்தருநர் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், பின்வருவனவற்றுக்கு ஆளாதலும் வேண்டும் :—

(அ) முதலாவது தவறொன்றின் விடயத்தில், நூறு ரூபாவுக்குக் குறையாததும் இருநூற்றைம்பது ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு, (பிரிவு 3, 1978இன் 10).

(ஆ) இரண்டாவது தவறொன்றின் விடயத்தில், இருநூற்றைம்பது ரூபாவுக்குக் குறையாததும், ஐந்நூறு ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு, அத்துடன்

(இ) அடுத்துப்பின்னரான தவறொன்றின் விடயத்தில், ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாததும் ஆயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற் தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப் பணம், மறியற் தண்டனை ஆகிய இரண்டுக்கும்.

2. எவரேனும் வேலையாளர் தொடர்பிலான தவறொன்றுக்கு (1)ஆம் உட்பிரிவின் கீழ் தொழில்தருநரொருவருக்குக் குற்றத் தீர்ப்பளித்ததன் மேல், நீதிமன்றமானது, வேறேதேனும் தண்டனைத் தீர்ப்புடன் சேர்த்து மேலதிகமாகப் பின்வருவதனைச் செலுத்துமாறு தொழில்தருநருக்குக் கட்டளையிடலாம் :—

(அ) வேலையாளரொருவருக்குத் தகுந்தமுறையில் செலுத்தப்பட்டிருக்க வேண்டிய தொகை அவ்வேலையாளருக்குச் செலுத்தப்பட்டிராதவிடத்து, அத்தகைய தொகைக்கும் உண்மையில் செலுத்தப்பட்ட தொகைக்கும் இடையிலான வித்தியாசத்தைக் குறிக்கின்றதாக நீதிமன்றத்தினால் காணப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையும் (2அ) என்னும் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட மிகைக்கட்டணமும்; அல்லது (பிரிவு 2, 1982இன் 36)

(ஆ) அவ்வேலையாளருக்குக் கொடுக்குமதியான சம்பளத்தின் பாகமெதுவும் செலுத்தப்பட்டிராதவிடத்து, அத்தகைய சம்பளத்தைக் குறிக்கின்றதாக நீதிமன்றத்தினால் காணப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையும் (2அ) என்னும் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட மிகைக் கட்டணமும். (பிரிவு 3, 1982இன் 36).

இவ்வுட்பிரிவின் கீழ் செலுத்தப்படுவதற்குக் கட்டளையிடப்படும் ஏதேனும் பணத்தொகை குற்றப்பணமொன்று என்றாற் போன்று அதேமுறையில் அறவிடப்படலாம்.

(2அ) இரண்டாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் அல்லது (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பணத்தொகை மீது செலுத்தப்படற்பாலதான மிகைக் கட்டணம் பின்வருமாறு கணக்கிடப்படுதல் வேண்டும் :—

(அ) ஒரு மாதத்தை விஞ்சுகின்ற ஆனால் மூன்று மாதங்களை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கு அத்தகைய பணத்தொகை நிலுவையாகவுள்ளவிடத்து, அத்தகைய பணத்தொகையின் இருபது சதவீத மிகைக்கட்டணம்;

(ஆ) மூன்று மாதங்களை விஞ்சுகின்ற ஆனால் ஆறு மாதங்களை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கு அத்தகைய பணத்தொகை நிலுவையாகவுள்ளவிடத்து, அத்தகைய பணத்தொகையின் முப்பது சதவீத மிகைக்கட்டணம்;

(இ) ஆறுமாதங்களை விஞ்சுகின்ற ஆனால் பன்னிரண்டு மாதங்களை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கு அத்தகைய பணத்தொகை நிலுவையாகவுள்ளவிடத்து, அத்தகைய பணத்தொகையின் நாற்பது சதவீத மிகைக்கட்டணம்;

(ஈ) பன்னிரண்டு மாதங்களை விஞ்சுகின்ற ஒரு காலப்பகுதிக்கு அத்தகைய பணத்தொகை நிலுவையாகவுள்ளவிடத்து, அத்தகைய பணத்தொகையின் ஐம்பது சதவீத மிகைக் கட்டணம்.

(3) ஏதேனும் பணத்தொகையின் கொடுப்பனவுக்காக (2)ஆம் உட்பிரிவின் கீழ் கட்டளையொன்றை ஆக்குவதற்கு நீதி மன்றத்துக்குள்ள தத்துவம், வேறேதேனும் நடவடிக்கை மூலம் அப்பணத்தொகையை அறவிடுவதற்கு வேலையாளருக்குள்ள உரிமை எதனையும் மதிப்புக் குறைப்பதாதலாகாது.

பிரிவுகள் (ஆ2), 3 ஆகியவற்றின் ஏற்பாடுகளின்து காவளல்லை.

5. (1) ஏதேனும் தொழில்தொடர்பில் 23ஆம் பிரிவின் கீழ் சம்பளச் சபையொன்றின் முடிவு வலுவுக்குவரும் தேதியிலிருந்து 2ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகள், அத்தகைய ஏதேனும் முடிபுக்கு அவை ஒவ்வாதனவாகவிராத அல்லது முரணுகவுள்ள அளவுக்கு, அத்தொழில் தொடர்பில் பயனில்லா தொழிதல் வேண்டும்.

(2) மூன்றும் பிரிவின் ஏற்பாடுகள், ஏதேனும் தொழிலுக்கு 41ஆம் பிரிவின் கீழ் இடாப்புப் படிவமொன்று விதித்துரைக்கப்படும் தேதியிலிருந்து அத்தொழில் தொடர்பில் பயனில்லாதொழிதல் வேண்டும்.

## பாகம் II

### குறிப்பிட்ட தொழில்கள் தொடர்பான ஏற்பாடுகள் கட்டளைச் சட்டத்தின் IIஆம் பாகம் குறிப்பிட்ட தொழில்களுக்கு ஏற்புடையதாதல்

பாகம் II குறிப்பிட்ட தொழில்களுக்கு ஏற்புடையதாதல்.

6. (1) ஏழாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அமைச்சர், எழுத்திலான கட்டளைமூலம் இக்கட்டளைச் சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளை அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தொழிலுக்கு ஏற்புடையனவாக்கலாம்.

இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளினுல் அளிக்கப்பட்ட தத்துவமானது, முன்னைய எந்தக் கட்டளையிலும் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தொழிலின் விவரணத்தை எம்முறையிலேனும் வேறுபடுத்தும் நோக்கத்துக்காகத் திருத்துகின்ற கட்டளையொன்றைக் காலத்துக்குக்காலம் ஆக்குவதற்கான தத்துவத்தை உள்ளடக்குவதாகக் கருதப்படல் வேண்டும்.

(2) முதலாம் உட்பிரிவின் கீழான கட்டளையொவ்வொன்றும் வர்த்தகமானியிலான அறிவிப்பின் மூலம் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய அறிவிப்பில் குறித்துரைக்கப்படக்கூடியவாறன அத்தகைய பிந்திய தேதியன்று வலுவுக்கு வருதலும் வேண்டும்.

7. (1) ஆறும் பிரிவின் கீழான கட்டளையெதுவும், அத்தகைய கட்டளையை ஆக்குவதற்கான எண்ணம் பற்றிய அறிவிப்பு வர்த்தமானியிலும், ஒரு சிங்கள, ஒரு தமிழ் அத்துடன் ஓர் ஆங்கிலச் செய்தித்தாளிலும் வெளியிடப்பட்டாலொழிய, ஆக்கப்படுதலாகாது: உத்தேசிக்கப்பட்ட கட்டளைக்கான ஆட்சேபனைகள் எந்தத் தேதியன்று அல்லது எந்தத் தேதிக்குமுன்னர் அமைச்சரினுல் பெற்றுக்கொள்ளப்படுமோ அந்தத் தேதியைக் குறிக்கின்ற அறிவித்தலொன்றும் இதனேடு வெளியிடப்படுதல் வேண்டும்.

*பாகம் IIஉ ஏற்புடைய தாக்குவதற்கான முன்னெண்ணம் பற்றிய அறிவித்தல்.*

(2) முதலாம் உட்பிரிவின் கீழான அறிவித்தலொன்றின் விளைவாக முன்வைக்கப்பட்ட ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும் உத்தேசிக்கப்பட்ட கட்டளைக்கெதிராக எந்த ஏதுக்களின்மீது ஆட்சேபனை செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள்பற்றிய கூற்றென்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(3) முதலாம் உட்பிரிவின் கீழான அறிவித்தலின் விளைவாகச் செய்யப்பட்ட எல்லா ஆட்சேபனைகளையும் அமைச்சர் சீர்தூக்கிப் பார்த்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் ஆட்சேபனையை நுண்ணாய்வு செய்யும் நோக்கத்துக்காக அவசியமென அவர் காணக்கூடிய அத்தகைய விசாரணையையும் நடாத்தலாம்.

## சம்பளச் சபைகள்

8. (1) அமைச்சர் வர்த்தகமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் —

(அ) ஆறும் பிரிவின் கீழ் இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாக்கப்பட்ட ஏதேனும் தொழிலுக்காக, அல்லது அத்தகைய ஏதேனும் தொழிலின் ஏதேனும் கிளைக்காக, அல்லது ஏதேனும் பணிக்காக அல்லது நடைமுறைக்காகச் சம்பளச் சபையொன்றைத் தாபிக்கலாம்;

*சம்பளச் சபைகளைத் சபைகளைத் தாபித்தல்.*

(ஆ) ஏதேனும் தொழிலுக்காக அவ்வாறு தாபிக்கப்பட்ட ஏதேனும் சம்பளச் சபையின் இக்கட்டளைச் சட்டத்தின் கீழான தத்துவங்களும், கடமைகளும், பணிகளும், அவ் வேற்பாடுகள் அவ்வாறு ஏற்புடையனவாக்கப்பட்ட வேறேதேனும் தொழிலுக்கும் நீடித்தல் வேண்டுமென வெளிப்படுத்தலாம்.

(2) முதலாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழான கட்டளையெதுவும், அத்தகைய கட்டளையை ஆக்குவதற்கான எண்ணம் பற்றிய அறிவிப்பு வர்த்தமானியிலும் ஆகக் குறைந்தது ஒரு சிங்கள, ஒரு தமிழ் அத்துடன் ஓர் ஆங்கிலச் செய்தித்தாளிலும் வெளியிடப்பட்டாலொழிய, ஆக்கப்படுதலாகாது. உத்தேசிக்கப்பட்ட கட்டளைக்கெதிரான ஆட்சேபனைகள் எந்தத் தேதியன்று அல்லது எந்தத் தேதிக்கு முன்னர் அமைச்சரினால் பெற்றுக்கொள்ளப்படுமோ அந்தத் தேதியைக் குறித்துரைக்கின்ற அறிவித்தலொன்றும் இதனோடு வெளியிடப்படுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழான அறிவித்தலின் விளைவாக முன்வைக்கப்பட்ட ஒவ்வோர் ஆட்சேபனையும் எழுத்தில் செய்யப்படுதலும், உத்தேசிக்கப்பட்ட கட்டளைக்கெதிராக எந்த ஏதுக்களின் மீது ஆட்சேபனை செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின் கீழான அறிவித்தலின் விளைவாகச் செய்யப்பட்ட எல்லா ஆட்சேபனைகளையும் அமைச்சர் சீர்தூக்கிப் பார்த்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் ஆட்சேபனையை நுண்ணாய்வு செய்யும் நோக்கத்துக்காக அவசியமெனை அவர் காணக்கூடிய அத்தகைய விசாரணையையும் நடாத்தலாம்.

(5) எந்தத் தொழிலுக்காகச் சம்பளச் சபையொன்று தாபிக்கப்பட்டுள்ளதோ அந்தத் தொழில் எதனதும் விவரணம், 6ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்றினால் ஏதேனும் தேதியன்று வேறுபடுத்தப்படுமிடத்து, வேறுபடுத்தப்பட்ட விவரணத்தினதான தொழிலுக்காக அத்தேதியன்று அச்சபை உரியமுறையில் தாபிக்கப்பட்டுள்ளதெனக் கருதப்படுதல் வேண்டும்.

சம்பளச் சபைகளை அமைத்தல்

9. (1) ஏழாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, சம்பளச் சபை ஒவ்வொன்றும், ஆணையாளரையும் அச்சபையானது எந்தத் தொழிலுக்காகத் தாபிக்கப்படுகின்றதோ அந்தத் தொழிலிலுள்ள தொழில்தருநர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற உறுப்பினர்களையும் அத்தகைய தொழிலில் ஈடுபட்டுள்ள வேலையாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற உறுப்பினர்களையும், பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஒரு சம்பளச் சபையின் பிரதிநிதித்துவ உறுப்பினர்களின் எண்ணிக்கை அமைச்சரினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய எண்ணிக்கையினரில் ஓர் அரைவாசி தொழில்தருநர்களின் பிரதிநிதிகளாகவும் ஓர் அரைவாசி வேலையாளர்களின் பிரதிநிதிகளாகவும் இருத்தலும் வேண்டும். ஒரு சம்பள சபையின் எல்லாப் பிரதிநிதித்துவ உறுப்பினர்களும் அமைச்சரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஏதேனும் சம்பளச் சபையின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் 8ஆம் பிரிவின் கீழ் நீடிக்கப்படுமிடத்து, முறையே தொழில்தருநர்களையும் வேலையாளர்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கென மேலதிகப் பிரதிநிதித்துவ உறுப்பினர்களின் சமமான எண்ணிக்கையினரை அமைச்சர் நியமிக்கலாம்.

(4) எவரேனுமாள், சபையானது எத்தொழிலுக்காகத் தாபிக்கப்படுகின்றதோ அத்தொழில் அவர் தொழில்தருநர் அல்லது வேலையாளர் ஒருவரல்லர் என்பதனைப் பொருட்படுத்தாது, சம்பளச் சபையின் பிரதிநிதித்துவ உறுப்பினராக நியமிக்கப்படலாம் :

ஆயின், எவ்வாறாயினும் —

(அ) பிரதிநிதித்துவ உறுப்பினராக நியமிக்கப்படவுள்ள எவரேனுமாள், ஏதேனும் தொழிற்சங்கத்தின், கழகத்தின் அல்லது வேறு ஒழுங்கமைப்பின் உறுப்பினர்களாகவுள்ள எவரேனும் தொழில்தருநர்களை அல்லது வேலையாளர்களை அவர் பிரதிநிதித்துவப்படுத்தவேண்டியிருப்பின், அச்சங்கத்தினால், கழகத்தினால் அல்லது ஒழுங்கமைப்பினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும், அத்துடன்

(ஆ) அத்தகைய ஏதேனும் சங்கத்தின், கழகத்தின் அல்லது ஒழுங்கமைப்பின் அங்கீகாரத்தின் மீது பிரதிநிதித்துவ உறுப்பினராக இருக்கவென நியமிக்கப்பட்டுள்ள எவரேனுமாள், அத்தகைய சங்கத்தின், கழகத்தின் அல்லது ஒழுங்கமைப்பின் வேண்டுகோளின்பேரில், அமைச்சர், அவசியமெனத் தாம் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணையின் பின்னர், அத்தகைய ஆள் உறுப்பினராக இல்லாதொழிந்துள்ளார். அல்லது அத்தகைய சங்கத்தின், கழகத்தின் அல்லது ஒழுங்கமைப்பின் நம்பிக்கையை உடையவராக இல்லாதொழிந்துள்ளார் எனத் திருப்திப்படின், அமைச்சரினால் பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

(5) ஆண்களும், பெண்களும் சம்பளச் சபை உறுப்பினர்களாக நியமிக்கப்படுதற்குத் தகவுடையயோராதல் வேண்டும்.

(6) எவரேனுமாள் ஒன்றுக்குமேற்பட்ட சம்பளச் சபைகளின் உறுப்பினராகவிருக்கலாம்.

(7) சம்பளச் சபையின் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்களாக இருக்கவென, அமைச்சர், தகுதியெனத் தாம் கருதக்கூடியவாறு (3 பேர்களை விஞ்சாத) அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்களை நியமித்தல் வேண்டும்.

(8) ஏதேனும் தொழிலில் தொழில்தருநராக அல்லது வேலையாளராகவுள்ள ஆளெவரும், அத்தொழிலுக்காகத் தாபிக்கப்பட்ட, சம்பளச் சபையின் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினராக இருக்கவென நியமிக்கப்படுதலாகாது.

(9) சம்பளச் சபையின் எவரேனும் உறுப்பினர், சுகவீனம் காரணமாக அல்லது அமைச்சர் நியாயமானதெனக் கொள்ளுகின்ற வேறுகாரணத்துக்காக அச்சபையின் கூட்டங்களுக்கு வருகைதர இயலாதவராகவுள்ளவிடத்து, முதற்கூறப்பட்ட உறுப்பினர் இல்லாதபோது அச்சபையின் உறுப்பினராகச் செயலாற்றவென அமைச்சர் ஆளொருவரை நியமிக்கலாம்.

*சம்பளச் சபையின் தவிசாளரும் செயலாளரும்*

10. (1) ஆணையாளர் ஒவ்வொரு சம்பளச் சபையினதும் தவிசாளராக இருத்தலும் அத்தகைய சபையின் எல்லாக் கூட்டங்களிலும் தலைமைதாங்குதலும் வேண்டும்.

*5-2-1948 இன் 9828ஆம் இலக்க வர்த்தமானி*

ஆயின், எவ்வாறாயினும், சம்பளச் சபையொன்றின் ஏதேனும் கூட்டத்தில் அல்லது அதன் நடவடிக்கைகளிலான ஏதேனும் கட்டத்தின்போது தொழில் ஆணையாளர் இல்லாதிருப்பின், பிரதித்தொழில் ஆணையாளர் ஒருவர் அல்லது உதவித் தொழில் ஆணையாளர் ஒருவர், அவர் அச்சபையின் உறுப்பினரொருவரல்லர் என்பதைப் பொருட்படுத்தாது, தொழில் ஆணையாளரின் சார்பில் அக்கூட்டத்தில் தலைமைதாங்கலாம்.

(2) சம்பளச் சபையொன்றன் ஏதேனும் கூட்டத்தில் தலைமை தாங்குகின்ற அலுவலர், அக்கூட்டத்தின் முன்னருள்ள ஏதேனும் பிரச்சினை மீது வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலாகாது.

(3) சம்பளச் சபை ஒவ்வொன்றும் ஒரு செயலாளரை அல்லது இரு கூட்டுச் செயலாளர்களைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், உதவிச் செயலாளரொருவரையும் கொண்டிருக்கலாம்.

10(4) . . .

*சம்பளச்சபை கூட்டங்களிலான நடவடிக்கை முறை (பிரிவு 2 1980ன் 10)*

11. (1) சம்பளச் சபையொன்றன் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) தொழில் ஆணையாளர் அல்லது ஒரு பிரதித் தொழில் ஆணையாளர் அல்லது ஓர் உதவித் தொழில் ஆணையாளர்

(ஆ) நான்கு பிரதிநிதித்துவ உறுப்பினர்கள்; இவர்களுள் இருவர் தொழில்தருநர்களின் பிரதிநிதிகளாகவும் மற்றைய இருவர் வேலையாளர்களின் பிரதிநிதிகளாகவும் இருத்தல் வேண்டும், அத்துடன்

(இ) ஒரு பொயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்.

(2) சம்பளச் சபையொன்றன் ஏதேனும் கூட்டத்தை நடாத்தும் நோக்கத்துக்காக உறுப்பினர்கள் வருகைதருவதில் தொழில்தருநர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களின் எண்ணிக்கை, வேலையாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு அதிகமானதாக அல்லது குறைவானதாக இருக்குமிடத்து, தொழில்தருநர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் அல்லது வேலையாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள், இவர்களுள் எவர்கள் பெரும்பான்மையோராகவுள்ளனரோ அவர்கள், கூட்டம் தொடங்கு முன்னர், அக்கூட்டத்தில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராயிருக்க வேண்டிவரும். தொழில்தருநர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றவருமான உறுப்பினர்களின் எண்ணிக்கையும், அவ்வாறு உரித்துடையவராயிருக்க வேண்டியோரும் வேலையாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றவருமான உறுப்பினர்களின் எண்ணிக்கையும் சமமாகவிருப்பதனை உறுதிப்படுத்துவதற்கென அக்கூட்டத்தில் வாக்களிக்காது தவிர்க்கும் உறுப்பினரை அல்லது உறுப்பினர்களைத் தம்மிடையேயிருந்து தெரிந்தெடுத்தல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், பெரும்பான்மையோராகவுள்ள பிரதிநிதித்துவ உறுப்பினர்கள் தம்முள் எவர் அவ்வாறு வாக்களிக்காது தவிர்த்தல் வேண்டுமென்பதுபற்றி தம்மிடையே உடன்பட்டுக்கொள்ள இயலாதவராகவுள்ளவிடத்து, அக்கூட்டத்தில் வாக்களிக்காது தவிர்க்க வேண்டிய உறுப்பினர் அல்லது உறுப்பினர்கள், தவிசாளரின் முன்னிலையிலும் அவரது பணிப்புகளின் கீழுமான திருவுளச்சீட்டிழுப்பின் மூலம் தெரிந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(3) சம்பளச் சபையொன்றன் கூட்டமெதிலும் வாக்களிக்காது தவிர்ப்பதற்கென (2)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள சம்பளச் சபையின் பிரதிநிதித்துவ உறுப்பினரொருவர், அக்கூட்டத்தில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலாகாது ஆனால் அக்கூட்டத்தில் சமூகமளித்து ஏதேனும் கலந்தாராய்வில் பங்குபற்றுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்;

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய பிரதிநிதித்துவ உறுப்பினர் அத்தகைய கூட்டத்தின்போது எந்நேரத்திலும் உறுப்பினர்களின் வருகையிலான அதிகரிப்பின் விளைவாகத் தொழில்தருநர்களைப் பிரதி நிதிப்படுத்துகின்றவராய் சமூகமாயிருக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை, வேலையாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றவராய் சமூகமாயிருக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்குச் சமமாகவிருப்பின், அத்தகைய பிரதிநிதித்துவ உறுப்பினர் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(4) இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் சம்பளச் சபையொன்றால் ஆக்கப்படவேண்டுமெனத் தத்துவமளிக்கப்படுகின்ற அல்லது தேவைப்படுத்தப்படுகின்ற முடிபு ஒவ்வொன்றும், அச்சபையின் கூட்டமெதிலும் வாக்களிப்பதற்கு உரித்துடையவராய் சமூகமாயிருக்கும் உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரால் செய்யப்படுதல் வேண்டும்; அத்துடன் சம்பளச் சபையொன்றன் முடிபு எதுவும், ஏதேனும் விதிமுறைப்படாமையின் அல்லது படிவத்திலான வழுவின் காரணமாகமட்டும், அல்லது அத்தகைய முடிபைச் செய்வதற்கு முதனிலையாகச் செய்யப்படவேண்டுமென இக்கட்டளைச் சட்டத்தினால் கேட்டுக்கொள்ளப்பட்ட எதனையும் செய்யத் தவறியமை காரணமாகமட்டும், செல்லுபடியற்றதாதலாகாது

(5) சம்பளச் சபையொன்றன் நடவடிக்கைகள், அச்சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் உள்ள ஏதேனும் வெற்றிடத்தினால் அல்லது எவரேனும் உறுப்பினரின் நியமனத்திலான ஏதேனும் குறைபாட்டினால் செல்லுபடியற்றதாக்கப்படுதலாகாது.

(6) இக்கட்டளைச் சட்டத்தினதும் ஏதேனும் ஒழுங்குவிதியினதும் ஏற்பாடுகளுக்கமைய, சம்பளச் சபையொன்று அதன் சொந்த நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

*சம்பளச் சபை உறுப்பினரின் பதவிக்காலம்*

12. (1) சம்பளச் சபையொன்றன் ஒவ்வோர் உறுப்பினரும் அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டுக் காலப்பகுதியொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், (ஆணையாளர் தவிர்ந்த) சபை உறுப்பினர் எவரும், சபையிலான தமது உறுப்பாண்மையிலிருந்து எந்நேரத்திலும் விலகலாம். அல்லது அமைச்சரினால் அதிலிருந்து அகற்றப்படலாம் :

ஆயின், மேலும் —

(அ) இறந்துள்ள அல்லது அச்சபையிலான தமது உறுப்பாண்மையிலிருந்து விலகியுள்ள அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்டுள்ள உறுப்பினரொருவரின் இடத்தில் சம்பளச் சபையொன்றின் உறுப்பினராக இருக்கவென நியமிக்கப்பட்ட எவரேனுமாள், கடைசியாகக் கூறப்பட்ட உறுப்பினரின் பதவிக் காலத்தின் முடிவுறுதெஞ்சியுள்ள பாகத்துக்குச் சமமான காலப்பகுதியின்போது பதவிவகித்தல் வேண்டும்.

(ஆ) உறுப்பினரொருவர் இல்லாதபோது சம்பளச் சபையொன்றன் உறுப்பினராகச் செயலாற்றவென நியமிக்கப்பட்ட எவரேனுமாள், அத்தகைய இல்லாமைக் காலப்பகுதியின்போது பதவி வகித்தல் வேண்டும்; அத்துடன்

(இ) சம்பளச் சபையொன்றன் மேலதிக உறுப்பினராக நியமிக்கப்படுகின்ற எவரேனுமாள், சபையின் ஏனைய நிரந்தர உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவுறும்வரை பதவி வகித்தல் வேண்டும்.

(2) சம்பளச் சபையொன்றன் அடுத்தடுத்த மூன்று கூட்டங்களுக்கு வராதுள்ள (தொழில் ஆணையாளர் தவிர்ந்த) அச்சபையின் உறுப்பினர் எவரும், அக்கூட்டங்களின் கடைசிக் கூட்டத் தேதிக்குப் பின்னர் பதினைந்தாம் நாளன்று, அக்கூட்டங்களில் ஒவ்வொன்றிற்கும் தாம் வராதிருந்தமை நியாயமான ஒரு காரணத்தினாலேயே என அந்நாளுக்கு முன்னர் அவர் அமைச்சரைத் திருப்திப்படுத்தினாலொழிய, அச்சபையின் உறுப்பாண்மையிலிருந்து விலகியுள்ளவராகக் கருதப்படுதல் வேண்டும்.

இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக, "கூட்டம்" என்பது கூட்ட நடப்பெண் இல்லாமைகாரணமாக நடாத்தப்படாத ஒரு கூட்டத்தையும் உள்ளடக்கும்.

(3) சம்பளச் சபையின் உறுப்பினராக இல்லாதொழிகின்ற எவரேனுமாள், அதற்கு மீண்டும் நியமிக்கப்படுதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

13. (1) இக்கட்டளைச் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டுக்கு ஒவ்வாதனவாகவிராத ஒழுங்கு விதிகள் பின்வருவனவற்றுக்காக ஆக்கப்படலாம் :— ஒழுங்கு விதிகள்.

(அ) தொழில்தருநர்களினதும், வேலையாளர்களினதும் பிரதிநிதிகள் (தேர்தல் முறையாகவோ அல்லது வேறுவகையாகவோ) தேர்ந்தெடுக்கப்படக்கூடிய முறையை விதித்துரைத்தல்,

(ஆ) சம்பளச் சபையின் கூட்டங்கள் கூட்டப்பட்டு நடாத்தப்படவேண்டிய முறையையும், வாக்களிக்கும் விதம் உட்பட அத்தகைய கூட்டங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறையையும் விதித்துரைத்தல் ;

(இ) சம்பளச் சபையொன்றன் உறுப்பாண்மையில் ஏற்படுகின்ற வெற்றிடங்களை நிரப்பும் விதத்தை விதித்துரைத்தல் ;

(ஈ) பொதுவாக இக்கட்டளைச்சட்டத்தின் கீழான ஒரு சம்பளச் சபை தொடர்பான ஏதேனும் கருமத்துக்காக அல்லது அது தொடர்பில், அல்லது சம்பளச் சபையொன்றன் ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் புரிவதற்காக அல்லது நிறைவேற்றுவதற்காக.

(2) முதலாம் உட்பிரிவின் கீழான ஏதேனும் ஒழுங்கு விதி அதன்கண் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு எல்லாச் சம்பளச்

சபைகளுக்கும் அல்லது ஏதேனும் குறிப்பிட்ட வகுப்பினதான சம்பளச் சபைக்கு அல்லது குறித்துரைக்கப்பட்ட ஏதேனுமொரு சம்பளச் சபைக்கு அல்லது அதற்கதிகமான சம்பளச் சபைகளுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

ஐயமேற்படும் விடயங்களில் எது பொருத்தமான சம்பளச் சபை என்ற பிரச்சனையைத் தீர்மானித்தல்

14. இக்கட்டளைச் சட்டத்தின் கீழான இரண்டு அல்லது அதற்கதிகமான சம்பளச் சபைகளில் எது, சம்பளச் சபையொன்றன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் ஏதேனும் கருமத்தில் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் உரித்துடையது அல்லது கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதுபற்றி ஏதேனும் ஐயமேற்படுமிடத்து அல்லது ஏதேனும் பிரச்சினை எழுப்பப்படுமிடத்து, ஆணையாளர் அத்தகைய பிரச்சினையை முடிபுசெய்தல் வேண்டுமென்பதுடன், அதன்மீது அவரது முடிபு இறுதியானதாதலும் வேண்டும்.

அமைச்சரினல் அல்லது ஆணையாளரினல் சம்பளச் சபைகளுக்குக் கருமங்கள் ஆற்றுப்படுத்தப்படுதல்.

15. ஏதேனும் தொழிலுக்காகத் தாபிக்கப்பட்ட சம்பளச் சபையொன்று, அமைச்சரினல் அல்லது ஆணையாளரினல் அதற்கு ஆற்றுப்படுத்தப்படகூடியவாறுன அத்தொழில்பற்றிய நிலைமைகள் தொடர்பான ஏதேனும் கருமத்தைச் சீர்தூக்கிப்பார்த்து அதன் மீது அறிக்கையொன்றைக் கொடுத்துதவுதல் வேண்டும்.

விசாரணைகளை நடாத்துவதற்கு சம்பளச் சபைக்குள்ள தத்துவம்.

16. (1) இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் செய்வதற்கு அல்லது கொடுத்துதவுவதற்குச் சம்பளச் சபையொன்று தத்துவமளிக்கப்பட்டுள்ள அல்லது கேட்டுக்கொள்ளப்பட்டுள்ள ஏதேனும் கருமத்தின் மீது ஏதேனும் முடிபைச் செய்யும் அல்லது ஏதேனும் அறிக்கையைக் கொடுத்துதவும் நோக்கத்துக்காக, சம்பளச் சபையொன்று, அது அவசியமெனக் கருதக்கூடியவாறுன அத்தகைய விசாரணையை நடாத்தலாம்.

(2) முதலாம் உட்பிரிவின் கீழான விசாரணைகளை நடாத்தும் நோக்கத்துக்காக, சம்பளச் சபையொன்றன் தவிசாளர், எவரேனுமாளின் வருகையை வலுக்கட்டாயப்படுத்துவதற்கும், அவரைச் சத்தியத்தின்மீது விசாரணை செய்வதற்கும் ஏதேனும் இயைபான ஆவணத்தைக் காண்பிப்பதனை வலுக்கட்டாயப்படுத்துவதற்கும் மாவட்ட நீதிமன்றமொன்றுக்குள்ள அதே தத்துவங்களை உடையவராதல் வேண்டும்; அத்துடன் மேற்கூறப்பட்ட கருமங்கள் தொடர்பில் குடியியல் நீதிமன்றமொன்றுக்குள்ள தத்துவங்கள் தொடர்பான குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(3) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ளதெதுவும், எவரேனுமாள் ஏதேனும் தகவலை வெளியிடுதல் அல்லது ஏதேனும் ஆவணத்தைக் காண்பித்தல், இக்கட்டளைச் சட்டம் தவிர்ந்த வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடு

களினால் அல்லது ஏற்பாடுகளின் கீழ் தடைசெய்யப்பட்டுள்ள ஏதேனும் விடயத்தில் அவ்வாள் அத்தகைய தகவலை வெளியிடுவதற்கு அல்லது அத்தகைய ஆவணத்தைக் காண்பிப்பதற்கு கேட்டுக்கொள்ளப்படுவதாக அல்லது அனுமதிப்பதாகக் கருதப்படுதலாகாது.

17. (1) சம்பளச் சபையொன்றினால் 16ஆம் பிரிவின் கீழ் நடாத்தப்பட்ட ஏதேனும் விசாரணையில் அல்லது இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் சம்பளச் சபையொன்றன் முன்னரான வேறெவையேனும் நடவடிக்கைகளில் எவரேனுமாளினால் ஏதேனும் தகவல் கொடுக்கப்பட்டு அல்லது ஏதேனும் ஆவணம் காண்பிக்கப்பட்டு, அத்தகைய தகவல் அல்லது ஆவணம் அல்லது அத்தகைய ஆவணத்தின் உள்ளீடுகள் அந்தரங்கமானதாகக் கொள்ளப்படுதல் வேண்டுமென அவர்களினால் அல்லது அவரது சார்பில் வேண்டுகோளொன்று விடுக்கப்படுமிடத்து, சபைத் தவிசாளர், அத்தகைய தகவல் அல்லது ஆவணம் அந்தரங்கமானதாகக் கொள்ளப்படுதல் வேண்டுமெனக் கட்டளையிடுதல் வேண்டும்.

*சம்பளச் சபை முன்னரான நடவடிக்கைகளின் கொடுக்கப்பட்ட தகவல் குறித்த சில விடயங்களில் அந்தரங்கமானதாகக் கொள்ளப்படுதல்.*

(2) சம்பளச் சபை உறுப்பினரெவரும் அல்லது சம்பளச் சபை முன்னரான எவையேனும் நடவடிக்கைகளில் சமூகமாயிருக்கும் அல்லது சம்பந்தப்பட்டுள்ளவராயிருக்கும் வேறுள், (1)ஆம் உட்பிரிவின் கீழ் எத்தகவல் அல்லது ஆவணம் தொடர்பில் கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளதோ அத்தகவலை அல்லது ஆவணத்தை அல்லது அத்தகைய ஏதேனும் ஆவணத்தின் உள்ளீடுகளை, அத்தகைய கட்டளை எந்தத் திறத்தவரின் வேண்டுகோளின்பேரில் ஆக்கப்பட்டதோ அந்தத் திறத்தவரின் எழுத்திலான சம்மதத்துடனன்றி, எவ்வகையிலேனும் வெளிவிடுதலாகாது.

## மாவட்டச் சபைகள் குழுக்கள்

18. (1) ஏதேனும் தொழிலுக்காகத் தாபிக்கப்பட்ட சம்பளச் சபையொன்று, அமைச்சரின் அங்கீகாரத்தோடும் ஒழுங்குவிதிகளுக்கிணங்கவும், இலங்கையில் ஏதேனும் இடப்பரப்பில் அல்லது மாவட்டத்தில் அத்தொழிலுக்காக மாவட்டச் சம்பளக் குழுவொன்றைத் தாபிக்கலாம்.

*மாவட்டச் சம்பளக் குழுக்கள்.*

(2) ஒவ்வொரு மாவட்டச் சம்பளக் குழுவும் பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) அத்தகைய சம்பளச் சபை தீர்மானிக்கக்கூடியவாறு அச்சபையின் அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்கள்; ஆனால் எவ்வாறாயினும், தொழில்தருநர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் வேலையாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் சமமாகவிருத்தல் வேண்டும்.

(ஆ) குழுவானது எந்த இடப்பரப்புக்கென அமைக்கப்பட்டதோ அந்த இடப்பரப்பில் அத்தகைய சம்பளச் சபை தீர்மானிக்கக்கூடியவாறு தொழில்தருநர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கென அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்களும், அத்தகைய இடப்பரப்பில் வேலையாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கென சம எண்ணிக்கையினரான உறுப்பினர்களும்; அத்துடன்

(இ) ஆணையாளர், அல்லது அவர் இல்லாதபோது பிரதி ஆணையாளரொருவர், அல்லது இருவரும் இல்லாதபோது (அத்தகைய சம்பளச் சபையின் உறுப்பினராகவிராதவரும்) ஆணையாளரினால் பொதுவாக அல்லது விசேடமாக எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்டவருமான வேறெவரேனும் ஆள்.

(3) ஆணையாளர், அல்லது அவர் இல்லாதபோது பிரதி ஆணையாளர், அல்லது இருவரும் இல்லாதபோது (2)ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் கீழ் ஆணையாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாள், மாவட்டச் சம்பளக் குழுவின் எல்லாக் கூட்டங்களிலும் தலைமைதாங்குதல் வேண்டும்.

(4) ஒரு மாவட்டச் சம்பளக் குழுவின் நடவடிக்கைகள், அக்குழுவின் உறுப்பினர் எண்ணிக்கையில் ஏதேனும் வெற்றிடம் இருக்கின்றமையினால் அல்லது எவரேனும் உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருக்கின்றமையினால் செல்லுபடியற்றதாக்கப்படுதலாகாது.

(5) மாவட்டச் சம்பளக் குழுக்களின் உறுப்பினர்களது பதவிக்காலம், அத்தகைய குழுக்களின் உறுப்பாண்மையிலான வெற்றிடங்களை நிரப்புதல், அத்தகைய குழுக்களின் கூட்டங்களில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை, அத்துடன் அத்தகைய குழுக்களினால் ஆக்கப்படும் அறிக்கைகளின் படிவமும் முறையும் என்பன தொடர்பில் ஒழுங்கு விதிகள் ஆக்கப்படலாம். ஆனால் இக்கட்டளைச் சட்டத்தினதும், அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதியினதும் ஏற்பாடுகளுக்கமைய, மாவட்டச் சம்பளக் குழுவொன்று அதன் சொந்த நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தலாம்.

மாவட்டச் சம்பளக் குழுக்களுக்குச் சம்பளச் சபையினால் கருமங்கள் ஆற்றுப்படுத்தப் படுதல்.

19. எந்தக் கருமம் தொடர்பாக ஏதேனும் முடிவைச் செய்வதற்குச் சம்பளச் சபையொன்று தத்துவமளிக்கப்படுகின்றதோ அல்லது கேட்டுக்கொள்ளப்படுகின்றதோ அந்தக் கருமம் எதனையும் அச்சபையினால் அமைக்கப்பட்ட ஏதேனும் மாவட்டச் சம்பளக் குழுவுக்குச் சபையானது ஆற்றுப்படுத்தலாமென்பதுடன், அக்குழுவானது, அவ்வாறு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமத்தைச் சீர்தூக்கிப் பார்த்து அத்தகைய கருமத்தின் மீது அதன் அறிக்கையைச் சபைக்குக் கொடுத்துதவுதலும் வேண்டும்.

20. (1) சம்பளச் சபையொவ்வொன்றும் எந்தத் தொழிலுக்காகத் தாபிக்கப்படுகின்றதோ அந்தத் தொழில் தொடர்பில், அஙு. (5)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, (இதனகத்துப் பின்னர் " ஆகக்குறைந்த பொதுநேர வீதம் " எனக் குறிப்பீடு செய்யப்படும்) நேர வேலைக்கான ஆகக்குறைந்த சம்பளவீதத்தைத் தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன், பின்வரும் சம்பள வீதங்களுள் எல்லாவற்றையுமோ அல்லது ஒன்றையோ அல்லது ஒன்றுக்கு அதிகமானவற்றையோ தீர்மானிக்கலாம் :— ஆகக்குறைந்த சம்பள வீதங்கள்

(அ) (இதனகத்துப் பின்னர் " ஆகக்குறைந்த பொதுத் துண்டு வீதம் " எனக் குறிப்பீடு செய்யப்படும்) துண்டு வேலைக்கான ஆகக்குறைந்த சம்பள வீதம் ;

(ஆ) துண்டு வேலைக்கென ஊழியத்துக்கமர்த்தப்பட்ட வேலையாளர்களுக்கு (இதனகத்துப் பின்னர் " உத்தரவாதமளிக்கப்பட்ட நேரவீதம் " எனக் குறிப்பீடு செய்யப்படும்) நேர வேலை அடிப்படையில் ஆகக்குறைந்த ஊதிய வீதத்தை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காக அத்தகைய வேலையாளர்களின் விடயத்தில் ஏற்புடையதாக வேண்டிய ஆகக்குறைந்த நேரவீதம் :

(இ) (இதனகத்துப் பின்னர் " மேலதிகநேர வீதம் " எனக் குறிப்பீடு செய்யப்படும்) வேலையாளர்களினால் செய்யப்பட்ட மேலதிகநேர வேலை தொடர்பில், வேறுவகையாக ஏற்புடையதாகவிருந்திருக்கும் ஆகக்குறைந்த வீதத்துக்குப் பதிலாக ஏற்புடையதாக வேண்டிய (நேர வீதமாயினுஞ்சரி துண்டு வீதமாயினுஞ்சரி) ஆகக்குறைந்த வீதம் ;

(2) (அ) ஏதேனும் தொழில்தொடர்பில் (1)ஆம் உட்பிரிவின் கீழ் சம்பளச் சபையொன்றன் முடிபு எதிலும் தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் ஆகக்குறைந்த சம்பளவீதம் பின்வருவனவற்றைக் கொண்டிருக்கலாம் :

(i) அடிப்படை வீதமொன்று; அத்துடன்

(ii) அத்தொழிலிலுள்ள வேலையாளர்களுக்கு ஏற்புடையதான வாழ்க்கைச் செலவுச் சுட்டெண்ணிலான வேறுபாட்டுடன் செயல்முறைக்குகந்தவரை இணங்கும் வகையில், சம்பளச் சபை அத்தகைய பணிப்பில் பணிக்கக்கூடியவாறான அத்தகைய முறையிலும் சரிக்கட்டப்பட வேண்டிய ஒருவீதத்திலான விசேட படியொன்று ;

ஆயின், எவ்வாறாயினும், சம்பளச் சபையொன்று, வீதமானது எந்த முடிபினால் தீர்மானிக்கப்படுகின்றதோ அந்த முடிபில், அத்தகைய ஏதேனும் சரிக்கட்டுதல் அதன்மீது பயனுடையதாக

வேண்டிய அத்தகைய சுட்டெண்ணிலான ஆகக்குறைந்த வேறுபாட்டைச் சம்பளச் சபையொன்று நிர்ணயிக்கலாம்.

(ஆ) சம்பளச் சபையொன்று, ஆகக்குறைந்த வீதமொன்று எந்த முடிபினால் தீர்மானிக்கப்படுகின்றதோ அந்த ஏதேனும் முடிபில், (அ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட விசேட படி முடிபில் அத்தகைய சபையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய இடைவெளிகளிலும் கொடுபடக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்கிணங்கவும் ஆணையாளரினால் கணிக்கப்படுதல் வேண்டும் என்று பணிக்கலாம், அத்துடன் அத்தகைய ஒவ்வொரு விடயத்திலும் ஆணையாளர் அத்தகைய விசேட படியை அத்தகைய பணிப்புகளுக்கிணங்கக் கணித்தலும், அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட கால இடைவெளிகளில் வர்த்தகமானியிலான அறிவிப்பின் மூலம் அதனை வெளியிடுதலும் வேண்டும்.

(இ) எந்நேரத்திலேனும் எத்தொழிலின் விடயத்திலும் ஏற்புடையதான ஆகக்குறைந்த சம்பளவீதம், அந்த நேரத்தில் வலுவிலிருந்த, பந்தி அ (I)இல் குறிப்பீடுசெய்யப்பட்ட அடிப்படை வீதத்தினதும் பந்தி அ (II)இல் குறிப்பீடு செய்யப்பட்ட விசேட படியினதும் கூட்டுமொத்தமாக இருத்தல் வேண்டும், அல்லது பந்தி (ஆ)வின் கீழ் ஆணையாளர் அத்தகைய படியை அறிவித்து இருக்குமிடத்து, அந்நேரத்தில் வலுவிலுள்ள அத்தகைய அடிப்படை வீதத்தினதும் அவ்வாறு அறிவிக்கப்பட்ட விசேட படியினதும் கூட்டுமொத்தமாக இருத்தல் வேண்டும்.

(ஈ) இவ்வுட்பிரிவில் " தகுதிவாய்ந்த அதிகாரி " என்பது வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்ட தொழிலில் ஊழியத்துக்கமர்த்தப்பட்ட வேலையாளருக்கு ஏற்புடையதான வாழ்க்கைச் செலவுச் சுட்டெண்ணைக் காலத்துக்குக் காலம் நிச்சயிப்பதற்கென அத்தகைய அறிவிப்பின் மூலம் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட அதிகாரி என்று பொருளாகும் ;

" வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் " என்பது, ஏதேனும் தொழிலிலுள்ள வேலையாளர்கள் தொடர்பாக, அத்தொழிலிலுள்ள வேலையாளர்களுக்கு ஏற்புடையதான வாழ்க்கைச் செலவுச் சுட்டெண்ணாக உள்ளதெனத் தகுதிவாய்ந்த அதிகாரியினால் வர்த்தகமானியிலான அறிவிப்பின் மூலம் நிச்சயிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்ட சுட்டெண் என்று பொருளாகும்.

(பிரிவு 4, 1978இன் 10). (3) சம்பளச் சபையொன்று தாபிக்கப்படும் தேதியிலிருந்து ஓராண்டுக் காலப்பகுதி முடிவுறுமுன்னர் அச்சபையானது, (1)ஆம் உட்பிரிவினால் கேட்டுக்கொள்ளப்பட்டவாறு ஆகக்குறைந்த பொது நேரவீதமொன்றைத் தீர்மானிப்பதற்கு எவ்விடயத்திலேனும் இயலாதுள்ளவிடத்து, சபையானது அந் அந்நிகழ்வை அமைச்சருக்கு அறிக்கைசெய்தல் வேண்டு

மெனப்படுமுன், அமைச்சர் அவ்விடயம் தொடர்பிலான அளவு வரை, அத்தகைய வீதத்தைத் தீர்மானிப்பதிலிருந்து அச்சபைக்கு விலக்களித்து, 33ஆம் பிரிவின் கீழான கட்டளையை ஆக்கலாம்.

21. எம்முடிபின் மூலம் ஏதேனும் தொழிலுக்கான ஆகக்குறைந்த சம்பளவீதம் தீர்மானிக்கப்படுகின்றதோ, அம்முடிபு எதுவும் வலுவுக்கு வந்துள்ளவிடத்து, தொழில்தருநர் ஒவ்வொருவரும், அத்தகைய ஆகக்குறைந்த வீதம் எவ்வேலையாளருக்கு ஏற்புடையதாகவுள்ளதோ அவ்வேலையாளர் ஒவ்வொருவருக்கும் அத்தகைய ஆகக்குறைந்த வீதத்துக்குக் குறையாத சம்பளத்தைச் செலுத்துதல் வேண்டும் :

ஆகக்குறைந்த சம்பளத்தைச் செலுத்துவதற்குத் தொழில்தருநருக்குள்ள பொறுப்பு.

ஆயின், எவ்வாறுயினும், எவரேனும் தொழில்தருநர் தொடர்பில் அத்தகைய ஏதேனும் முடிபு வலுவுக்குவருகின்ற தேதி, அத்தொழில்தருநரினால் எச்சம்பளக் காலப்பகுதிக்குச் சம்பளம் செலுத்த வேண்டியதாகவுள்ளதோ அச்சம்பளக் காலப்பகுதியின் தொடக்கத்துடன் நேரொத்ததாகவிராதவிடத்து, அம்முடிபில் தீர்மானிக்கப்பட்ட வீதங்கள், அத்தொழில்தருநர் தொடர்பில், மேற்கூறப்பட்ட தேதியை அடுத்துவரும் அடுத்த சம்பளக்காலப் பகுதியில் தொடக்கத்திலிருந்து பயனுறுவதாதல் வேண்டும்.

22. (1) எந்தத் தொழிலுக்கெனச் சம்பளச் சபையொன்று தாபிக்கப்பட்டுள்ளதோ அந்தத் தொழிலில் ஊழியத்துக் கமர்த்தப்பட்டுள்ளவரும், அச்சபையினால் தீர்மானிக்கப்பட்ட மணித்தியால அல்லது நாளாந்த வீதத்தில் சம்பளம் செலுத்தப் படுகின்றவருமான வேலையாளரொருவர், வழமையான வேலை நாளொன்றுக்கமைகின்ற மணித்தியாலங்களின் எண்ணிக்கைக்குக் குறைவாக (அவர் வேலைசெய்வதற்குக் கேட்டுக்கொள்ளப்படும் விடுமுறைநாள் உட்பட) ஏதேனும் நாளில் வேலைசெய்யுமிடத்து, அவர், வழமையான வேலைநாளுக்கு வேலை செய்யத் தவறியமை அவர் வேலைசெய்ய விரும்பாமை காரணமாகவும் அல்லது அச்சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய வேறு சூழ்நிலைகள் காரணமாகவும், தொழில்தருநர் அவருக்கு வேலையை ஏற்பாடு செய்து கொடுக்காதுவிட்டமை காரணமாகவல்லாதும் இருந்தாலொழிய, முழு வழமையான வேலைநாளுக்கும் வேலை செய்துள்ளவராகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அவரது சம்பளம் அதற்கிணங்கக் கணிக்கப்படுதலும் வேண்டும்.

வழமையான வேலை நாளுக்குக் குறைவாக வேலை செய்கின்ற அல்லது ஏதேனும் நாளன்று எவ்விதமான வேலையும் செய்யாத வேலையாளருக்கான சம்பளம்.

அத்தகைய விரும்பாமை காரணமாகவும் அல்லது அத்தகைய சூழ்நிலைகள் காரணமாகவும், அத்தகைய விட்டுவிடுகை காரணமாகவல்லாதும், ஏதேனும் நாளன்று வழமையான வேலை மணித்தியாலங்களின் எண்ணிக்கைக்குக் குறைவானவொரு காலப்பகுதிக்கு அவர் அந்நாளன்று வேலைசெய்யுமிடத்து, அவரது தொழில்தருநர் அக்காலப்பகுதிக்கான ஊதியமாக, அக்காலப்பகுதியானது வழமையான வேலை மணித்தியாலங்களின் எண்ணிக்கைக்கு என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அதே விகிதாசாரம் வழமையான வேலை மணித்தியாலங்களின்

அந்த எண்ணிக்கைக்கு அவர் வேலை செய்திருப்பின் அவருக்குச் செலுத்தப்படற்பாலதான ஊதியத்தொகைக்குக் கொண்டுள்ள அக்காலப்பகுதிக்குப் பணத்தொகையொன்றைச் செலுத்துதல் வேண்டும்.

(2) எத்தொழிலுக்கெனச் சம்பளச் சபையொன்று தாபிக்கப்பட்டுள்ளதோ அத்தொழிலில் ஊழியத்துக்கமர்த்தப்பட்டவரும், அச்சபையினால் தீர்மானிக்கப்பட்ட வாராந்த அல்லது மாதாந்த வீதத்தில் சம்பளம் செலுத்தப்பட்டவருமான வேலையாளரொருவர், ஏதேனும் நாளில் எவ்விதமான வேலையும் செய்யாதவிடத்து அல்லது ஏதேனும் நாளின் வழமையான வேலை மணித்தியாலங்களின் எண்ணிக்கைக்குக் குறைவாக (அவர் வேலை செய்வதற்குக் கேட்டுக்கொள்ளப்படும் விடுமுறைநாள் உட்பட) அந்நாளில் வேலைசெய்யுமிடத்து, அவர் அந்நாளன்று எவ்விதமான வேலையும் செய்யத் தவறியமை அல்லது முழு வழமையான வேலை நாளுக்கும் வேலைசெய்யத் தவறியமை அவர் வேலை செய்ய விரும்பாமை காரணமாகவும் அல்லது அச்சபை தீர்மானிக்கக்கூடிய வாறான அத்தகைய வேறு சூழ்நிலைகள் காரணமாகவும், தொழில்தருநர் அவருக்கு வேலையை ஏற்பாடு செய்து கொடுக்காது விட்டமை காரணமாகவல்லாதும் இருந்தாலொழிய, முழு வழமையான வேலை நாளுக்கும் வேலைசெய்துள்ளவராகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், அவரது சம்பளம் அதற்கிணங்கக் கணிக்கப்படுதலும் வேண்டும்.

(பிரிவு 5 (ஆ) 1957இன் 27) அத்தகைய விரும்பாமை காரணமாகவும் அல்லது அத்தகைய சூழ்நிலைகள் காரணமாகவும் அத்தகைய விட்டுவிடுகை காரணமாகவல்லாதும், ஏதேனும் நாளின் வழமையான வேலை மணித்தியாலங்களுக்குக் குறைவான காலப்பகுதியொன்றுக்கு அந்நாளில் அவர் வேலைசெய்யுமிடத்து, அவரது தொழில்தருநர் —

(அ) அவருக்கு வாராந்த வீதத்தில் சம்பளம் செலுத்தப்படின் அக்காலப்பகுதி ஒரு வாரத்தின் வழமையான வேலைசெய்யும் மணித்தியாலங்களின் மொத்த எண்ணிக்கைக்கு என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அதே விகிதாசாரத்தை அந்த வாராந்த வீதத்துக்குக் கொண்டுள்ள பணத்தொகையொன்றை அக்காலப்பகுதிக்கான ஊதியமாகச் செலுத்துதல் வேண்டும்; அல்லது

(ஆ) அவருக்கு மாதாந்த வீதத்தில் சம்பளம் செலுத்தப்படின், அக்காலப்பகுதி எந்த மாதத்தின் ஒரு பாகமாகவமைகின்றதோ அந்த மாதத்திலுள்ள வழமையான வேலை மணித்தியாலங்களின் மொத்த எண்ணிக்கைக்கு அக்காலப்பகுதி என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அதே விகிதாசாரத்தை அந்த மாதாந்த வீதத்துக்குக் கொண்டுள்ள பணத்தொகையொன்றை அக்காலப்பகுதிக்கான ஊதியமாகச் செலுத்துதல் வேண்டும்.

சம்பளம் செலுத்தப்பட வேண்டிய கால இடைவெளிகள்.

23. (1) சம்பளச்சபை எதுவும், அது எத்தொழிலுக்காகத் தாபிக்கப்பட்டுள்ளதோ அத்தொழில் தொடர்பில், எந்த வேலைக் காலப்பகுதி தொடர்பில் வேலையாளர்களுக்குச் சம்பளம் செலுத்தப்பட வேண்டுமோ அந்த வேலைக்காலப்பகுதியை (அது எவ் விடயத்திலும் ஒருமாதத்தை விஞ்சுதலாகாது) தீர்மானிக்கலா மென்பதுடன், அத்தகைய காலப்பகுதியின் முடிவிலிருந்து எத்தனை நாட்களுக்குள் சம்பளம் அவ்வாறு செலுத்தப்பட வேண்டுமோ அத்தனை நாட்களின் எண்ணிக்கையைக் குறித்துரைக்கலாம்.

(2) முதலாம் உட்பிரிவில் அல்லது அதன்கீழான ஏதேனும் முடிபில் உள்ளதெதுவும், ஏதேனும் ஒப்பந்தத்தை முடிவுறுத்தற்காக இக்கட்டளைச் சட்டம் தவிர்ந்த வேறு எழுத்திலான சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின் கீழ் அவசியமான அறிவித்தற் காலப்பகுதியை அல்லது எச்சரிக்கைக் காலப் பகுதியை எவ்வகையிலேனும் பாதித்தலாகாது.

வேலை மணித்தியாலங்களும் வாராந்த விடுமுறை நாளும்

24. (1) சம்பளச்சபையெதுவும், அது எத்தொழிலுக்காகத் தாபிக்கப்படுகின்றதோ அத்தொழில்தொடர்பில் —

(அ) இரண்டாம், (3)ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக் கமைய, வழமையான வேலை நாளொன்றின் விடயத்தில் உணவுக்கான அல்லது ஓய்வுக்கான கால இடைவெளி அல்லது கால இடைவெளிகள் உட்பட, வழமையான வேலை நாளொன்றுகவமையும் அல்லது வழமையான வேலை வாரமொன்றுகவமையும் மணித்தியாலங்களின் எண்ணிக்கையை நிர்ணயிக்கலாம் என்பதுடன், ஒரு வழமையான வேலைமாதமாக அமைகின்ற வழமையான வேலைநாட்களின் எண்ணிக்கையையும் அந்நாட்களுள் ஒவ்வொன்றுகவமைகின்ற மணித்தியாலங்களின் எண்ணிக்கையையும் தீர்மானிப்பதன்மூலம் அம்மாதமாகவமைகின்ற மணித்தியாலங்களின் எண்ணிக்கையை நிர்ணயிக்கலாம் ;

(ஆ) வேலைநாளொன்றில் உணவுக்கான அல்லது ஓய்வுக்கான காலஇடைவெளிகளின் எண்ணிக்கையையும் கால எல்லையையும் தீர்மானிக்கலாம்; பிரதானமாக உணவுகளின் நோக்கங்களுக்காக அனுமதிக்கப்பட்ட காலஇடைவெளி ஒரு மணித்தியாலத்துக்குக் குறையவிருத்தலாகாது;

(இ) ஒவ்வொரு வாரத்திலும் ஒருநாள் எல்லா வேலையாளர்களுக்கும் அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வகுப்பினரான வேலையாளர்களுக்கு விடுமுறை நாளாகத் தொழில்தருநரினால் அனுமதிக்கப்படுதல் வேண்டுமென்றும், அத்தகைய விடுமுறைநாள் தொடர்பில் வேலையாளர்

களுக்கு என்ன ஊதியம் (ஏதேனுமிருப்பின்) செலுத்தப்படவேண்டுமென்றும், அத்தகைய விடுமுறைநாள் எந் நிபந்தனைகளுக்கமைய (எவையேனுமிருப்பின்) அனுமதிக்கப்படவேண்டுமென்றும் வெளிப்படுத்தலாம் ;

15.11.1971 ன் 14984/44 ஆம் இலக்க வர்த்தமானி

(ஈ) அத்தகைய ஏதேனும் விடுமுறைநாளன்று வேலையாளர்கள் எந்த நிபந்தனைகளுக்கமைய ஊழியத்துக்கமர்த்தப்படலாமோ அந்த நிபந்தனைகளைத் தீர்மானிக்கலாம்; ஆனால், எவ்வாறாயினும், அத்தகைய நிபந்தனைகள், மேலதிகநேர வீதத்துக்குக் குறையாத ஒரு வீதத்தில்; அல்லது, மேலதிகநேரவீதமெதுவும் தீர்மானிக்கப்பட்டிராவிடின், அத்தகைய வேலைக்கு வழமையாக ஏற்புடையதாகவுள்ள வீதத்தில் ஒன்றேகால் மடங்கில் அத்தகைய வேலைக்கான ஊதியக்கொடுப்பனவையும் அத்தகைய நாளை அடுத்துப் பின்வரும் குறித்துரைக்கப்பட்ட எண்ணிக்கையினவான நாட்களினுள் ஒரு நாளன்று ஊதியத்துடனோ ஊதியமின்றியோ விடுமுறைநாளொன்று வழங்குவதனையும் அல்லது ஏதேனும் விசேட வகுப்பினரான வேலையாளர்களின் விடயத்தில் பதில் விடுமுறை நாளொன்று வழங்காமல், அத்தகைய வேலைக்கு வழமையாக ஏற்புடையதாகவுள்ள வீதத்தின் ஒன்றரை மடங்குக்குக் குறையாத ஒருவீதத்தில் அத்தகைய வேலைக்கான ஊதியக்கொடுப்பு பனவையும் உள்ளடக்குதல் வேண்டும்.

(பிரிவு 6, 1957இன் 27).

(1) (அ) முதலாம் உட்பிரிவின் பந்தி (இ)இன் கீழ் அல்லது பந்தி (ஈ)இன் கீழ் விடுமுறைநாளொன்று தீர்மானிக்கப்படுமிடத்து,

(அ) அத்தீர்மானம் ஏற்புடையதாகவுள்ள ஒவ்வொரு வேலையாளரும், அத்தீர்மானத்தின் நியதிகளுக்கிணங்க அத்தகைய விடுமுறைநாளை எடுப்பதற்கு உரித்துடையவராயிருத்தலும் அதனை எடுத்தலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) அத்தகைய ஒவ்வொரு வேலையாளரினதும் தொழில்தருநர், அத்தீர்மானத்தின் நியதிகளுக்கிணங்க அத்தகைய விடுமுறைநாளை அனுமதித்தலும் அது தொடர்பில் ஊதியம் செலுத்துவதற்கு ஆளாதலும் வேண்டும்.

(2) சம்பளச் சபையொன்று எத்தொழிலுக்காகத் தாபிக்கப்பட்டுள்ளதோ அத்தொழில் தொடர்பில் சம்பளச் சபையினால் நிர்ணயிக்கப்பட்ட வழமையான வேலைநாளொன்றாகவமைகின்ற மணித்தியாலங்களின் எண்ணிக்கை —

9 hours

(அ) அத்தகைய நாளன்று உணவுக்காக அல்லது ஓய்வுக்காக அச்சபையினால் குறித்துரைக்கப்பட்ட கால இடைவெளியின் அல்லது கால இடைவெளிகளின் காலஎல்லை ஒரு மணித்தியாலத்தை விஞ்சாதவிடத்து, ஒன்பதுக்கு அதிகமானதாதல் ஆகாது, அத்துடன்

(ஆ) அத்தகைய காலஎல்லை ஒரு மணித்தியாலத்தை விஞ்சு மிடத்து, ஒன்பது மணித்தியாலங்களினதும் அத்தகைய காலஎல்லை எக்காலப்பகுதியினுல் ஒரு மணித்தியாலத்தை விஞ்சுகின்றதோ அக்காலப்பகுதியினதும் கூட்டுமொத்தத் துக்கு அதிகமானதாதல் ஆகாது, அல்லது அத்தகைய கூட்டுமொத்தம் பன்னிரண்டு மணித்தியாலங்களை விஞ்சு மாயின், பன்னிரண்டு மணித்தியாலங்களுக்கு அதிகமான தாதல் ஆகாது :

ஆயின், எவ்வாறுயினும், சம்பளச் சபையொன்று அச்சபை எத்தொழிலுக்காகத் தாபிக்கப்பட்டதோ அத்தொழிலில் உள்ள ஏதேனும் விசேட வகுப்பினரான வேலையாளர்களினுற் புரியப் பட்ட வேலையின் தன்மையைக் கவனத்துட்கொடுத்து, அவ்வகுப் பினரான வேலையாளர்கள் தொடர்பில் வழமையான வேலை நாளொன்ருகவமைகின்ற மணித்தியாலங்களின் எண்ணிக்கையை, அச்சபை தகுதியெனக் கருதுகின்றவாருகப் பன்னிரெண்டை விஞ்சுகின்ற அத்தகைய எண்ணிக்கையாகவுள்ளதென நிர்ணயிக்க லாம்.

(3) வழமையான வேலைவாரமாகவமைகின்ற வேலை மணித்தியாலங்களின் எண்ணிக்கை நாற்பத்தியெட்டை விஞ்சுத லாகாது.

(4) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, சம்பளச் சபையொன்று அது எத்தொழிலுக்காகத் தாபிக்கப் பட்டுள்ளதோ அத்தொழில் தொடர்பில் வழமையான வேலை நாளொன்ருகவமைகின்ற மணித்தியாலங்களின் எண்ணிக்கையை, வாரத்தின் வெவ்வேறு நாட்களுக்கு வெவ்வேருகவும், அத்தகைய தொழிலிலுள்ள வெவ்வேறு வகுப்பினரான வேலையாளர்களுக்கு வெவ்வேருகவும், அத்தகைய தொழில் கொண்டு நடாத்தப்படும் வெவ்வேறு இடப்பரப்புகளுக்கு வெவ்வேருகவும் நிர்ணயிக்கலாம். 1971இன் 1ஆம் இலக்க விடுமுறை நாட்கள் ஒழுங்கு விதிகள்

(5) சம்பளச் சபையொன்று எத்தொழிலுக்காகத் தாபிக்கப்பட்டுள்ளதோ அத்தொழில் தொடர்பில் அச்சபை யினுல் நிர்ணயிக்கப்பட்ட வழமையான வேலைநாளொன்ருகவமை கின்ற காலப்பகுதி, அச்சபை வேறுவகையாக முடிவுசெய்தா லொழிய தொடர்ச்சியான காலப்பகுதியொன்ருதல் வேண்டும். அத்தகைய காலப்பகுதி ஒரு தொடர்ச்சியான காலப்பகுதியாக இருக்கவேண்டியதில்லையென அச்சபை முடிவுசெய்யுமிடத்து அத்தகைய தொழிலிலுள்ள வேலையாளர்களின் தொழில்தருநர் ஒவ்வொருவரும், பன்னிரெண்டு மணித்தியாலங்களை அல்லது அச் சபை தீர்மானிக்கக்கூடியவாருன அத்தகைய குறைந்த எண் ணிக்கையினவான மணித்தியாலங்களை விஞ்சுகின்ற ஒரு காலத் துக்குப் பரந்திருக்காத வகையில் அக்காலப்பகுதியை ஒழுங்கு படுத்துதல் வேண்டும் : ஒழுங்கு விதிகள் 15-11-1971 இன் 14,984 44ஆம் இலக்க வர்த்தமானி

ஆயின், எவ்வாருயினும், இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற் ஏற்பாடுகள், (2)ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தின் கீழ்

சம்பளச் சபையொன்றினால் நிர்ணயிக்கப்பட்ட வழமையான வேலைநாளொன்றாக அமைகின்ற காலப்பகுதி தொடர்பாக ஏற்புடையனவாதலாகாது.

(6) பிரதான உணவின் நோக்கங்களுக்கென எவரேனும் வேலையாளர்களுக்கு அனுமதிக்கப்பட்ட காலஇடைவெளி, அக் கால இடைவெளி எவ்வேலைநாளன்று ஏற்படுகின்றதோ அவ் வேலைநாளாக அமைகின்ற மணித்தியாலங்களின் எண்ணிக்கையின் மூன்றும் மணித்தியாலத்துக்கு பின்னரும் இறுதி மணித்தியாலத்துக்கு முன்னரும் எந்நேரத்திலும் தொடங்குதல் வேண்டும்.

Lunch.

ஆண்டு விடுமுறை நாட்கள், பிரிவு 7 (அ). 1957இன் 27.

25. (1) சம்பளச் சபையொன்று, அது தாபிக்கப்பட்ட தொழில் தொடர்பில் —

Leave

(அ) இவ்வுட்பிரிவின் (ஆ), (இ) என்னும் பந்திகளின் கீழ் அச்சபையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அல்லது தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கும் அத்தகைய ஊதியத்தைக் கொடுப்பனவு செய்வதற்கும் அமைய, அச்சபை குறித்துரைக்கக்கூடியவாறான ஒழுங்கை விஞ்சாத, விடுமுறைநாட்கள் கட்டளைச் சட்டத்தின் கீழான அத்தகைய பகிரங்க விடுமுறை நாட்கள் உட்பட, அச்சபை தீர்மானிக்கக்கூடியவாறான முப்பதை விஞ்சாத அத்தகைய எண்ணிக்கையிலான நாட்கள், 24ஆம் பிரிவின் கீழான விடுமுறை நாட்களுடன் சேர்த்து மேலதிகமாக, எல்லா வேலையாளர்களுக்கும் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வகுப்பினரான வேலையாளர்களுக்கு ஒவ்வோராண்டிலும் விடுமுறைநாட்களாகத் தொழில்தருநர் ஒவ்வொருவரினாலும் அனுமதிக்கப்படல் வேண்டுமென வெளிப்படுத்தலாம்.

(ஆ) அத்தகைய எவையேனும் மேலதிக விடுமுறை நாட்கள் எந்நிபந்தனைகளுக்கமைய அனுமதிக்கப்படல் வேண்டுமெனக் குறித்துரைக்கலாம், அத்துடன்

(இ) அத்தகைய மேலதிக விடுமுறை நாட்கள் தொடர்பில் என்ன ஊதியம் (ஏதேனுமிருப்பின்) வேலையாளர்களுக்குச் செலுத்தப்படவேண்டுமென்பதையும், அத்தகைய ஊதியம் எந்நிபந்தனைகளுக்கமைய (எவையேனுமிருப்பின் செலுத்தப்படவேண்டுமென்பதையும், அத்துடன் இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் அச்சபையினால் குறித்துரைக்கப்பட்ட பகிரங்க விடுமுறை நாட்களுள் ஏதேனுமொன்றில் எந்நிபந்தனைகளுக்கமைய (எவையேனுமிருப்பின்) வேலையாளரொருவர் ஊழியத்துக்கமர்த்தப்படலாமென்பதையும் தீர்மானிக்கலாம்.

(2) முதலாம் உட்பிரிவின் கீழான ஏதேனும் முடிபு செய்யப்பட்டுள்ளவிடத்து, அப்பொழுது, (3)ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, —

(அ) அத்தகைய முடிபு எவ்வேலையாளருக்கு ஏற்புடைய தானதோ அவ்வேலையாளர் ஒவ்வொருவரும், அத்தகைய முடிபின் நியதிகளுக்கிணங்க விடுமுறைநாளொன்றை அல் லது விடுமுறை நாட்களை எடுப்பதற்கு உரித்துடையவராத லும் அதனை அல்லது அவற்றை எடுத்தலும் வேண்டும்; அத்துடன்.

(ஆ) அத்தகைய ஒவ்வொரு வேலையாளரினதும் தொழில் தருநர், அத்தகைய முடிபின் நியதிகளுக்கிணங்க அத்த கைய விடுமுறைநாளை அல்லது விடுமுறை நாட்களை அனு மதித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய விடுமுறை நாள் அல்லது விடுமுறை நாட்கள் தொடர்பில் தீர்மானிக் கப்பட்ட ஊதியத்தைச் செலுத்துவதற்கு ஆளாதலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழ் ஏதேனுமாண்டில் விடு முறைநாள் எதற்கும் அல்லது விடுமுறை நாட்கள் எவற்றுக்கும் உரித்துடையவராக வந்துள்ள வேலையாளரொருவரின் ஊழியம் அவ்வேலையாளரின் தொழில் தருநரினால் முடிவுறுத்தப்படுமிடத்து அல்லது அவ்வேலையாளரினால் சட்டமுறையாக முடிவுறுத்தப்படு மிடத்து, அப்பொழுது, அத்தகைய தொழில்தருநர் அவ்வேலை யாளருக்கு அத்தகைய விடுமுறைநாளை அல்லது விடுமுறைநாட் களை அனுமதித்திராவிடின், அவ்வுட்பிரிவின் கீழ் அத்தகைய விடுமுறைநாள் அல்லது விடுமுறைநாட்கள் தொடர்பில் செலுத் தப்படற்பாலதான ஊதியத்தை அவ்வேலையாளருக்கு அல்லது அத்தகைய ஊதியத்தைப் பெறுமுன்னர் அவ்வேலையாளர் இறப் பின் அவ்வேலையாளரின் சட்டப்படியான மரபுரிமையாளர்களுக் குத் தொழில்தருநர் செலுத்துவதற்காளாதல் வேண்டும்.

பிரிவு 7 (இ) 1957 ன் 27

(4) ஏதேனும் தொழிலில் ஊழியத்துக்கமர்த்தப்பட் டுள்ள வேலையாளரொருவர் (2)ஆம் உட்பிரிவின் கீழ் ஏதேனு மாண்டில் விடுமுறைநாள் எதற்கும் அல்லது விடுமுறைநாட்கள் எவற்றுக்கும் உரித்துடையவராக வருமிடத்தும், அத்தகைய விடு முறைநாளை அல்லது விடுமுறைநாட்களை எடுக்காமல் அவ்வாறு ஊழியத்துக்கமர்த்தப்பட்டிருக்கையில் இறக்குமிடத்தும், அவ் வுட்பிரிவின் கீழ் அத்தகைய விடுமுறைநாள் அல்லது விடுமுறை நாட்கள் தொடர்பில் அவ்வேலையாளருக்குச் செலுத்தப்பட்டிருக் கக்கூடியதான அத்தகைய ஊதியத்தை அவ்வேலையாளரின் சட்டப்படியான மரபுரிமையாளர்களுக்குச் செலுத்துவதற்குத் தொழில்தருநர் ஆளாதல் வேண்டும்.

(5) இப்பிரிவில் " ஆண்டு " என்பது இப்பிரிவின் கீழ் சம்பளச் சபையொன்றன் முடிபு எதுவும் தொடர்பாக அச்சபை தீர்மானிக்கக்கூடியவாறு அத்தகைய மாதத்தின் முதலாம்

(பிரிவு 7 (ஈ) 1957இன் 27)

நாளன்று, அல்லது அச்சபை அவ்வாறு தீர்மானிக்காதவிடத்து ஜனவரி முதலாம் நாளன்று தொடங்குகின்ற பன்னிரெண்டு மாதகாலப்பகுதி என்று பொருளாகும்.

விடுமுறை நாட்களின் நோக்கங்களுக்காகச் சேவையைக் கணித்தல்.

26. ஏதேனும் தொழிலில் தொழில்தருநர் மாறுமிடத்து பழைய தொழில்தருநரின் கீழ் அத்தொழிலில் எவரேனும் வேலையாளர் அளித்துள்ள சேவை, சேவை நீட்சியின் பயனைக்கொண்டு ஏதேனும் விடுமுறைநாளுக்கு அவ்வேலையாளரை உரித்துடையவராக்கும் நோக்கத்துக்காக, புதிய தொழில்தருநரின் கீழான சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

விசேட சூழ்நிலைகளுக்கு ஏற்ப வித்தியாசமான சம்பள வீதங்கள் முதலியவற்றைத் தீர்மானித்தல்.

27. சம்பளச் சபையொன்று, இக்கட்டளைச் சட்டத்தின் கீழான முடிபெதனையும் செய்வதில், தொழிலின் குறிப்பிட்ட கிளைகளில் அல்லது குறிப்பிட்ட இடப்பரப்புகளில் நிலவுகின்ற அல்லது குறிப்பிட்ட வகுப்பினரான வேலையாளர்களைப் பாதிக்கின்ற சூழ்நிலைகளைக் கவனத்துட்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் முடிபில், வித்தியாசமான சம்பள வீதங்களை, வேலை மணித்தியாலங்களை அல்லது விடுமுறைநாட்களைத் தீர்மானிக்கலாம், அல்லது அது உசிதமானதெனக் கொள்ளக்கூடியவாறு அத்தகைய சூழ்நிலைகளுக்குகாக அத்தகைய வேறு ஏற்பாட்டைச் செய்யாலாம்.

சம்பளச் சபைகளினால் உத்தேசிக்கப்பட்ட முடிபுகள் வெளியிடப்படுதல்.

28. (1) சம்பளச் சபையொன்று ஒரு முடிவைச் செய்ய உத்தேசிக்குமிடத்து, உத்தேசிக்கப்பட்ட முடிவை வர்த்தமானியிலும், ஒரு சிங்கள, ஒரு தமிழ், அத்துடன் ஓர் ஆங்கிலச் செய்தித்தாளிலும், உத்தேசிக்கப்பட்ட முடிபுக்கான ஆட்சேபனைகள் எந்தத் தேதியில் அல்லது தேதிக்கு முன்னர் சபையினால் பெற்றுக்கொள்ளப்படுமோ அந்தத் தேதியைக் குறித்துரைக்கின்ற ஓர் அறிவித்தலுடன் சேர்த்து சபையானது வெளியிடச் செய்தல் வேண்டும்.

(2) முதலாம் உட்பிரிவின் கீழான அறிவித்தலின் விளைவாக முன்வைக்கப்பட்ட ஒவ்வோர் ஆட்சேபனையும் எழுத்தில் செய்யப்படுதலும், உத்தேசிக்கப்பட்ட முடிபுக்கெதிராக எந்த ஏதுக்களின் மீது ஆட்சேபனை செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(3) முதலாம் உட்பிரிவின் கீழான அறிவித்தலின் விளைவாக உத்தேசிக்கப்பட்ட முடிபொன்றுக்கெதிராகச் செய்யப்பட்ட எல்லா ஆட்சேபனைகளையும் சம்பளச் சபை சீர்தூக்கிப் பார்த்தல் வேண்டுமென்பதுடன், ஏதேனும் திருத்தத்துடனோ அல்லது திருத்தமின்றியோ அம்முடிபை உறுதிப்படுத்தலாம்.

சம்பளச் சபை முடிபுகள் அமைச்சரால் அங்கீகரிக்கப்படுவதற்கான நடவடிக்கை முறை.

29. (1) பிரிவு 28இன் கீழ் சம்பளச் சபையொன்றினால் செய்யப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட ஒவ்வொரு முடிபும் —

(அ) தவிசாளரினால் ஒப்பமிடப்பட்டுத் தேதியிடப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) முடிபானது எக்கருமத்தோடு தொடர்புடையதோ அக் கருமத்தின் மீது சம்பளச் சபை, மாவட்டச் சம்பளக் குழு அல்லது ஆணையாளர் செய்வதற்கு விரும்பும் ஏதேனும் அறிக்கையுடன் சேர்த்து, ஆணையாளரினூடாக அமைச்சருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) முதலாம் உட்பிரிவின் கீழ் தமக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் முடிபை அமைச்சர் மீளச்சீர்தூக்கிப்பார்ப்பதற்கென சம்பளச் சபையொன்றுக்கு மீண்டும் ஆற்றுப்படுத்தலாமென்பதுடன், அத்தகைய ஒவ்வொரு விடயத்திலும் சம்பளச் சபையானது, முடிபை மீளச்சீர்தூக்கிப்பார்த்து, விரும்பத்தக்கதென அது கொள்ளக்கூடியவாறு அதனை அவ்வாறு திருத்திய பின்னர் முடிபை அமைச்சருக்குத் திருப்பியனுப்புதலும் வேண்டும்.

(3) முதலாம் உட்பிரிவின் கீழ் அமைச்சருக்கு அனுப்பப்பட்ட அல்லது (2)ஆம் உட்பிரிவின் கீழ் அவருக்குத் திருப்பியனுப்பப்பட்ட முடிபெதுவும் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலொழிய, பயனுடையதாதலாகாது. அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள முடிபு ஒவ்வொன்றும் அத்தகைய அங்கீகாரம் பற்றிய அறிவிப்புடன் சேர்த்து வர்த்தமானியிலும் ஒரு சிங்கள, ஒரு தமிழ், அத்துடன் ஓர் ஆங்கிலச் செய்தித்தாளிலும் வெளியிடப்படுதல் வேண்டும்.

(4) அமைச்சரினால் அங்கீகரிக்கப்படும் ஏதேனும் முடிபு, அத்தகைய அங்கீகாரம்பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படும் தேதியன்று அல்லது அத்தகைய அறிவிப்பில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று வலுவுக்கு வருதல் வேண்டும்.

சம்பளச் சபையின் முடிபுகளை நீக்குதல் அல்லது திருத்துதல்.

30. இருபத்தியொன்பதாம் பிரிவின் கீழ் வலுவுக்கு வந்துள்ள சம்பளச் சபையின் ஏதேனும் முடிபு, சபையின் அடுத்துப்பின்னரான முடிபொன்றின் மூலம் எந்நேரத்திலும் நீக்கப்படலாம் அல்லது வேறுபடுத்தப்படலாம் என்பதுடன், 28ஆம், 29ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் அத்தகைய ஒவ்வோர் அடுத்துப் பின்னரான முடிபுக்கும் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

சம்பளச் சபைகளின் முடிபுகள் பற்றியும் எண்பிப்பு.

31. சம்பளச் சபையொன்றன் முடிபையும், அமைச்சரினால் செய்யப்பட்ட அத்தகைய முடிபின் அங்கீகாரம் பற்றியும் அறிவிப்பையும் கொண்டுள்ளதும், அரசாங்க அச்சிட்டாளரினால் அச்சிடப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படுவதுமான வர்த்தமானியிலிருந்து எடுக்கப்பட்ட பொழிப்பொன்று அல்லது தொழில்

ஆணையாளரினால் அல்லது அவரது பிரதிநிதிகளுள் அல்லது உதவி யாளர்களுள் எவரினாலும் உண்மையான பிரதியென அத்தாட்சிப் படுத்தப்பட்டுள்ளதெனக் கொள்ளப்படுகின்ற அத்தகைய முடி பினதும் பிரதியொன்று, அத்தகைய முடிபு, அங்கீகாரம் என்பன வற்றிற்காக எண்பிப்பாக ஏதேனும் நீதிமன்றத்தில் காண்பிக்கப் படலாம்.

இக்கட்டளைச் சட்டம் தவிர்ந்த வேறேதேனும் எழுத்திலான சட்டத்தைப் பொருட்படுத்தாது, சம்பளச் சபையின் முடிபுகள் பயனுடையனவாதல்.

32. இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் சம்பளச் சபையொன்றன் முடிபு ஒவ்வொன்றும், அத்தகைய முடிபு வலுவுக்கு வரும் தேதி யிலிருந்து, (இக்கட்டளைச் சட்டம் தவிர்ந்த) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் எது எப்படியிருப்பினும், அத்துடன் அத்தகைய ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் ஏதேனும் சபையினால் அல்லது எவரேனுமாளினால் புரியப்பட்ட ஏதேனும் செயலை அல்லது செய்யப்பட்ட ஏதேனும் முடிபைப் பொருட் படுத்தாமலும், பயனுடையதாதல் வேண்டும்.

## ஆகக்குறைந்த பொது நேரவீதம் ஆணையாளரினால் தீர்மானிக்கப்படுதல்

குறித்த சில விடயங்களில் பொது நேரவீதம் ஆணையாளரினால் தீர்மானிக்கப் படுதல்.

33. (1) (அ) ஏதேனும் தொழிலுக்கான சம்பளச் சபையின் பிரதிநிதியாக அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப் பினர்களாக நியமிக்கப்படுவதனை ஏற்றுக்கொள்ள எவரேனும் ஆட்கள் மறுத்தமை காரணமாக அல்லது அச்சபையின் பிரதி நிதித்துவ உறுப்பினராக எவரேனுமாள் நியமிக்கப்படுவதனை அங்கீகரிக்க ஏதேனும் தொழிற்சங்கம், கழகம், அல்லது ஒழுங் கமைப்பு தவறியமை காரணமாக, அல்லது வேறேதேனும் காரணத்துக்காக அச்சபையைத் தாபிக்க முடியாதெனின்; அல்லது

(பிரிவு 5, 1978இன் 10).

(ஆ) ஏதேனும் தொழிலுக்காகத் தாபிக்கப்பட்ட சம்பளச் சபை, எக்காரணத்துக்காகவேனும், அச்சபை தாபிக்கப் பட்ட தேதியிலிருந்து ஓராண்டுக் காலப்பகுதியொன்று முடிவுறு முன்னர் எவ்விடயத்திலும் (பிரிவு 20 (3)இன் கீழான விடயத்தில் அத்தகைய சபை அறிக்கையைச் செய்திருப்பினுஞ்சரி செய்யா திருப்பினுஞ்சரி), ஆகக்குறைந்த பொது நேர வீதத்தைத் தீர் மானிக்கவில்லையெனில் அமைச்சருக்குத் தோன்றுமிடத்து, அமைச் சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அத் தொழிலிலுள்ள வேலையாளர்களுக்கான ஆக குறைந்த பொது நேர வீதத்தைத் தீர்மானிக்கும்படி ஆணையாளருக்கு அதிகார மளிக்கலாம்.

(2) முதலாம் உட்பிரிவின் கீழான கட்டளை வர்த்தக மானியில் வெளியிடப்பட்டதன்மேல், ஆணையாளர், அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்ட தொழிலிலுள்ள வேலையாளர்களுக்கான

ஆகக்குறைந்த பொது நேரவீதத்தைத் தீர்மானிக்க முற்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய நோக்கத்துக்காக அத்தொழிலுக்கெனத் தாபிக்கப்பட்ட சம்பளச் சபைக்குள்ள அதே தத்துவங்களை உடையவராதலும் வேண்டும்.

(3) இக்கட்டளைச் சட்டத்தின் 27ஆம், 28ஆம் அத்துடன் 29ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன், இப்பிரிவின் கீழ் ஆணையாளரிஞற் செய்யப்பட்ட ஒவ்வொரு தீர்மானத்துக்கும் ஏற்புடையனவாதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு ஏற்புடையனவாக்கப்பட்டவாறு 29ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் அத்தகைய ஏதேனும் தீர்மானம் வலுவுக்கு வந்துள்ளபோது, இக்கட்டளைச் சட்டத்தின் எல்லா நோக்கங்களுக்காகவும் அது சம்பளச் சபையிஞல் உரியமுறையில் செய்யப்பட்ட ஒரு தீர்மானமாகக் கருதப்படுதலும் வேண்டும்.

34. (1) ஏதேனும் தொழிலுக்காகத் தாபிக்கப்பட்ட ஒரு சம்பளச் சபை இல்லாதொழிக்கப்பட்டு, 8ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையிஞல் வேறேதேனும் சம்பளச் சபையின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் அத்தொழிலுக்கு நீடிக்கப்படுமிடத்து, அத்தொழிலுடன் தொடர்புபட்டவையும், அக்கட்டளைத் தேதியன்று வலுவிலுள்ளவையுமான முற்கூறப்பட்ட சபையின் முடிபுகளும் அத்தகையவை, அத்தகைய வேறு சபையிஞல் அவை நீக்கப்படுவதற்கு அல்லது வேறுபடுத்தப்படுவதற்கு அமைய, அச்சபையிஞல் அவை செய்யப்பட்டிருந்தன என்றாற்போன்று வலுவில் தொடர்ந்திருத்தல் வேண்டும். இல்லாதொழிக்கப்பட்ட அல்லது அதன் அதிகாரம் இறுக்கப்பட்ட சம்பளச் சபையின் முடிபுகள்

(2) ஆரும் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒரு கட்டளையிஞல் எத்தொழிலுக்காகச் சம்பளச் சபையொன்று தாபிக்கப்பட்டுள்ளதோ அத்தொழில் எதனதும் விவரணம், குறித்தசில செயற்பாடுகளைத் தவிர்ப்பதன் மூலம் வேறுபடுத்தப்படுமிடத்தும், அத்துடன் அதன்பின்னர், அப்பிரிவின் கீழ் இக்கட்டளைச் சட்டத்தின் 11ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் எந்த வேறு தொழிலுக்கு ஏற்புடையனவாக்கப்படுகின்றனவோ அந்த வேறு தொழில் எதனதும் விவரணத்தில் அச்செயற்பாடுகள் உள்ளடக்கப்படுமிடத்தும் அல்லது அவ்விவரணம் அமைக்கின்றவிடத்தும், அச்செயற்பாடுகள் தொடர்பானவையும் அக்கட்டளைத் தேதியன்று வலுவிலுள்ளவையுமான அச்சபையின் முடிபுகளுள் அத்தகையவை, மேற்கூறப்பட்ட வேறு தொழிலுக்காகச் சம்பளச் சபையொன்று தாபிக்கப்படுவதன்மேல், கடைசியாகக் கூறப்பட்ட சபையிஞல் நீக்கப்படுவதற்கு அல்லது வேறுபடுத்தப்படுவதற்கு அமைய, அத்தகைய சபையிஞல் அவை செய்யப்பட்டிருந்தன என்றாற்போன்று வலுவில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

*இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வகுப்பினவான வேலையைப் புரிகின்ற வேலையாளர்*

35. எந்த இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட வகுப்பினவான வேலை ஒவ்வொன்றுக்கும் ஆகக்குறைந்த சம்பளவீதம் ஒன்று ஏற்புடையதாகவுள்ளதோ அந்த இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வகுப்பினவான வேலையை வேலையாளரொருவர் புரியுமிடத்து, தொழில்தருநர், ஒவ்வொரு வகுப்பினதான வேலையிலும் செலுத்தப்பட்ட நேரம் தொடர்பில் அவ்வகுப்புத் தொடர்பில் வலுவிலுள்ள ஆகக்குறைந்த வீதத்துக்குக் குறையாத சம்பளத்தை அவ்வேலையாளருக்குச் செலுத்துதல் வேண்டும்.

*துண்டு வேலையைப் புரிகின்ற வேலையாளர் (பிரிவு 6, 1957இன் 27).*

36. வேலையாளரொருவர் துண்டுவேலையிலும் ஆகக்குறைந்த பொது நேரவீதத்திலும் ஊழியத்துக்கமர்த்தப்பட்டு ஆனால் இக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆகக்குறைந்த பொதுத் துண்டு வீதமெதுவும் தீர்மானிக்கப்பட்டிராதவிடத்து, அவ்வேலையாளரின் தொழில்தருநர், செலுத்தப்பட்ட சம்பளத்தின் துண்டு வீதம், விடயத்தின் சூழ்நிலைகளில் ஆகக்குறைந்த பொது நேர வீதத்தைப் போன்று அதே ஊதியத்தையேனும் ஈட்டுமென அவர் காட்டினாலொழிய, ஆகக்குறைந்த வீதத்திலும் குறைவாகச் சம்பளம் செலுத்துபவராகக் கருதப்படல் வேண்டும்.

*தொழில் தருநரின் வளவுகளின் மீது வேலைக்கெனக் காத்திருக்கின்ற வேலையாளர்*

37. எந்த வேலைக்கு ஆகக்குறைந்த சம்பளவீதம் ஒன்று ஏற்புடையதாகவுள்ளதோ அந்த ஏதேனும் வேலையில் ஊழியத்துக்கமர்த்தப்பட்ட வேலையாளரொருவரின் விடயத்தில் செலுத்தப்படற்பாலதான சம்பளத் தொகையைக் கணக்கிடும் நோக்கத்துக்காக, தொழில்தருநரின் வளவுகளில் வேலையாளர் சமூகமாயிருந்த எல்லா நேரத்தின்போதும் தொழில்தருநரின் வெளிப்படையான அல்லது உட்கிடையான சம்மதமின்றி அவர் அவ்வாறு சமூகமாயிருந்தாரென, அல்லது அவரது வேலையோடு சம்பந்தப்படாததும், அவர் புரிவதற்கான வேலை அவருக்குக் கொடுக்கப்படுவதற்குக் காத்திருந்தமையல்லாததுமான ஏதேனும் நோக்கத்துக்காக அவர் அவ்வாறு சமூகமாயிருந்தாரெனவும் தொழில்தருநர் எண்பித்தாலொழிய, வேலையாளர் ஊழியத்துக்கமர்த்தப்பட்டிருந்தாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், துண்டு வேலையில் ஊழியத்துக்கமர்த்தப்பட்ட வேலையாளரொருவரின் விடயத்தில், அவர் அவ்வாறு சமூகமாயிருந்து துண்டுவேலை செய்யாத எந்நேரத்தின்போதும், அவர் எந்த வகுப்பைச் சேர்ந்துள்ளாரோ அந்த வகுப்பினரான வேலையாளர்களுக்கு ஏற்புடையதான ஆகக்குறைந்த பொது நேரவீதத்தில், அல்லது ஆகக்குறைந்த பொது நேரவீதமெதுவும் தீர்மானிக்கப்பட்டிராவிடின், உத்தரவாதமளிக்கப்பட்ட நேரவீதத்தில் அவர் ஊழியத்துக்கமர்த்தப்பட்டிருந்தாரெனக் கருதப்படுதலும் வேண்டும் :

ஆயின் —

(அ) வேலையாளரொருவர் தொழில்தருநரின் வளவுகளில் வதிகின்றவிடத்து, அவர் அவ்வாறு வதிகின்றார் என்ற நிகழ்வு காரணமாக மட்டும் அவர் வளவுகளில் சமூகமாயிருக்கும்

ஏதேனும் நேரத்தின்போது ஊழியத்துக்கமர்த்தப்பட்டவராகக் கருதப்படுதலாகாது; அத்துடன்

(ஆ) வேலையாளரொருவர் வேலையெதுவும் செய்யப்படாத ஓர் அறையில் அல்லது இடத்தில் வழமையான உணவு நேரங்களில் சமூகமாயிருக்கையில், அவரது வேலையுடன் சம்பந்தப்படாத ஒரு நோக்கத்துக்காக சமூகமாயிருப்பவராகக் கருதப்படுதல் வேண்டும்.

38. (1) தொழில் என்ற வகையாக அல்லது ஏதேனும் வர்த்தக நோக்கத்துக்காக வேறெவரேனும் ஆளுடனான எந்த வெளிப்படையான அல்லது உட்கிடையான ஒழுங்கினைப் பின்பற்றி அத்தகைய வேருள் ஆகக்குறைந்த சம்பளவீதம் ஏற்புடையதாகவுள்ள ஏதேனும் வேலையைப் புரிகின்றாரோ அந்த ஒழுங்கினைச் செய்கின்ற எவரேனுமாள் இக்கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, அவ்வேலை தொடர்பில் அத்தகைய வேருளின் தொழில்தருநராகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன் அவ்வேலை சம்பந்தமாக அவரது அவசியமான செலவினத்துக்குக் கழித்தபின்னர் அவ்வேருளினால் பெறப்படற்பாலதான தேறிய ஊதியம், சம்பளமாகக் கருதப்படுதல் வேண்டும். தொழில் என்ற வகையாகச் செய்யப்பட்ட ஒழுங்கொன்றின் கீழ் செய்யப் படுகின்ற வேலை

(2) இப்பிரிவில் ''தொழில்'' என்பது ஏதேனும் வர்த்தகப் பொறுப்புமுயற்சி அல்லது தொழில்முயற்சி என்று பொருளாகும்.

39. (1) ஆகக்குறைந்த சம்பளவீதம் ஏற்புடையதாகவுள்ள ஏதேனும் வேலையில் ஊழியத்துக்கமர்த்தப்பட்ட அல்லது ஊழியத்துக்கமர்த்தப்பட விரும்புகின்ற எவரேனும் வேலையாளர், உடற் குறைபாடு வேலையாளர் அந்த ஆகக்குறைந்த வீதத்தை அவர் உழைப்பதற்கு அவரை இயலாதவராக்குகின்ற ஏதேனும் உடற்றகுதியீனத்தினால் அல்லது உடலூறுபாட்டினால் அவர் பாதிக்கப்பட்டுள்ளாரென, ஆணையாளர் அல்லது இப்பிரிவின் நோக்கங்களுக்காக ஆணையாளரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலர் திருப்திப்படுமிடத்து, ஆணையாளர் அல்லது அத்தகைய அலுவலர் தகுதியானதென அவர் எண்ணின், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, ஆகக்குறைந்த வீதத்துக்குக் குறைவாகச் சம்பளத்தைக் கொடுப்பனவு செய்தல் தொடர்பான இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளிலிருந்து அவ்வேலையாளரை ஊழியத்துக்கமர்த்துவதை விலக்களிப்பதான அனுமதிப்பத்திரமொன்றை அவ்வேலையாளருக்கு வழங்கலாம்.

(2) எவரேனும் வேலையாளரை ஊழியத்துக்கமர்த்துதல் தொடர்பில் (1)ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமெதுவும் வலுவிருக்கையில், அனுமதிப்பத்திரம் வலுவிலிருக்கும் வரையும், அனுமதிப் பத்திரம் எந்நிபந்தனைகளுக்கமைய வழங்கப்பட்டதோ அந் நிபந்தனைகள் இணங்கியொழுகப்

படும்வரையும், ஆகக்குறைந்த விதத்துக்குக் குறைவாக அவ் வேலையாளருக்குச் சம்பளம் செலுத்துவதற்காகத் தொழில்தரு நர் எவையேனும் சட்ட நடவடிக்கைகளுக்கு ஆளாதலாகாது.

(3) எவரேனும் வேலையாளருக்கு (1)ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் அனுமதிப்பத்திரம், அவ்வேலை யாளரின் தொழில் தருநருக்கு விதித்துரைக்கப்பட்ட முறையில் அறிவித்தல் கொடுத்த பின்னர் ஆணையாளரினால் அல்லது மேற் கூறப்பட்டவாறு அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரி னால் ஒழிக்கப்படலாம்.

தொழில் பயிலுநர் அல்லது தொழில் பழகுநர் (பிரிவு 9, 1957இன் 27)

40. (1) ஏதேனும் தொழிலுக்காகத் தாபிக்கப்பட்ட சம்பளச் சபையொன்று, தொழில்பயிலுநராக அல்லது தொழில்பழகுநராக அத்தொழிலில் எவரேனும் வேலையாட்கள் எந்நிபந்தனைகளுக் கமைய ஊழியத்துக்கமர்த்தப்படலாமோ அந்நிபந்தனைகளைத் தீர் மானிக்கலாம்.

(2) ஏதேனும் தொழிலுக்காகத் தாபிக்கப்பட்ட சம்பளச் சபையொன்று (1)ஆம் உட்பிரிவின் கீழ் எவையேனும் நிபந்தனை களைத் தீர்மானிக்குமிடத்து, அத்தொழிலிலுள்ள தொழில்தருநர் ஒவ்வொருவரும் ஒரு தொழில்பயிலுநராக அல்லது தொழில் பழகுநராக அத்தொழிலில் எவரேனுமாளை ஊழியத்துக்கமர்த்து வதில் அந்நிபந்தனைகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

(3) எத்தொழிலுக்காகச் சம்பளச் சபையொன்று தாபிக் கப்பட்டுள்ளதோ அத்தொழில் எதிலுமுள்ள தொழில்தருந ரெவரும், தொழில் ஆணையாளரின் எழுத்திலான அனுமதியின்றி தொழில்பயிலுநராக அல்லது தொழில்பழகுநராக அத்தொழிலில் வேலையாளரொருவரை ஊழியத்துக்கமர்த்தலாகாது. அத் தகைய அனுமதி, தொழில்பயிலுநராக அல்லது தொழில் பழகு நராக வேலையாளர்களை ஊழியத்துக்கமர்த்துதல் தொடர்பாகப் பொதுவில் வழங்கப்படலாம் அல்லது குறிப்பிட்ட ஏதேனும் வகுப்பினராக தொழில்பயிலுநராக அல்லது தொழில்பழகுநராக வேலையாளர்களை ஊழியத்துக்கமர்த்துதல் தொடர்பாகக் குறிப் பாக வழங்கப்படலாம்.

(4) சம்பளச் சபையொன்று எத்தொழிலுக்கெனத் தாபிக்கப்பட்டுள்ளதோ அத்தொழில் எதிலுமுள்ள தொழில் தருநரொருவர், தொழில்பயிலுநருக்கு அல்லது தொழில்பழகு நருக்குப் பயிற்சியளிப்பதற்கான வசதிகளை ஏற்பாடுசெய்வதில்லை. அல்லது (1)ஆம் உட்பிரிவின் கீழ் அச்சபையினால் தீர்மானிக்கப் பட்டவாறான அத்தகைய நிபந்தனைகளை நிறைவேற்றுவதில்லை, அல்லது (5)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கடைப்பிடிப்பதில்லை எனத் தொழில் ஆணையாளர் திருப்திப்படுமிடத்து, (3)ஆம் உட் பிரிவின் கீழ் அத்தொழில்தருநருக்கு அவரினால் வழங்கப்பட்ட அனுமதியெதனையும் மீளப் பெறலாம்.

(5) ஆகக்குறைந்த சம்பள வீதமொன்று ஏற்புடையதான ஆளொருவராகவுள்ள ஏதேனும் தொழிலிலுள்ள வேலையாளரொருவர் ஒரு தொழில்பயிலுநராக அல்லது தொழில்பழகுநராக ஊழியத்துக்கமர்த்தப்படுமிடத்து, கட்டுப்பணம், என்ற வகையாக ஏதேனும் கொடுப்பனவை அவரது தொழில்தருநர் அவரிடமிருந்து அல்லது அவரது சார்பில் அல்லது அவரது கணக்கில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பெறுதலாகாது.

ஆயின், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள், ஊழியம் தொடங்கிய நேரத்தில் அல்லது அதற்கு அண்மையில் செய்து கொள்ளப்பட்ட எழுத்திலான ஏதேனும் உடன்படிக்கையினைப் பின்பற்றி அத்தகைய ஊழியம் தொடங்கிய பின்னர் நான்கு வாரங்களுக்குப் பிந்தாமல் உரியமுறையில் செய்யப்பட்ட அத்தகைய ஏதேனும் கொடுப்பனவுக்கு ஏற்புடையனவாதலாகாது.

### தொழில்தருநர்களின் கட்டளங்கள்

41. (1) எத்தொழிலுக்காகச் சம்பளச் சபையொன்று தாபிக்கப்பட்டுள்ளதோ அத்தொழில் எதிலுமுள்ள வேலையாளர்களின் தொழில்தருநர், ஒவ்வொரு சம்பளக் காலப்பகுதி தொடர்பிலும் அத்தொழில் கொண்டுநடாத்தப்படும் வளவுகளில் பின்வருவனவற்றைக் காட்டுகின்ற இடாப்பொன்றை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட இடாப்புகளைப் பேணிவருதலும் வைத்திருத்தலும் வேண்டும் :— இடாப்பை வைத்திருப்பதற்குத் தொழில் தருநருக்குள்ள கடமை

(அ) அவரினால் ஊழியத்துக்கமர்த்தப்பட்ட ஒவ்வொரு வேலையாளரினதும் பெயரும், பாலும், அத்துடன் பெண்ணாகவுள்ள அல்லது பதினெட்டு வயதுக்குக் குறைவானவராகவுள்ள வேலையாளரொருவரின் விடயத்தில் அவ்வேலையாளரின் வயதும், (பிரிவு 19, 1957இன் 27).

(ஆ) அவரினால் ஊழியத்துக்கமர்த்தப்பட்ட ஒவ்வொரு வேலையாளரினாலும் புரியப்பட்ட வகுப்பினதான வேலை,

(இ) அத்தகைய ஒவ்வொரு வேலையாளருக்கும் செலுத்தப்பட்ட சம்பளம்,

(ஈ) அத்தகைய ஒவ்வொரு வேலையாளரினாலும், புரியப்பட்ட வேலை மணித்தியாலங்களின் எண்ணிக்கை,

(உ) அத்தகைய ஒவ்வொரு வேலையாளரினாலும் புரியப்பட்ட மேலதிக நேரவேலை மணித்தியாலங்களின் எண்ணிக்கை,

(ஊ) அத்தகைய ஒவ்வொரு வேலையாளருக்கும் சம்பளம் செலுத்தப்படும் தேதிகள்,

(எ) அத்தகைய ஒவ்வொரு வேலையாளருக்கும் அனுமதிக்கப்பட்ட விடுமுறைநாட்கள்,

(ஏ) அத்தகைய ஒவ்வொரு வேலையாளருக்கும் செலுத்தப்பட்ட மருத்துவ நன்மைகளின் தொகை,

(ஐ) ஒழுங்கு விதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறுள்ள அல்லது சம்பளச் சபையின் ஏதேனும் முடிபினால் கேட்டுக் கொள்ளப்படக்கூடியவாறுள்ள அத்தகைய வேறு விபரங்கள்.

(பிரிவு 10 (ஆ) 1957 இன் 27) (1) (அ) முதலாம் உட்பிரிவின்கீழ் பேணப்படும் இடாப்பொன்றில் சம்பளக் காலப்பகுதியொன்று தொடர்பில் பதிவீடு செய்யப்படும்படி அவ்வுட்பிரிவினால் தேவைப்படுத்தப் படுகின்ற விபரங்கள், அச்சம்பளக் காலப்பகுதி முடிவுற்றபின்னர் உடனடியாகப் பதிவீடு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், அவ்வுட்பிரிவின் (ச), (உ) என்னும் பந்திகளின் கீழ் அத்தகைய இடாப்பிற் பதிவீடு செய்யப்பட்ட விபரங்கள், அவ்விபரங்கள் எந்தச் சம்பளக் காலப்பகுதி தொடர்பானவையோ அந்தச் சம்பளக் காலப்பகுதியின் ஒவ்வொரு நாள் தொடர்பிலுமானவையாகவிருத்தலும் வேண்டும்.

(பிரிவு 10(இ) 1957 இன் 27) (பிரிவு 3, 1962 இன் 27) (2) தொழில்தருநரென்ற முறையில் ஏதேனும் சம்பளக் காலப்பகுதி தொடர்பிலான ஏதேனும் இடாப்பை (1)ஆம் உட்பிரிவின் கீழ் பேணிவருகின்ற அல்லது பேணியுள்ள ஆளொவ்வொருவரும் அத்தகைய சம்பளக் காலப்பகுதியின் கடைசி நாளன்று தொடங்குகின்ற நான்காண்டுக் காலப்பகுதிக்கு அத்தகைய இடாப்பைப் பேணிக்காத்தல் வேண்டுமென்பதுடன், தொழில் ஆணையாளரினால் அல்லது எவரேனும் விதித்துரைக்கப்பட்ட அலுவலரினால் அவ்வாறு செய்யும்படி கேட்டுக்கொள்ளப் படும்போது, அத்தகைய இடாப்பைச் சோதனைக்கெனக் காண்பித்தலும், அத்தகைய இடாப்பின் அல்லது அத்தகைய இடாப்பின் ஏதேனும் பாகத்தின் உண்மையான பிரதியொன்றைக் கொடுத்துதவுதலும் அல்லது அத்தகையதொரு பிரதி எடுக்கப் படுவதை அனுமதித்தலும் வேண்டும்.

தொழில் தருநர்களினால் அறிவித்தல்கள் வெளிக்காட்டி வைக்கப்படுதல் (பிரிவு 11 1957 ன் 27)

42. எந்தத் தொழிலுக்காகச் சம்பளச் சபையொன்று தாபிக்கப்படுகின்றதோ அந்தத் தொழிலிலுள்ள வேலையாளர்கள் எவரினதும் தொழில்தருநர் விதித்துரைக்கப்படக்கூடியவாறுள்ள அத்தகைய இடத்திலும் அத்தகைய முறையிலும் விதித்துரைக்கப்படக்கூடியவாறுள்ள அத்தகைய வேறு கருமங்களின் விபரங்களுடன் சேர்த்து அச்சபையின் வலுவிலுள்ள முடிபுகளைத் தருகின்ற அறிவித்தலொன்றை வெளிக்காட்டி வைத்திருத்தல் வேண்டும்.

வேலையைப் பிரித்துக் கொடுக்கும் ஆட்களினால் வைத்திருக்கப்பட வேண்டிய இடாப்பு.

43. சம்பளச் சபையொன்று எத்தொழிலுக்காகத் தாபிக்கப்பட்டுள்ளதோ அத்தொழிலிலுள்ள வெளி வேலையாளர்களுக்கு வேலைகொடுக்கும் ஆளொவ்வொருவரும், அத்தகைய வேலை கொடுப்பதற்குப் பயன்படுத்தப்படும் வளவுகளில், அத்தகைய வேலை அத்தகைய வேலையாளர்கள், அத்துடன் அத்தகைய வேலைக்குச் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் என்பன தொடர்

பாக விதித்துரைக்கப்பட்ட விபரங்களைக் கொண்டுள்ளதும், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலானதுமான இடாப்பொன்றைப் பேணிவருதலும், வைத்திருத்தலும் வேண்டும்.

43. (அ) எத்தொழிலுக்காகச் சம்பளச் சபையொன்று தாபிக்கப்பட்டுள்ளதோ அத்தொழில்தருநர்களை அவர்களினால் பேணப்படும்படி இக்கட்டளைச் சட்டத்தின் வேறெவையேனும் ஏற்பாடுகளினால் கேட்டுக்கொள்ளப்பட்ட இடாப்புகளுடன் அல்லது பதிவேடுகளுடன் சேர்த்து மேலதிகமாக, ஒழுங்குவிதிகளின் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலானவையும் அத்தகைய கருமங்கள் பற்றிய விபரங்களைக் கொண்டுள்ளவையுமான அத்தகைய வேறு பதிவேடுகளைப் பேணும்படி கேட்டுக்கொள்கின்ற ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம். தொழில் தருநர்களினால் ஏனைய பதிவேடுகள் பேணப்படுதல் (பிரிவு 12 1957 ன் 27)

## தவறுகள்

44. (1) இருபத்தியோராம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க எவரேனும் வேலையாளருக்குச் சம்பளம் செலுத்தத் தவறுகின்ற தொழில்தருநர் ஒவ்வொருவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், பின்வருவனவற்றுக்கு ஆளாதலும் வேண்டும் :— சம்பளங்கள் முதலியவற்றைச் செலுத்தத் தவறுவதற்கான தண்டம்.

(அ) முதலாவது தவறின் விடயத்தில், நூறு ரூபாவுக்குக் குறையாததும், இருநூற்றைம்பது ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்று ;

(ஆ) இரண்டாவது தவறின் விடயத்தில், இருநூற்றைம்பது ரூபாவுக்குக் குறையாததும் ஐந்நூறு ரூபாவைவிஞ்சாததுமான குற்றப்பணம்; அத்துடன் பிரிவு 3 (1) 1966 இன் 23.

(இ) அடுத்துப்பின்னரான தவறின் விடயத்தில், ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாததும், ஆயிரம் ரூபாவை விஞ்சாததுமானமான குற்றப்பணம், அல்லது ஆறுமாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்தண்டனை அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்தண்டனை ஆகிய இரண்டும் ;

அத்துடன் மேலதிகமாக, குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் பின்னர் தவறு தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(2) முதலாம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்டதனைத் தவிர்ந்த ஏதேனும் விடயத்தில், இக்கட்டளைச் சட்டத்தின் இப்பாகத்தின் ஏதேனும் ஏற்பாட்டுக்கிணங்க அல்லது சம்பளச் சபையொன்றன் ஏதேனும் முடிபுக்கிணங்க ஏதேனும் கொடுப்பனவை

எவரேனும் வேலையாளருக்குச் செய்யத் தவறுகின்ற தொழில் தருநர் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், பின்வருவனவற்றுக்கு ஆளாதலும் வேண்டும் :—

(பிரிவு. 3 (2), 1966 இன் 23). (அ) முதலாவது தவறின் விடயத்தில் நூறு ரூபாவுக்குக் குறையாததும் இருநூற்றைம்பது ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்று;

(ஆ) இரண்டாவது தவறின் விடயத்தில் இருநூற்றைம்பது ரூபாவுக்குக் குறையாததும் ஐந்நூறு ரூபாவை விஞ்சாதது மான குற்றப்பணம்; அத்துடன்

(இ) அடுத்துப்பின்னரான தவறின் விடயத்தில், ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாததும், ஆயிரம் ரூபாவை விஞ்சாதது மான குற்றப்பணம் அல்லது ஆறுமாதங்களை விஞ்சாத வொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற் தண்டனை அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற் தண்டனை ஆகிய இரண்டும்.

(பிரிவு 4, 1982 இன் 36). (3) முதலாம் உட்பிரிவின் கீழ் அல்லது (2)ஆம் உட் பிரிவின் கீழ் தொழில்தருநரொருவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டதன்மேல், நீதிமன்றம், வேறேதேனும் தண்டனைத் தீர்ப் புடன் சேர்த்து மேலதிகமாகப் பின்வருவனவற்றைச் செலுத்தும் படி தொழில்தருநருக்குக் கட்டளையிடலாம் :—

(அ) வேலையாளரொருவருக்குத் தகுந்தமுறையில் செலுத்தப் பட்டிருக்க வேண்டிய தொகை அவ்வேலையாளருக்குச் செலுத்தப்பட்டிராதவிடத்து, அத்தகைய தொகைக்கும் உண்மையாகச் செலுத்தப்பட்ட தொகைக்கும் இடையே யான வித்தியாசத்தைக் குறிக்கின்றதாக நீதிமன்றத்தினுல் காணப்படக்கூடியவாறன அத்தகைய பணத்தொகையும் 4ஆம் பிரிவின் (2அ) என்னும் உட்பிரிவில் தரப்பட்டுள்ள முறையில் கணக்கிடப்பட்ட மிகைக் கட்டணமும்; அல்லது

(ஆ) அவ்வேலையாளருக்குக் கொடுக்குமதியான சம்பளத்தின் பாகமெதுவும் செலுத்தப்பட்டிராதவிடத்து, அத்தகைய சம்பளத்தைக் குறிக்கின்றதாக அந்நீதிமன்றத்தினுல் காணப்படக்கூடியவாறன அத்தகைய பணத்தொகையும் 4ஆம் பிரிவின் (2அ) என்னும் உட்பிரிவில் தரப்பட்டுள்ள முறையில் கணக்கிடப்பட்ட மிகைக்கட்டணமும்.

(4) ஏதேனும் பணத்தொகையின் கொடுப்பனவுக்காக (3)ஆம் உட்பிரிவின் கீழ் கட்டளையொன்றை ஆக்குவதற்கு நீதி மன்றத்துக்குள்ள தத்துவம், வேறெவையேனும் நடவடிக்கை களின் மூலம் அப்பணத் தொகையை அறவிடுதற்கு வேலையாள ருக்குள்ள ஏதேனும் உரிமையை மதிப்புக்குறைப்பதாதலாகாது.

*நேரடித் தொழில் தருநர் தாமே இன்னொருவரின் ஊழியத்திலிருத்தல்.*

45. எவரேனும் வேலையாளரின் நேரடித் தொழில்தருநர் தாமே வேறோர் ஆளின் ஊழியத்தில் இருக்குமிடத்தும், அவ்வேலையாளர் அந்த வேறு ஆளின் தொழிலினது நடைமுறையின்போதும் அத்தொழிலின் நோக்கத்துக்காகவும் ஏதேனும் வேலையைச் செய்வதற்கு ஊழியத்துக்கமர்த்தப்படுமிடத்தும், அந்த வேறு ஆள் இக்கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக நேரடித் தொழில் தருநருடன் கூட்டாக அவ்வேலையாளரின் தொழில்தருநராகக் கருதப்படுதல் வேண்டும்.

*கீழொப்பந்தகாரரினால் ஊழியத்துக்கமர்த்தப்பட்ட வேலையாளரொருவருக்கு வருமதியான சம்பளங்கள் தொடர்பாக ஒப்பந்தக்காரருக்குள்ள பொறுப்பு. (பிரிவு 14, 1957 இன் 27).*

45. (அ) ஏதேனும் வேலையை நிறைவேற்றப் பொறுப்பேற்றுள்ளவரும் இதன்பின்னர் இப்பிரிவில் " ஒப்பந்தக்காரர் " எனக் குறிப்பீடு செய்யப்படுபவருமான ஆளொருவர், (இதன் பின்னர் இப்பிரிவில் " கீழ் ஒப்பந்தக்காரர் " எனக் குறிப்பீடு செய்யப்படுபவரான) வேறெவரேனுமாளுடன், அவ்வேலையின் முழுமையும் அல்லது அதன் ஏதேனும் பாகம் கீழ்ழொப்பந்தக்காரரினால் நிறைவேற்றப்படுவதற்காக ஒப்பந்தமொன்றைச் செய்துகொள்ளுமிடத்து, அப்போது கீழ்ழொப்பந்தக்காரர் அவ்வொப்பந்தத்தைப் புரிகையில் அவரினால் ஊழியத்துக்கமர்த்தப்பட்ட எவரேனும் வேலையாளருக்கு 21ஆம் பிரிவுக்கிணங்கச் சம்பளம் செலுத்துவதற்குத் தவறுவாராயின், அப்பிரிவுக்கிணங்க இவ்வேலையாளருக்குக் கொடுமதியான சம்பளத்தைச் செலுத்துவதற்கு ஒப்பந்தக்காரர் ஆளாதல் வேண்டும்.

*இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் வேலையாளர்களுக்கு வருமதியான பணத் தொகைகளை அறவிடுதல். (பிரிவு 15, 1957 இன் 27). (அத். 16) (பிரிவு 4, 1962இன் 27)*

46. (1) இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க எவரேனும் வேலையாளருக்கு ஏதேனும் பணத் தொகையைச் செலுத்தத் தவறியமைக்குத் தொழில்தருநரொருவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவிடத்து, அப்பொழுது, விளக்கம் தொடங்கும் தேதிக்கு முன்னர் எந்நேரத்திலும் அவ்வாறு செய்ததற்கான முன் எண்ணம் பற்றி விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான அறிவித்தலொன்று தொழில்தருநருக்குச் சேர்ப்பிக்கப்பட்டிருப்பின், தொழில்தருநர் எத்தவறுக்கு அவ்வாறு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளாரோ அத்தவறுபற்றி நீதிமன்றத்துக்குக் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையில் 148ஆம் பிரிவின் கீழ் முறைப்பாடு செய்யப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நான் காண்டுகளின்போது எந்நேரத்திலும் அவ்வேலையாளருக்கு அல்லது வேறெவரேனும் வேலையாளருக்கு அல்லது வேலையாளர்களுக்கு இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஏதேனும் பணத் தொகையைத் தொழில்தருநர் செலுத்தத்தவறியமை பற்றிய சான்று கொடுக்கப்படலாமென்பதுடன், தவறியமை பற்றிய எண்பிப்பின்மேல், நீதிமன்றம், தொழில்தருநரிடமிருந்து அத்தகைய வேலையாளருக்கு அல்லது வேலையாளர்களுக்குக் கொடுக்குமதியாகவுள்ளதான நீதிமன்றத்தினால் காணப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையைச் செலுத்தும்படி அவருக்குக் கட்டளையிடலாம். இவ்வுட்பிரிவின் கீழ் செலுத்தும்படி கட்டளையிடப்பட்ட ஏதேனும் பணத்தொகை, குற்றப்பணமொன்று என்றுபோன்று அதேமுறையில் அறவிடப்படலாம்.

பிரிவு 15 1957 ன் 27)

(2) முதலாம் உட்பிரிவின் கீழ் கட்டளையொன்றை ஆக்குவதற்கு நீதிமன்றத்துக்குள்ள தத்துவம் வேறெவையேனும் நடவடிக்கைகளின் மூலம் வேலையாளருக்குக் கொடுக்குமதியான ஏதேனும் பணத்தொகையை அறவிடுவதற்கு அவருக்குள்ள உரிமை எதனையும் மதிப்புக்குறைத்தலாகாது;

(3) வேலையாளரொருவருக்கு அவரது தொழில்தருநரினால் செலுத்தப்படும்படி இக்கட்டளைச் சட்டத்தினால் அல்லது சம்பளச் சபையொன்றன் முடிபொன்றினால் கேட்டுக்கொள்ளப்பட்ட எவையேனும் சம்பளங்களின் அல்லது கொடுப்பனவுகளின் தொகை முழுவதும் அல்லது அதன் ஒருபாகம் அவருக்குச் செலுத்தப்பட்டிராதவிடத்து, தொழில் ஆணையாளர், அவ்வாறு செய்வது தகுதியானதென அவர் எண்ணின், தொழில் ஆணையாளர் அதனை அத்தகைய வேலையாளருக்கு அனுப்பக்கூடியதாக, எழுத்திலான அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் தொழில் ஆணையாளருக்கு அத்தகைய தொகையை அல்லது அத்தகைய தொகையின் மீதியைச் செலுத்துமாறு எழுத்திலான அறிவித்தலின்மூலம் கேட்டுக்கொள்ளலாம். அத்தகைய தொழில்தருநருக்கு அத்தகைய அறிவித்தல் சேர்ப்பிக்கப்படும்போது அவர் அத்தகைய அறிவித்தலினால் கேட்டுக்கொள்ளப்பட்டவாறு தொழில் ஆணையாளரிடம் அதனை அனுப்பாமல் அத்தகைய வேலையாளருக்கு அத்தகைய தொகையை அல்லது அத்தகைய மீதியை நேரடியாகச் செலுத்துமிடத்து, அவர் அத்தகைய தொகையை அல்லது அத்தகைய மீதியை அத்தகைய வேலையாளருக்குச் செலுத்தவில்லையெனக் கருதப்படுதல் வேண்டும்.

எண்பிப்பதற்கான பொறுப்பு. (பிரிவு 16, 1957இன் 27).

47. (அ) இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க எவரேனும் வேலையாளருக்கு ஏதேனும் பணத்தொகையைச் செலுத்துவதற்குத் தவறியமைக்காக எவரேனும் தொழில்தருநருக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுக்கப்படுமிடத்து, அல்லது

(ஆ) இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க எவரேனும் வேலையாளருக்கு ஏதேனும் பணத்தொகையைச் செலுத்துவதற்குத் தவறியமைக்காக எவரேனும் தொழில்தருநருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படும் ஏதேனும் விடயத்தில், இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அவ்வேலையாளருக்கு அல்லது வேறெவரேனும் வேலையாளருக்கு அல்லது வேலையாளர்களுக்கு ஏதேனும் பணத்தொகையைச் செலுத்துவதற்கு அத்தொழில்தருநரின் வேறேதேனும் தவறியமைபற்றி 46ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் கீழ் சான்றுகொடுக்கப்படுமிடத்து, அப்பணத்தொகை செலுத்தப்பட்டதென்பதை எண்பிக்கும் பொறுப்பு தொழில்தருநரைச் சார்ந்ததாதல் வேண்டும்.

தொழில்தருநர்களினாற் புரியப்படும் தவறுகள்.

48. (1) (அ) இக்கட்டளைச் சட்டத்தின் கீழான ஒரு சம்பளச் சபையின் ஏதேனும் முடிபின் கீழ் எவரேனும் வேலையாளருக்கு அனுமதிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்ட ஏதேனும் விடுமுறைநாளை அவ்வேலையாளருக்கு அனுமதிக்கத் தவறுகின்ற அல்லது மறுக்கின்ற; அல்லது

(ஆ) 39ஆம் பிரிவின் கீழ் எவரேனும் வேலையாளர் தொடர்பில் வழங்கப்பட்ட ஏதேனும் அனுமதிப்பத்திரத்தின் ஏதேனும் நிபந்தனையின் மீறுகையொன்றைப் புரிகின்ற; அல்லது

(இ) சம்பளச் சபையொன்றன் ஏதேனும் முடிபின் ஏற்பாட்டுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற,

தொழில்தருநர் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறுமாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்தண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) வேலையாளரொருவர் தொடர்பில் 39ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஓர் அனுமதிப்பத்திரத்தின் குறித்துரைக்கப்பட்ட வீதத்துக்குக் குறைவான ஒரு வீதத்தில் அவ்வேலையாளருக்குச் சம்பளக் கொடுப்பனவைத் தேவைப்படுத்துகின்றவாறான அந்த அனுமதிப்பத்திரத்தின் அத்தகைய நிபந்தனையின் மீறுகையைப் புரிகின்றமைக்காக, (1)ஆம் உட்பிரிவின் கீழ் தொழில்தருநரொருவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், நீதிமன்றமானது, வேறு ஏதேனும் தண்டனைத் தீர்ப்புடன் சேர்த்து மேலதிகமாக, அவ்வேலையாளருக்குக் கொடுக்குமதியான சம்பளத்தின் பாகமெதுவும் செலுத்தப்பட்டிராதவிடத்து நீதிமன்றமானது அத்தகைய சம்பளத்தைச் செலுத்தும்படி, அல்லது அத்தகைய சம்பளத்தின் பாகமொன்று மட்டுமே செலுத்தப்பட்டுள்ளவிடத்து, மீதியைச் செலுத்தும்படி அத்தொழில்தருநருக்குக் கட்டளையிடலாம். இவ்வுட்பிரிவின் கீழ் செலுத்தும்படி கட்டளையிடப்பட்ட ஏதேனும் பணத்தொகை குற்றப்பணமொன்று என்றாற்போன்று அதேமுறையில் அறவிடப்படலாம்.

(3) சம்பளச் சபையொன்றன் ஏதேனும் முடிபின் கீழ் வேலையாளரொருவருக்கு அனுமதிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்ட ஏதேனும் விடுமுறைநாளை அவ்வேலையாளருக்கு அனுமதிக்கத் தவறுகின்ற அல்லது மறுக்கின்ற தவறுக்கு (1)ஆம் உட்பிரிவின் கீழ் தொழில்தருநரொருவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் நீதிமன்றமானது, வேறேதேனும் தண்டனைத் தீர்ப்புடன் சேர்த்து மேலதிகமாக, அவ்விடுமுறைநாள் தொடர்பில் அவ்வேலையாளருக்குக் கொடுக்குமதியான ஊதியத்தின் பாகமெதுவும் செலுத்தப்பட்டிராதவிடத்து, அத்தகைய ஊதியத்தைச் செலுத்தும்படி, அல்லது அத்தகைய ஊதியத்தின் ஒரு பாகம் மட்டுமே செலுத்தப்பட்டுள்ளவிடத்து, மீதியைச் செலுத்தும் படி தொழில்தருநருக்குக் கட்டளையிடலாம். இவ்வுட்பிரிவின் கீழ் செலுத்தும்படி கட்டளையிடப்பட்ட ஏதேனும் பணத்தொகை குற்றப்பணமொன்று என்றாற்போன்று அதேமுறையில் அறவிடப்படலாம்.

(பிரிவு 17, 1957இன் 27).

ஒரு சம்பளச் சபையின் உறுப்பினராக இருத்தல் முதலியவற்றுக்கு வேலையாளரைப் பதவி நீக்குதல்.

49. (1) எவரேனும் வேலையாளர் —

(அ) சம்பளச் சபையுறுப்பினராக இருக்கின்றார் அல்லது வருகின்றார்; அல்லது

(ஆ) இக்கட்டளைச் சட்டத்தின் கீழான கருமங்கள் பற்றி எவரேனும் அதிகாரிக்குத் தகவல்கொடுத்துள்ளார். அல்லது

(இ) அவரது முன்எண்ணம்பற்றி அவரது தொழில்தருநருக்கு நியாயமான அறிவித்தல் கொடுத்தபின்னர் சம்பளச் சபையொன்றன் உறுப்பினராகக் கடமையில் ஈடுபட்டுள்ளமையினால் வேலைக்கு வராதிருந்தார்; அல்லது

(ஈ) சம்பளச் சபையொன்றன் ஏதேனும் முடிபின் கீழ் ஏதேனும் நன்மைக்கு உரித்துடையவராயுள்ளார், என்ற நிகழ்வின் காரணமாக மட்டும் அவரது ஊழியத்திலிருந்து எவரேனும் வேலையாளரைப் பதவிநீக்கும் தொழில்தருநர் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு, அல்லது ஆறுமாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொரு வகை மறியலுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற் தண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) முதலாம் உட்பிரிவின் கீழான தவறொன்றுக்காகத் தொழில்தருநருக்கெதிரான ஒவ்வொரு குற்றவழக்குத் தொடுப்பிலும், வேலையாளர், அவ்வுட்பிரிவில் குறிப்பிடப்பட்ட நிகழ்வொன்றல்லாத ஏதேனும் நிகழ்வுகாரணமாகவோ பதவிநீக்கப்பட்டாரென எண்பிக்கும் பொறுப்பு அத்தொழில்தருநர் மீதானதாதல் வேண்டும்.

பிரிவு 35க்கு முரணாகத் தொழில்தருநர் கட்டுப் பணம் பெறுதல்.

50. (1) நாற்பதாம் பிரிவின் ஏதேனும் ஏற்பாட்டுக்கு முரணாக ஏதேனும் கட்டுப்பணத்தைப் பெறுகின்ற தொழில்தருநர் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், இருநூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியலுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்தண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) நீதிமன்றமானது, (1)ஆம் உட்பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டனைத் தீர்ப்புடன் சேர்த்து மேலதிகமாக, 40ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக அவரினால் பெறப்பட்டதாகக் காணப்பட்டுள்ள பணத் தொகையை செலுத்துமாறு தொழில்தருநருக்கு கட்டளையிடப்படலாம்.

51. பதினேழாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏதேனும் ஏற்பாட்டுக்கு முரணுக ஏதேனும் தகவலை வெளியிடுகின்ற அல்லது வேறேதேனும் செயலைச் செய்கின்ற ஆளொவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், இரு நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

பிரிவு 17 (2)க்கு முரணுகத் தகவலை வெளியிடுதல்.

## பாகம் III

### பொது

### அலுவலர்களின் நியமனம், தத்துவங்கள் முதலியன

52. (1) இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றும் அல்லது அவற்றுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காகக் காலத்துக்குக் காலம் தேவைப்படக்கூடியவாறுன அத்தகைய எண்ணிக்கையினவான அலுவலர்களும் சேவையாளர்களும் நியமிக்கப்படலாம்.

அலுவலர்களை நியமித்தல். (8-3-1987 இன் 14,739ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானி

(2) முதலாம் உட்பிரிவின் கீழ் எவரேனுமாளின் நியமனம் பெயர்குறித்து அல்லது பதவிகுறித்து செய்யப்படலாம்.

53. இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆணையாளருக்குள்ள ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு, அல்லது நிறைவேற்றுவதற்கு ஆணையாளர் பொதுவாக அல்லது விசேடமாக எவரேனும் பிரதி ஆணையாளருக்கு அல்லது 52ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட எவரேனுமாளுக்கு அதிகாரமளிக்கலாம்.

— தமது சார்பில் செயலாற்ற வென ஆணையாளரின் அல்லது இன்னோர் அலுவலரின் அதிகார மளிப்பு.

54. (1) ஆணையாளர், எந்நேரத்திலும், ஏதேனும் தொழிலில் அல்லது வகுப்பினதான தொழிலில் உள்ள வேலையாளர்களின் தொழில்தருநரை அல்லது ஏதேனும் தொழிலில் உள்ள வெளிவேலையாளர்களுக்கு வேலை கொடுக்கின்ற எவரேனுமாளை அல்லது ஏதேனும் வகுப்பினதான தொழிலில் உள்ள வெளிவேலையாளர்களுக்கு வேலைகொடுக்கின்ற ஆள் ஒவ்வொருவரையும், குறித்துரைக்கப்பட்ட ஒரு தேதிக்கு முன்னர் பின்வருவனவற்றை ஆணையாளருக்குக் கொடுத்துதவும்படி பணிக்கலாம் :—

விபரத்திரட்டுக்கள் முதலியவற்றைக் கோருவதற்கு ஆணையாளருக்குள்ள தத்துவம்.

(அ) ஆணையாளருக்குத் தேவைப்படக்கூடியவாறுன அத்தகைய விபரங்களைக் கொண்டுள்ள விபரத்திரட்டொன்று;

(ஆ) அவ்வாறு கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டில் கூறப்பட்ட எவையேனும் விபரங்கள் தொடர்பில் ஆணையாளருக்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய தகவல் அல்லது விளக்கம்;

(இ) இக்கட்டளைச் சட்டத்தினால் அல்லது இதன்கீழ் அத்தகைய தொழில்தருநரினால் அல்லது ஆளினால் வைத்திருக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்பட்ட ஏதேனும் சம்பள இடாப்பின் அல்லது பதிவேட்டின் அல்லது ஒரு சம்பள இடாப்பின் அல்லது பதிவேட்டின் ஏதேனும் பாகத்தின் உண்மைப் பிரதியொன்று.

(2) முதலாம் உட்பிரிவின் கீழான பணிப்பொன்று வர்த்தமானியிலும் இலங்கையில் புழக்கத்திலுள்ள இரண்டு அல்லது அதற்கதிகமான செய்தித் தாள்களிலும் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் கொடுக்கப்படலாம்.

(3) முதலாம் உட்பிரிவின் கீழ் ஏதேனும் விபரத்திரட்டை அல்லது தகவலைக் கொடுத்துதவும் எவரேனும் தொழில்தருநர் அல்லது வேறுள், அத்தகைய விபரத்திரட்டு அல்லது தகவல் அந்தரங்கமானதாகக் கொள்ளப்படுதல் வேண்டுமென்ற எழுத்திலான வேண்டுகோளை அவ்விபரத்திரட்டுடன் அல்லது தகவலுடன் சேர்த்து அனுப்பலாமென்பதுடன், அத்தகைய வேண்டுகோள் விடுக்கப்படுமிடத்து, அவ்வேண்டுகோள் எந்த விபரத்திரட்டுடன் அல்லது தகவலுடன் தொடர்பானதோ அந்த விபரத்திரட்டு அல்லது தகவல், அவ்வேண்டுகோளை விடுத்த தொழில்தருநரின் அல்லது ஆளின் முன்னர் பெறப்பட்ட சம்மதமில்லாமல் வெளியிடப்படுதலுமாகாது.

(4) தகவலானது எவரேனும் தனிப்பட்ட தொழில்தருநருடன் அல்லது ஆளுடன் தொடர்புபட்ட தகவலாகவுள்ளதென அடையாளங்காண்பதை வசதிப்படுத்தும் வகையில், ஆணையாளரினால் அல்லது அவரது அதிகாரத்தோடு செய்யப்பட்ட ஏதேனும் அறிக்கையில் அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் வெளியீட்டில் (1)ஆம் உட்பிரிவில் கொடுத்துதவப்பட்ட தகவலெதுவும் (ஒரு விபரத்திரட்டில் அடங்கியிருப்பினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி) அவ்வாறு ஒழுங்குபடுத்தப்படுதலாகாது.

(5) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ளதெதுவும் இக்கட்டளைச்சட்டம் தவிர்ந்த வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளினால் அல்லது அவற்றின் கீழ் எவரேனுமான் ஏதேனும் தகவலை வெளியிடுதல் அல்லது ஏதேனும் ஆவணத்தைக் காண்பித்தல் தடைசெய்யப்பட்டுள்ள ஏதேனும் விடயத்தில், ஏதேனும் தகவலை வெளியிடுமாறு அல்லது ஏதேனும் ஆவணத்தைக் காண்பிக்குமாறு அவ்வாளைக் கேட்டுக்கொள்வதாக அல்லது அனுமதிப்பதாகக் கருதப்படுதலாகாது.

55. (1) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கும், மட்டுப்பாடுகளுக்கும் அமைய, விதித்துரைக்கப்பட்ட அலுவலரொவ்வொருவரும் பின்வரும் தத்துவங்களை உடையவராதல் வேண்டும் :— விதித்துரைக்கப்பட்ட அலுவலர்களின் தத்துவங்கள்.

(அ) இக்கட்டளை சட்டத்தினால் அல்லது இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் வைத்திருக்கும்படி அல்லது வெளிக்காட்டிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்ட ஏதேனும் இடாப்பை, சம்பளப் பதிவேட்டை, அல்லது அறிவித்தலைப் பரிசோதனை செய்யும், அல்லது இக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்படுகின்றனவாவென்பதை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக, ஏதேனும் தொழிலில் வேலையாளர்கள் ஊழியத்துக்கமர்த்தப்பட்டுள்ள எவையேனும் வளவுகளினுள் அல்லது இடத்தினுள் அல்லது ஏதேனும் தொழிலிலுள்ள வெளிவேலையாளர்களுக்கு வேலை கொடுக்கப்படும் ஏதேனும் இடத்தினுள் பகலில் அல்லது இரவில் எல்லா நியாயமான நேரங்களிலும் பிரவேசித்துச் சோதனையிடுதல்; (பிரிவு 2 1956 ன் 24)

(ஆ) அவர் அத்தகைய எவையேனும் வளவுகளை அல்லது ஏதேனும் இடத்தைச் சோதனையிடும்போது அத்தகைய ஏதேனும் இடாப்பு அல்லது பதிவேடு பரிசோதனைக்குக் கிடைக்கக் கூடியதாகவிராதிருக்குமிடத்து, அத்தகைய இடாப்பை அல்லது பதிவேட்டைக் குறித்துரைக்கப்பட்ட ஒரு தேதியில் பரிசோதனைக்காக அத்தகைய வளவுகளில் அல்லது இடத்தில் அல்லது அவரது அலுவலகத்தில் காண்பிக்குமாறு கேட்டுக்கொள்ளுதல்;

(இ) இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்படுகின்றனவாவென்பதை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக, சம்பளச் சபையொன்று எத்தொழிலுக்காகத் தாபிக்கப்பட்டுள்ளதோ அத்தொழிலில் ஒரு தொழில்தருநரினால் ஊழியத்துக்கமர்த்தப்பட்டுள்ள எவரேனும் வேலையாளர்களுக்கு வதிவுமிடமொன்றாக அத்தொழில் தருநரினால் ஏற்பாடு செய்யப்பட்டதென நம்புவதற்கு அவருக்குக் காரணமுள்ள எவையேனும் வளவுகளினுள் பகலில் அல்லது இரவில் எல்லா நியாயமான நேரங்களிலும் பிரவேசித்துச் சோதனையிடுதல்; (பிரிவு 13 (2), 1957இன் 27).

(ஈ) அத்தகைய எவையேனும் வளவுகளில் அல்லது ஏதேனும் இடத்தில் அவர் காண்கின்றவரும், அத்தகைய வளவுகளில் அல்லது இடத்தில் கொண்டு நடாத்தப்படும் ஏதேனும் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒரு தொழிலாளர் அல்லது ஊழியத்துக்கமர்த்தப்பட்டுள்ள ஒரு வேலையாளர் என அல்லது அதன்கண் அவருக்கு வேலைகொடுக்கப்படும் ஒரு வேலையாளர் என அவர் நம்புவதற்கு நியாயமான காரணமுள்ளவருமான எவரேனுமானை விசாரணை செய்தல் ;

(உ) அத்தகைய ஏதேனும் இடாப்பின், சம்பளப் பதிவேட்டின் அல்லது அறிவித்தலின் அல்லது அத்தகைய ஏதேனும் இடாப்பின், பதிவேட்டின் அல்லது அறிவித்தலின் ஏதேனும் பாகத்தின் பிரதிகளை எடுத்தல்;

(1966ன் 24 ஆம் இல. 2 ஆம் பிரிவு) (ஊ) எவரேனுமாள் எவையேனும் வளவுகளில் அல்லது ஏதேனும் இடத்தில் உள்ள ஏதேனும் தொழிலில் வேலையாளர்களை ஊழியத்துக்கமர்த்தா தொழிந்துள்ளவிடத்து, அத்தகைய வளவுகளில் அல்லது இடத்தில் ஊழியத்துக் கமர்த்தப்பட்டிருந்த வேலையாளர்கள் தொடர்பில் இக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பேணப்படும்படி கேட்டுக் கொள்ளப்படும் அத்தகைய இடாப்பை அல்லது பதி வேட்டைக் காண்பிக்கும்படி கேட்டுக்கொள்ளுதல்.

(எ) அத்தகைய அலுவலரினால் குறித்துரைக்கப்பட வேண்டிய ஓர் இடத்திலும் ஒரு நேரத்திலும் ஏதேனும் தொழில் அல்லது தொழிலின் வகுப்புத் தொடர்பில் அல்லது வெளி வேலையாளர்கள் தொடர்பாக வேலைக்கான ஏதேனும் உடன்படிக்கையை கோருதலும், பரிசோதனைசெய்தலும் அதன் பிரதிகளை எடுத்தலும்;

(ஏ) ஏதேனும் இடத்தில் அல்லது எவையேனும் வளவுகளில் உள்ள ஏதேனும் தொழிலில் வேலையாளர்களை ஊழியத் துக்கமர்த்துதல் தொடர்பாக இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்பட்டிருந்தனவா என் பதை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக, ஏவரேனுமாளை எழுத்தில் அவருக்கு அறிவிக்கப்படக்கூடியவாறான அத் தகைய நேரத்திலும், இடத்திலும் எந்நாளிலும் சமூகமா யிருந்து, அத்தகைய அலுவரினால் கேட்டுக்கொள்ளக்கூடிய வாறான அத்தகைய தகவலை அல்லது விளக்கத்தைக் கொடுத்துதவுமாறும், அத்தகைய அலுவலரினால் அவரிடம் கேட்கப்படக்கூடியவாறான அத்தகைய கேள்விகளுக்கு விடையளிக்குமாறும் கேட்டுக்கொள்ளுதல்.

(2) தோட்டத் தொழிலாளர் (இந்திய) கட்டளைச் சட்டத்தின் 3ஆம் பிரிவினால் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறான எவரேனும் தொழிலாளி எத்தொழிலில் ஊழியத்துக்கமர்த்தப் பட்டுள்ளாரோ அத்தொழிலுக்காகச் சம்பளச் சபையொன்று தாபிக்கப்பட்டுள்ளவிடத்து, இந்தியக் குடிவரவுத் தொழிலாளர் கட்டளைச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட எவ ரேனும் முகவரும் அவரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரும், அத்தொழில் தொடர்பில், (1)ஆம் உட்பிரிவின் கீழ் விதித்துரைக்கப்பட்ட அலுவலர்களாகக் கருதப் படுதல் வேண்டுமென்பதுடன், அவ்வுட்பிரிவின் கீழ் விதித்துரைக் கப்பட்ட அலுவலரொருவருக்குள்ள எல்லாத் தத்துவங்களையும் உடையவராயிருத்தலும் வேண்டும்; அதற்கிணங்க அத்தத்துவங் களைப் பிரயோகிக்கலாம்.

56. வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக ஏது எவ்வாறிருப்பினும் —

*உறுப்பினரொருவருக்கு வருமதியாகவுள்ள பணத்தைச் சட்டமூலம் அறிவிடுவதற்கு தொழில் ஆணையாளருக்கு அல்லது பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கத்துக்கு உள்ள தத்துவம்.*

(அ) எவரேனும் தொழில்தருநரிடமிருந்து எவரேனும் வேலையாளருக்கு இக்கட்டளைச்சட்டத்தின் கீழ் போமதியான ஏதேனும் பணத்தொகையை அறவிடுவதற்கான வழக்கொன்று தொழில் ஆணையாளரின் பெயரில் அல்லது தொழிற்சங்கங்கள் கட்டளைச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதும் அவ்வேலையாளர் அதன் உறுப்பினரொருவராக இருப்பதுமான ஒரு தொழிற்சங்கத்தின் பெயரில் தகுதிவாய்ந்த நியாயாதிக்கமுடைய நீதிமன்றமொன்றில் தொடுக்கப்படலாம்;

(ஆ) தொழில்தருநரிடமிருந்து இரண்டு அல்லது அதற்கதிகமான வேலையாளர்களுக்கு இக்கட்டளைச்சட்டத்தின் கீழ் கொடுக்குமதியான எவையேனும் பணத்தொகைகள் தொழில் ஆணையாளரின் பெயரில் அல்லது தொழிற்சங்கங்கள் கட்டளைச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டதும் அவ்வேலையாளர்கள் உறுப்பினர்களாக இருப்பதுமான ஒரு தொழிற்சங்கத்தின் பெயரில் தொடுக்கப்பட்ட தனியொரு வழக்கில் வழக்குத் தொடுக்கப்படலாம்; (பிரிவு 19, 1957இன் 27).

(இ) எவரேனும் தொழில்தருநரிடமிருந்து எவரேனும் வேலையாளருக்கு இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் கொடுக்குமதியான ஏதேனும் பணத்தொகையை அறவிடுவதற்கான வழக்கொன்று அப்பணத்தொகை கொடுக்குமதியாக வந்துள்ள பின்னர் நான்காண்டுகளினுள் அது தொடுக்கப்படின், நடாத்தப்படற்பாலதாதல் வேண்டும்; (பிரிவு 5, 1962இன் 27).

(ஈ) தொழில் ஆணையாளரின் பெயரில் தொடுக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் வழக்கில், அவர், எவரேனும் பிரதி அல்லது உதவித்தொழில் ஆணையாளரினால் அல்லது எவரேனும் தொழிற் சோதனையாளரினால் பிரதிநிதித்துவப் படுத்தப்படலாம்; அத்துடன்

(உ) தொழிற்சங்கமொன்றன் பெயரில் தொடுக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் வழக்கில் அத்தகைய சங்கம் அதன் அலுவலர்களுள் எவரினாலும் பிரதிநிதித்துவப்படுத்தப்படலாம்.

*சம்பளங்கள், தொழிலின் சொத்துக்களின் மீது முதற் பொறுப்பாதல் வேண்டும்.*

57. ஏதேனும் தொழிலிலுள்ள வேலையாளர் எவருக்கும் சம்பளமாக ஏதேனும் பணத்தொகையை இக்கட்டளைச்சட்டத்தின் கீழ் செலுத்துவதற்கு அத்தகைய வேலையாட்களின் தொழில்தருநருக்குள்ள பொறுப்பு, வேறேதேனும் சட்டத்தில் ஏது எவ்வாறிருப்பினும், அத்தொழிலின் சொத்துக்கள்மீது முதற் பொறுப்பாதல் வேண்டும்.

சேவைச் சான்றிதழ் (பிரிவு 26, 1957 இன் 27).

57. (அ) எத்தொழிலுக்காகச் சம்பளச் சபையொன்று தாபிக்கப்பட்டுள்ளதோ அத்தொழிலில் ஊழியத்துக்கமர்த்தப்பட்ட எவரேனும் வேலையாளரின் தொழில்பழகுநரின் அல்லது தொழில்பயிலுநரின் ஊழியம் முடிவுறுத்தப்படுமிடத்து, விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விபரங்களைக் கொண்டுள்ள சான்றிதழொன்றை அவரது தொழில்தருநர் அவருக்கு வழங்குதல் வேண்டும்.

தவறுகள்.

58. (அ) அலுவலரொருவரின் ஏதேனும் பிரவேசத்துக்கு அல்லது சோதனையிடுகைக்கு அல்லது 55ஆம் பிரிவின் கீழ் அவரது தத்துவங்களின் பிரயோகத்துக்கு அவசியமானதாகக் அவரினால் கேட்டுக்கொள்ளப்பட்ட வழிவகைகளைக் கொடுத்துதவத் தவறுகின்ற; அல்லது

(பிரிவு 21, 1957இன் 27).

(ஆ) அப்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கையில் எவரேனும் அலுவலரைத் தடங்கல் செய்கின்ற அல்லது தாக்குகின்ற; அல்லது

(இ) அப்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் எவரேனும் அலுவலர் காண்பிக்கும்படி அல்லது கொடுக்கும்படி அவரைக் கேட்டுக்கொள்கின்ற ஏதேனும் இடாப்பை, சம்பளப் பதிவேட்டை அல்லது அறிவித்தலைக் காண்பிக்க, அல்லது ஏதேனும் தகவலைக் கொடுக்கப் போதிய காரணமின்றி மறுக்கின்ற அல்லது தவறுகின்ற; அல்லது

(இஇ) 55ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் கீழ் வேறெவரேனுமாளின் விசாரணையின்போது அத்தகைய வேறு ஆளிடம் விதித்துரைக்கப்பட்ட அலுவலரொருவரால் கேட்கப்பட்ட ஏதேனும் கேள்விக்கு விடையளிப்பதிலிருந்து அத்தகைய வேறு ஆளைத் தடுக்கின்ற அல்லது தடுக்க எத்தனிக்கின்ற; அல்லது

(ஈ) அது பொய்யானதென அறிந்துகொண்டு, அப்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயலாற்றுகின்ற எவரேனும் அலுவலருக்கு, ஏதேனும் முக்கியமான விபரத்தில் பொய்யானதாகவுள்ள ஏதேனும் இடாப்பை, சம்பளப் பதிவேட்டை அல்லது அறிவித்தலைத் தயாரிக்கின்ற அல்லது தயாரிப்பிக்கின்ற அல்லது அத்தகைய ஏதேனும் இடாப்பை, பதிவேட்டை அல்லது அறிவித்தலைக் காண்பிக்கின்ற அல்லது காண்பிக்கச்செய்கின்ற அல்லது அறிந்துகொண்டு காண்பிக்க அனுமதிக்கின்ற; அல்லது

(உ) அது பொய்யானதென அறிந்துகொண்டு, அப்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயலாற்றுகின்ற எவரேனும் அலுவலருக்கு ஏதேனும் தகவலைக் கொடுத்துதவுகின்ற; அல்லது

(ஊ) 54ஆம் பிரிவின் கீழ் ஆணையாளரினால் விடுக்கப்பட்ட பணிப்பொன்றுடன் இணங்கியொழுகுவதில் தவறுகை புரிகின்ற, அல்லது, அப்பிரிவின் கீழ் ஒரு விபரத்திரட்டைக் கொடுத்துதவும்படி கோரப்படும்போது, பொய்யான விபரத்திரட்டை அல்லது ஏதேனும் பொய்யான கூற்றைக் கொண்டுள்ள விபரத்திரட்டை அறிந்துகொண்டு தயாரிக்கின்ற அல்லது கொடுத்துதவுகின்ற அல்லது தயாரிப்பிக்கின்ற அல்லது கொடுத்துதவச் செய்கின்ற; அல்லது

(எ) தண்டமெதுவும் விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்டிராத ஏதேனும் விடயத்தில், இக்கட்டளைச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின் அல்லது ஏதேனும் ஒழுங்குவிதியின் மீறுகையைப் புரிகின்ற,

ஆளொவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்தண்டனைக்கு, அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்தண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

நானாவிதமானவை

தொழில் தருநரின் முகவருக்குள்ள பொறுப்பு.

59. (1) இக்கட்டளைச்சட்டத்தின் கீழ் எத்தவறுக்குத் தொழில்தருநர் ஆளாகவுள்ளாரோ அத்தவறொன்று தொழில்தருநரின் எவரேனும் முகவரினால் அல்லது வேறு ஆளினால் உண்மையில் புரியப்பட்டுள்ளவிடத்து, அம்முகவர் அல்லது வேறாள், அவரே தொழில்தருநரென்றாற்போன்று அதே முறையிலும், அத்துடன் ஒன்றில் தொழில்தருநருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதுடனோ அல்லது அதற்கு முன்னரோ அல்லது பின்னரோ அத்தவறுக்காக அவருக்கெதிராக நடவடிக்கையெடுக்கப் படுவதற்கு ஆளாதல் வேண்டுமென்பதுடன், தொழில்தருநர் எத்தண்டனைக்கு ஆளாகவுள்ளாரோ அதே தண்டனைக்கு அவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அவர் ஆளாதலும் வேண்டும்.

(2) இக்கட்டளைச் சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிந்துள்ளாரெனக் குற்றஞ்சாட்டப்பட்ட தொழில்தருநரொருவர், இக்கட்டளைச் சட்டம் நிறைவேற்றப்படுவதனை உறுதிப்படுத்துவதற்குத் தாம் உரிய விழிப்புக் கவனம் செலுத்தியுள்ளாரென்றும், தவறானது உண்மையில் அவரது முகவரினால் அல்லது வேறெவரேனுமாளினால் தம்து அறிவின்றியும், சம்மதமின்றியும் அல்லது உடந்தையின்றியும் புரியப்பட்டதெனறும் நீதிமன்றத்தின் திருப்திக்கு எண்பிக்குமிடத்து, எவ்வாறாயினும், சம்பளம் என்ற கணக்கால் வேலையாளருக்குக் கொடுக்குமதியாகத் தோன்றுகின்ற ஏதேனும் பணத்தொகையைச் செலுத்தும்படி அவருக்குக் கட்டளையிடுவதற்கு 44 (3)ஆம் பிரிவின் கீழ் அல்லது 46 (1)ஆம் பிரிவின் கீழ் நீதிமன்றத்திற்குள்ள தத்துவத்துக்குப் பங்கமின்றி அத்தவறுதொடர்பில் ஏதேனும் தண்டத்திலிருந்து அவர் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

59. (அ) (1) எவரேனுமாள், தொழில் என்றவகையாக அல்லது ஏதேனும் வர்த்தக நோக்கத்துக்காக, வேறெவரேனு மாளுடன், அத்தகைய வேருளினுல் ஏதேனும் வேலை நிறை வேற்றப்படுவதற்காக, வெளிப்படையான அல்லது உட்கிடை யான ஏதேனும் ஒழுங்கைச் செய்யுமிடத்தும், அத்துடன் அத் தகைய ஒழுங்கைப் பின்பற்றி அத்தகைய வேருள் அத்தகைய வேலையை நிறைவேற்றுவதற்காக வேலையாளர்களை ஊழியத்துக் கமர்த்துமிடத்தும், ஆணையாளர், அவசியமெனத் தாம் கருதக் கூடியவாறுன அத்தகைய விசாரணையின் பின்னர், அவ்வாறு செய்வது உசிதமானதென அவர் கொள்ளுமிடத்து,—

தொழில் என்ற வகையாக அல்லது ஏதேனும் வர்த்தக நோக்கத்துக் காகச் செய்யப்பட்ட ஒழுங்கொன்றின் கீழ் வேலை செய்வதற்கு ஆட்கள் ஊழியத்துக் கமர்த்தப் படுமிடத்து ஏற்புடையனவான விசேட ஏற்பாடுகள்.

(அ) அமைச்சரின் அங்கீகாரத்தோடு, அத்தகைய ஒழுங்கின் கீழ் அத்தகைய வேலையை நிறைவேற்றுது தவிர்க்கும்படி அத்தகைய முதற்கூறப்பட்ட ஆளை எழுத்தில் பணிக்க லாம்: அல்லது

(ஆ) குறித்துரைக்கப்பட்ட ஒரு தேதிக்கு முன்னர் பின்வருவன வற்றை ஆணையாளருக்குக் கொடுத்துதவும்படி அத்தகைய முதற்கூறப்பட்ட ஆளை எழுத்தில் பணிக்கலாம் :— (பிரிவு 3, 1966 இன் 24).

(i) மேற்கூறப்பட்ட ஒழுங்கு எழுத்தில் இருக்குமிடத்து ஆணையாளர் கேட்டுக்கொள்ளக்கூடியவாறு ஒழுங் குக்கான திறத்தவர்களின் பெயர்களையும், முகவரி களையும், அத்தகைய ஒழுங்கு தொடர்பான அத் தகைய வேறு தகவலையும், விபரங்களையும் எந்த வேலையை நிறைவேற்றுவதற்காக அந்த ஒழுங்கு செய்யப்பட்டதோ அந்த வேலையையும் குறித் துரைத்து அத்தகைய ஒழுங்கின் அத்தாட்சிப்படுத் தப்பட்ட பிரதியொன்று: அத்துடன்

(ii) மேற்கூறப்பட்ட ஒழுங்கு எழுத்தில் இல்லாதிருக்கு மிடத்து, ஆணையாளர் கேட்டுக்கொள்ளக்கூடிய வாறு அத்தகைய ஒழுங்கு தொடர்பான அத் தகைய தகவலும், விபரங்களும் எந்த வேலையை நிறைவேற்றுவதற்காக அத்தகைய ஒழுங்கு செய் யப்பட்டதோ அந்த வேலையும்.

(2) முதலாம் உட்பிரிவின் கீழ் ஆணையாளரினால் விடுக்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கு இணங்கியொழுகுவதில் தவறுகை புரியும் ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணத்துக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற் தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்தண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்; அத்துடன் தவறுகையானது (1)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் விடுக்கப்பட்ட ஏதேனும் பணிப்புத் தொடர்பிலானதாக இருக்குமிடத்து, குற்றத்தீர்ப்பின் பின்னர் தவறு புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கும் மேலும் ஆளாதல் வேண்டும்.

(3) எவரேனுமாள், தொழில் என்றவகையாக அல்லது ஏதேனும் வர்த்தக நோக்கத்துக்காக, வேறெவரேனுமாளுடன், அத்தகைய வேறாளினால் ஏதேனும் வேலை நிறைவேற்றப்படுவதற்காக, வெளிப்படையான அல்லது உட்கிடையான ஏதேனும் ஒழுங்கைச் செய்யுமிடத்து, அப்பொழுது —

(அ) அத்தகைய வேலையை நிறைவேற்றுவதில் அத்தகைய வேறாளினால் ஊழியத்துக்கமர்த்தப்பட்ட எவரேனும் வேலையாளருக்கு இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கவுள்ள சம்பளம் செலுத்தப்படுமென முதற்கூறப்பட்ட ஆள் உறுதிப்படுத்துதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அத்தகைய வேலையை நிறைவேற்றுவதில் அவரினால் ஊழியத்துக்கமர்த்தப்பட்ட எவரேனும் வேலையாளருக்கு இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் சம்பளம் செலுத்துவதற்கு அத்தகைய வேறாள் தவறுமிடத்து, முதற்கூறப்பட்ட ஆள், அத்தகைய வேறாளினால் அத்தகைய சம்பளம் கொடுப்பனவு செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு உரிய எல்லா விழிப்புக் கவனத்தையும் தாம் பிரயோகித்தாரென்றும் செயல்முறைக்குகந்த எல்லா வழிமுறைகளையும் தாம் எடுத்தாரென்றும் நீதிமன்றத்தின் திருப்திக்கு எண்பித்தாலொழிய, இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அவ்வேலையாளருக்குப் போமதியான சம்பளத்தைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

60. இக்கட்டளைச் சட்டத்தின் கீழான ஏதேனும் தவறுக்கான குற்றவழக்கெதுவும் — ஆணையாளரின் அனுமதியுடனன்றியும் தவறு புரியப்பட்டதிலிருந்து நான்கு ஆண்டுகளினுள்ளன்றியும் குற்ற வழக்கு இல்லை. (பிரிவு 6, 1978 இன் 10).

(அ) (அ) ஆணையாளரின் எழுத்திலான அனுமதியுடனன்றியும் அத்துடன்

(ஆ) தவறு புரியப்பட்டதிலிருந்து ஆறாண்டுகளினுள்ளன்றியும், ஏதேனும் நீதிமன்றத்தில் தொடுக்கப்படலாகாது.

தவறுகளுக்கான விளக்க நீதிமன்றம்.

61. இக்கட்டளைச் சட்டத்தின் கீழான எல்லாத் தவறுகளும் நீதவானொருவரினால் சுருக்கமுறையில் விளங்கப்படற்பாலனவாதல் வேண்டும்.

கட்டளைச் சட்டத்தின் கீழான உரிமைகளிலிருந்து அல்லது பொறுப்புக்களிலிருந்து ஒப்பந்தஞ் செய்தல்.

62. இக்கட்டளைச் சட்டத்தினால் அல்லது இதன்கீழ் வேலையாளரொருவருக்குள்ள ஏதேனும் உரிமை அவருக்குப் பாதகமாகவிருக்கும் முறையில் எவ்வகையிலும் அதன்மூலம் பாதிக்கப்படுகின்ற அல்லது திரிபுபடுத்தப்படுகின்ற அல்லது எவரேனும் தொழில்தருநருக்குள்ள பொறுப்பு எதுவும் எவ்வகையிலும் அதன் மூலம் அகற்றப்படுகின்ற அல்லது குறைக்கப்படுகின்ற ஏதேனும் ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை, அது இக்கட்டளைச் சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு முன்னர் அல்லது தேதிக்குப் பின்னர் செய்யப்பட்டிருப்பினும், அத்தகைய ஏதேனும் உரிமையை அது பாதிப்பதாக அல்லது திரிபுபடுத்துவதாக அல்லது அத்தகைய ஏதேனும் பொறுப்பை அது அகற்றுவதாக அல்லது குறைப்பதாகக் கொள்ளப்படுகின்ற அளவுக்கு, வெற்றானதும் வறிதானதுமாதல் வேண்டும்.

## ஒழுங்குவிதிகள்

ஒழுங்கு விதிகள்.

63. (1) இக்கட்டளைச் சட்டத்தின் நெறிகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றும் அல்லது அவற்றுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாகவும், (1)ஆம் உட்பிரிவில் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும், அமைச்சர், பின்வரும் எல்லாக் கருமங்களுக்காகவும் அல்லது அவை தொடர்பில் அல்லது அவற்றுள் எதற்காகவும் அல்லது அதுதொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :—

(அ) விதித்துரைக்கப்படவேண்டுமென இக்கட்டளைச் சட்டத்தில் கூறப்பட்ட அல்லது கேட்டுக்கொள்ளப்பட்ட எல்லாக் கருமங்களும்;

(ஆ) இக்கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லாப் படிவங்களும்;

(இ) அக்கருமத்தைச் செயல்முறைக்குகந்தவரையில் அதன் மூலம் பாதிக்கப்படும் ஆட்களின் அறிவுக்குக் கொண்டுவரும் நோக்குடன், இக்கட்டளைச் சட்டத்தின் கீழான ஏதேனும் கருமம்பற்றிக் கொடுபடவேண்டிய அறிவித்தல்;

(ஈ) சம்பளச் சபையுறுப்பினர்களுக்கு ஊதியம் அல்லது படிகள் கொடுப்பனவு செய்தலும், அத்தகைய ஊதியத்தை அல்லது படிகளைக் கணிக்கும் விதமும்;

(உ) இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளை வலுவுறுத்துவதில் ஊழியத்துக்கமர்த்தப்பட்ட அலுவலர்களுக்குப் படிகள் கொடுப்பனவு செய்தலும் அத்தகைய படிகளைக் கணிக்கும் விதமும்;

(ஊ) ஏதேனும் தொழிலிலுள்ள வாழ்க்கைத் தரங்களையும் வேலை நிலைமைகளையும் ஆணையாளரின் பணிப்புகளினால் அல்லது பணிப்புகளின் கீழ் நுண்ணாய்வு செய்தல்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அத்தகைய ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென்ற பிரேரணை ஒன்றம் மூலம் மூதவை முன்னரும் பிரதிநிதிகள் சபை முன்னரும் கொண்டுவரப்படுதல் வேண்டும். அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதியெதுவும், மூதவையினாலும் பிரதிநிதிகள் சபையினாலும் அது அங்கீகரிக்கப்பட்டிருந்தாலொழிய, பயனுடையதாதல் ஆகாது. அத்தகைய அங்கீகாரம் பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதியொன்று, மூதவையினாலும், பிரதிநிதிகள் சபையினாலும் அங்கீகரிக்கப்படும் போது, அத்தகைய அங்கீகாரம் பற்றியும் வர்த்தமானியிலான அறிவிப்பின்மேல், அது இதன்கண் சட்டமாக்கப்பட்டாற் போன்று செல்லுபடியும் பயனும் உடையதாதல் வேண்டும்.

பொருள்கோடல்

64. இக்கட்டளைச் சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய — பொருள் கோடல்.

" உதவித் தொழில் ஆணையாளர் " என்பது, உதவித் தொழில் ஆணையாளராக அப்போதைக்குப் பதவிவகிக்கின்ற எவரேனுமாள் என்று பொருளாகும்;

" ஆணையாளர் " என்பது, தொழில் ஆணையாளர் என்ற பதவியை அப்போதைக்கு வகிக்கின்ற ஆள் என்று பொருளாகு மென்பதுடன், இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆணையாளருக்குள்ள குறிப்பிட்ட ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி தொடர்பில் 53ஆம் பிரிவின் கீழ் ஆணையாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளையும் உள்ளடக்கும்; (பிரிவு 22, 1957இன் 27).

" பிரதி ஆணையாளர் " என்பது, பிரதித் தொழில் ஆணையாளராக அப்போதைக்குப் பதவிவகிக்கின்ற எவரேனுமாள் என்று பொருளாகும்;

" தொழில்தருநர் " என்பது, ஏதேனும் தொழிலிலுள்ள எவரேனும் வேலையாளரைத் தமது சொந்தச்சார்பில் ஊழியத்துக் கமர்த்துகின்ற, அல்லது அவரது சார்பில் வேறெவரேனுமாள்

ஊழியத்துக்கமர்த்துகின்ற எவரேனுமாள் என்று பொருளாகு மென்பதுடன், ஏதேனும் தொழிலிலுள்ள எவரேனும் வேலையாளரை வேறெவரேனுமாளின் சார்பில் ஊழியத்துக்கமர்த்துகின்ற எவரேனுமாளையும் உள்ளடக்கும்.;

'' மேலதிகநேரம் '' என்பது வழமையான வேலைநாளொன்ருக அல்லது வழமையான வேலைவாரமொன்ருக அமைகின்ற மணித்தியாலங்களின் எண்ணிக்கையை விஞ்சுகின்ற நேரம் என்று பொருளாகும்;

'' விதித்துரைக்கப்பட்ட '' என்பது, ஒழுங்குவிதியினுல் விதித்துரைக்கப்பட்ட என்று பொருளாகும்;

'' ஒழுங்குவிதி '' என்பது, இக்கட்டளைச்சட்டத்தின் கீழ் அமைச்சரினுல் ஆக்கப்பட்ட ஓர் ஒழுங்குவிதி என்று பொருளாகும்;

'' பிரதிநிதித்துவ உறுப்பினர்கள் '' என்பது, ஏதேனும் தொழிலிலுள்ள, விடயத்துக்கேற்ப, தொழில்தருநர்களை அல்லது வேலையாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கென நியமிக்கப்பட்ட சம்பளச் சபையொன்றன் உறுப்பினர்கள் என்று பொருளாகும்;

''தொழில்'' என்பது, தொழில்தருநர் அல்லது வேலையாளர் ஒருவரினுல் நிறைவேற்றப்பட்ட, புரியப்பட்ட அல்லது பிரயோகிக்கப்பட்ட ஏதேனும் கைத்தொழில், வியாபாரம், பொறுப்பு முயற்சி, தான்புரிதொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில் என்பவற்றையும், ஏதேனும் தொழிலின் ஏதேனும் கிளையையும், அல்லது அதிலுள்ள ஏதேனும் பணியையும் அல்லது நடைமுறையையும் உள்ளடக்கும், ஆனுல், இளந்தவருளர்களுக்கு அல்லது அனுதைகளுக்கு அல்லது இலம்பாடுற்ற, வாய்பேசமுடியாத, காது கேட்காத அல்லது குருடுள்ள ஆட்களுக்குக் கைத்தொழிற் பயிற்சியை முக்கியமாகக் கொடுக்கும் நோக்கத்துடன் கொண்டு நடாத்தப்படுகின்ற ஏதேனும் கைத்தொழிலை, வியாபாரத்தை அல்லது பொருப்பு முயற்சியை உள்ளடக்காது.

'' சம்பளம் '' என்பது, மேலதிக நேரவேலை அல்லது ஏதேனும் விடுமுறைநாள் தொடர்பில் வருமதியான ஏதேனும் ஊதியத்தையும் உள்ளடக்கும்;

'' சம்பளக் காலப்பகுதி '' என்பது, எவரேனும் வேலையாளருக்கு இக்கட்டளைச்சட்டத்தின் கீழ் எக்காலப்பகுதி தொடர்பில் சம்பளம் செலுத்தப்படற்பாலதோ அக்காலப்பகுதி என்று பொருளாகும்;

'' வேலையாளர் '' என்பது; ஏதேனும் தொழிலில் ஏதேனும் வேலையைப் புரிவதற்கென ஊழியத்துக்கமர்த்தப்பட்ட எவரேனுமாள் என்று பொருளாகும்.

கட்டளைச்சட்டத்தின் பயன்

65. இக்கட்டளைச்சட்டத்தில் வெளிப்படையாக வேறுவகை
யில் ஏற்பாடுசெய்யப்பட்டதனைத் தவிர, இக்கட்டளைச்சட்டத்தின்
ஏற்ப டுகள், இக்கட்டளைச்சட்டம் தவிர்ந்த வேறு எழுத்திலான
சட்டமெதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், பய
னுடையவையாதல் வேண்டும்; அத்துடன் இக்கட்டளைச்
சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அத்தகைய வேறு சட்டத்தின்
ஏற்பாடுகளுக்குமிடையே முரண்பாடு அல்லது ஒவ்வாமை இருக்
கும் ஏதேனும் விடயத்தில், இக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள்
மேலோங்கி நிற்றல் வேண்டும்.

எழுத்திலான வேறு சட்டத்துடன் முரண்படும் விடயங்களில் கட்டளைச் சட்டம்

# 1971 ஆம் ஆண்டின் சம்பளச் சபை ஒழுங்குவிதிகள்

(136ஆம் அத்தியாயமான) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 63ஆம் பிரிவின் கீழ் தொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டவையும், அப்பிரிவின் கீழ் முதலைவயினாலும் பிரதிநிதிகள் சபையினாலும் அங்கீகரிக்கப்பட்டவையுமான ஒழுங்கு விதிகள்.

4-6-71இன் 14961ஆம் இலக்க வர்த்தமானி

எம். பீ. டி. இசட். சிறிவர்தன
தொழில் அமைச்சர்.

கொழும்பு, மே 28, 1971.

## ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்கு விதிகள் 1971 ஆம் ஆண்டின் சம்பளச் சபை ஒழுங்கு விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) ஒரு வேலையாளரின் சம்பளத்திலிருந்து செய்யப்படும் கழிப்பனவுகள், பின்வருவன தொடர்பில், கட்டளைச்சட்டத்தின் 2ஆம் பிரிவுக்கிணங்கத் தொழில்தருநரினால் செய்யப்படுதல் வேண்டும் :—

(அ) தொழில்தருநரினால் வேலையாளருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் உணவுப்பொருளின் விலை; அத்தகைய விலை, அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் அப்பொருளுக்கென நிர்ணயிக்கப்பட்ட ஆகக்கூடிய விலை ஏதேனுமிருப்பின் அதனை விஞ்சுதலாகாது;

(ஆ) (i) ஏதேனும் ஓய்வூதிய நிதியத்துக்கு, சகாய நிதியத்துக்கு, காப்புறுதித் திட்டத்துக்கு, சேமிப்புத் திட்டத்துக்கு, அல்லது மருத்துவ அல்லது சுகவீன நன்மைத் திட்டத்துக்கு, அல்லது ஆணையாளரினால் எழுத்தில் அங்கீகரிக்கப்பட்ட வேறேதேனும் ஒத்த நிதியத்துக்கு அல்லது திட்டத்துக்குத் தொழில்தருநரின் ஊடாக வேலையாளர் செலுத்துவதற்கு விரும்புகின்ற ஏதேனும் உதவுதொகை;

(ii) தொழில் ஆணையாளரினால் எழுத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் சேமநலத் திட்டத்துக்கு தொழிற் சங்கத்துக்கு அல்லது கோயில் நிதியத்திற்குத் தொழில்தருநரின் ஊடாக வேலையாளர் செலுத்துவதற்கு விரும்புகின்ற ஏதேனும் உதவுதொகை அல்லது ஒப்பப்பணம்;

(இ) தொழில்தருநரினால் வேலையாளருக்கு ஏற்பாடு செய்யப்பட்ட வீட்டு இடவசதி எதனதும் வாடகை; அத்தகைய வாடகைத்தொகை பின்வருமாறுதல் வேண்டும் :

(i) அத்தகைய இடவசதியின் வாடகைப் பெறுமதி அத்தகைய இடவசதி அமைந்துள்ள இடப்பரப்பின் உள்ளூரதிகாரசபையினால் மதிப்பீடு செய்யப்பட்டு உள்ள ஒரு விடயத்தில், அத்தகைய வாடகைப் பெறுமதியை விஞ்சுதலாகாது; அத்துடன்

(ii) அத்தகைய மதிப்பீடெதுவும் செய்யப்பட்டிராத வொரு விடயத்தில், அத்தகைய இடவசதியின் மீது பெறப்பட்ட மூலதனச் செலவினத்தின் ஆண்டொன்றுக்கு ஆறு சதவீதத்தை விஞ்சுதலாகாது;

(ஈ) வேலையாளரினால் பிணைப்பொறுப்பாகக் கொடுத்துதவப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்பட்ட தொகை; அத்தகைய கழிப்பனவுத் தொகை, ஆணையாளரினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான சம்பளத்தின் அத்தகைய சதவீதத்தை விஞ்சாமலும், அவரினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு நிபந்தனைகளுக்கமையவும் இருத்தல் வேண்டும்;

(உ) இதற்கான அட்டவணையில் தரப்பட்ட திரல் அவில் குறித்துரைக்கப்பட்டதும், தொழில்தருநரினால் வேலையாளருக்காக ஏற்பாடுசெய்யப்பட்டதும், ஏதேனும் சேவைக்கான இறுப்பனவாக ஆணையாளரினால் எழுத்தில் அங்கீகரிக்கப்பட்டதுமான ஒரு தொகை;

(ஊ) வேலையாளரின் உபயோக இடத்தில் விற்பனைக்கென வைத்திருக்கப்பட்ட பண்டங்களிலிருந்து தொழில்தருநரினால் வேலையாளருக்கு விற்கப்பட்ட எவையேனும் பண்டங்களின் விலை: அத்தகைய இடம்; ஆணையாளரினால் எழுத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு கடையாக, அல்லது வேறு தாபனமாக இருத்தலும், அத்தகைய விலை, அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் அப்பொருளுக்கென நிர்ணயிக்கப்பட்ட ஆகக்கூடிய விலை ஏதேனுமிருப்பின் அதனை விஞ்சாததாக இருத்தலும் வேண்டும்;

(எ) இப்பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியிற் குறிப்பிடு செய்யப்பட்ட ஏதேனும் நிதியத்திலிருந்து அல்லது திட்டத்திலிருந்து வேலையாளரினால் எடுக்கப்பட்ட ஏதேனும் கடன் அல்லது சம்பளக் காலப்பகுதிக்கென வேலையாளருக்குச் செலுத்தப்படற்பாலதான சம்பளத்திலிருந்து செலுத்தப்பட்ட ஒரு முற்பணம் அல்லாததும், தொழில்தருநரினால் வேலையாளருக்குக் கொடுக்கப்பட்டதுமான ஏதேனும் முற்பணம்;

(ஏ) இப்பந்தியின் (எ) என்னும் உட்பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கடனின் மீது அல்லது முற்பணத்தின் மீது இறுக்கப்படற்பாலதான ஏதேனும் வட்டி; ஆயின —

4-6-71ஆம் 14961ஆம் இலக்க வர்த்தம.

(i) இப்பந்தியின் (எ) என்னும் உட்பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட கடனொன்றன் விடயத்தில், இறுக்கப்பட்ட வட்டி, ஆணையாளரினால் எழுத்தில் அங்கீகரிக்கப்படக்கூடியவாறுக ஆண்டொன்றுக்கான அத்தகைய வீதத்தை விஞ்சுதலாகாது;

(ii) தொழில்தருநரினால் வேலையாளருக்குக் கொடுக்கப்பட்ட ஒரு முற்பணத்தின் விடயத்தில், முற்பணமாகக் கொடுக்கப்பட்ட தொகை நடப்புச் சம்பளக் காலப்பகுதிக்குச் சம்பளமாக வருமதியாகவுள்ள தொகைக்குக் குறைவாக இல்லாதிருப்பின் மட்டுமே வட்டி இறுக்கப்படற்பாலதாதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு இறுக்கப்பட்ட வட்டி வீதம் அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப்பட்ட தொகையின் ஆண்டொன்றுக்கு ஆறுசதவீதத்தை விஞ்சுதலுமாகாது;

(ஐ) இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள நிரல் ஆ வில் குறித்துரைக்கப்பட்டதும், ஏதேனும் செயல் அல்லது செய்யாமை தொடர்பில் தொழில்தருநரினால் வேலையாளர் மீது விதிக்கப்பட்டதுமான ஏதேனும் குற்றப்பணம்; எவ்வாறாயினும், ஏதேனும் ஒரு நேரத்தில் அத்தகைய குற்றப்பணங்கள் தொடர்பில் செய்யப்பட்ட கழிப்பனவுகளின் கூட்டுமொத்தம், அத்தகைய குற்றப்பணங்கள் கழிக்கப்பட்ட காலப்பகுதியின்போது வேலையாளரினால் உழைக்கப்பட்ட சம்பளத்தின் ஐந்து சதவீதத்தை விஞ்சுதலாகாது; ஆயின், எவ்வாறாயினும், குற்றப்பணங்கள் ஐந்து சதவீதத்தை விஞ்சுமிடத்து, தொழில் ஆணையாளரின் அதிகாரம் தொழில்தருநரினால் பெறப்படுதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதியின் (1)ஆம் பந்தியின் (1)ஆம் உட்பந்தியின் கீழ் செய்யப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஒவ்வொரு கழிப்பனவும், அத்தகைய கழிப்பனவுத் தொகை, ஆணையாளரினால் எழுத்தில் அங்கீகரிக்கப்படக்கூடியவாறு வேலையாளருக்கு நன்மைபயக்கும் அத்தகைய நோக்கங்களுக்குத் தொழில்தருநரினால் பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்ற நிபந்தனைக்கு அமையவிருத்தல் வேண்டும்.

3. ஏலவே உழைக்கப்படாத சம்பள முற்பணமாக அமைகின்ற ஏதேனும் பணத்தொகையின் கழிப்பனவு, ஆறு மாதங்களுக்கு குறையாத காலப்பகுதியொன்றினுள்ளாக சமமான தவணைப் பணங்களில் வேலையாளரொருவரின் சம்பளத்திலிருந்து செய்யப்படுதல் வேண்டும்.

4. சம்பளக் காலப்பகுதிக்கென வேலையாளருக்குச் செலுத்தப்பாற்பாலதான சம்பளத்திலிருந்து செலுத்தப்பட்ட முற்பணமாகவுள்ளதும், வேலையாளருக்கு அவரது தொழில்தருநரினுல் கொடுக்கப்பட்டதுமான ஏதேனும் முற்பணம் தொடர்பில் கழிப்பனவைச் செய்தபின்னர், ஏனைய கழிப்பனவுகள் எவையேனுமிருப்பின் அவை, இவ்வொழுங்குவிதிகளின் 2ஆம் ஒழுங்குவிதியின் (1)ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள முன்னுரிமை வரிசைப்படி செய்யப்படுதல் வேண்டும்.

5. கட்டளைச்சட்டத்தின் 52ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட பின்வரும் அலுவலர்கள், அதன் 3 (2)ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக விதித்துரைக்கப்பட்ட அலுவலர்களாதல் வேண்டும் :-

பிரதித் தொழில் ஆணையாளர்.
சிரேஷ்ட உதவித் தொழில் ஆணையாளர்.
உதவித் தொழில் ஆணையாளர்.
தொழில் மருத்துவ அலுவலர்.
தொழில் புள்ளிவிபரவியலாளர்.
சம்பளச் சபையின் செயலாளர் (அல்லது கூட்டுச் செயலாளர்களுள் ஒவ்வொருவரும்).
சம்பளச் சபையின் உதவிச் செயலாளர்.

தொழிற் திணைக்களத்தின் தொழிற் புள்ளிவிபர அலுவலர்கள்.

தொழிற் திணைக்களத்தின் தொழில் அலுவலர்கள்.
தவிசாளர், கொழும்புத் துறைமுக ஆணைக்குழு.

தொழில் முகாமையாளர், கொழும்புத் துறைமுக ஆணைக்குழு.

1ஆம் தரத்திலுள்ள கொழும்புத் துறைமுக ஆணைக்குழுவின் தொழில் அலுவலர்கள்.

6. (1) எத்தொழில்தருநர் தொடர்பில் அல்லது எவ்வேலையாளர்கள் தொடர்பில் பிரதிநிதித்துவ உறுப்பினர்கள் சம்பளச் சபையொன்றுக்கு நியமிக்கப்படவுள்ளனரோ அத்தொழில்தருநரின் அல்லது வேலையாளர்களின் ஏதேனும் தொழிற்சங்கம், கழகம் அல்லது வேறு ஒழுங்கமைப்பு உள்ளவிடத்து, ஆணையாளர், அத்தகைய உறுப்பினர்கள் நியமிக்கப்படுவதற்கு முன்னர் ஏதேனும் நியாயமான நேரத்தில், ஓர் எழுத்திலான வேண்டுகோளில் குறித்துரைக்கப்பட்ட ஒரு தேதியன்று அல்லது அதற்கு முன்னர், அத்தகைய உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதற்கு அத்தகைய சங்கம், கழகம் அல்லது ஒழுங்கமைப்பு எவ்வாட்களை விரும்புகிறதோ அவ்வாட்கள் பற்றிய நிரலொன்றைத் தமக்குக் கொடுத்துதவும்படி அத்தகைய சங்கத்துக்கு, கழகத்துக்கு அல்லது ஒழுங்கமைப்புக்கு அவ்வேண்டுகோள் ஒன்றை விடுக்கலாம்.

(2) சம்பளச் சபையொன்றன் பிரதிநிதித்துவ உறுப்பினர்களாக நியமிக்கப்படுதற்குள்ள ஆட்கள், இவ்வொழுங்குவிதியின் (1)ஆம் பந்தியின் கீழ் ஆணையாளருக்குக் கொடுத்துதவப்பட்டிருக்கக்கூடிய அத்தகைய நிரலில் (ஏதேனுமிருப்பின்) அல்லது நிரல்களில் (எவையேனுமிருப்பின்) அத்தகைய உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதற்கு ஆலோசிக்கப்பட்டவர்களிடையேயிருந்து அமைச்சரினால் தெரிவு செய்யப்படுதல் வேண்டும். அத்தகைய உறுப்பினர்கள் எத்தொழில்தருநர்களை அல்லது எவ்வேலையாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவுள்ளனரோ அத்தொழில்தருநர்களின் அல்லது அவ்வேலையாளர்களின் தொழிற்சங்கம், கழகம் அல்லது வேறு ஒழுங்கமைப்பு எதுவும் இல்லாதவிடத்து, அல்லது அத்தகைய நிரலெதுவும் அவ்வாறு கொடுத்துதவப்படாதவிடத்து, அத்தகைய உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதற்குத் தகுதியானவர்களென அமைச்சர் கொள்ளுகின்றவர்களிடையேயிருந்து அத்தகைய ஆட்கள் அவரினால் தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.

4-6-7. 14951 இலக்க வர்த்த

7. (1) சம்பளச் சபையொன்றன் கூட்டம் ஒவ்வொன்றும், ஆணையாளரின் ஏதேனும் பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளுக்கமைய, சபையின் ஒவ்வோர் உறுப்பினருக்கும் அஞ்சலில் அனுப்பப்படும் எழுத்திலான அறிவித்தல் மூலம் அச்சபையின் செயலாளரினால் கூட்டப்படுதல் வேண்டும்.

(2) சம்பளச் சபையொன்றன் ஒவ்வொரு சாதாரணக் கூட்டமும்பற்றிப் பதினான்கு நாட்களுக்குக் குறையாத அறிவித்தல் சபையுறுப்பினர் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(3) சம்பளச் சபையொன்றன் சாதாரணக் கூட்டத்தில் பிரேரிக்கப்படவுள்ள ஏதேனும் பிரேரணைபற்றிய அறிவித்தல், அக்கூட்டத்திற்கு முன்னர் ஏழு நாட்களுக்குக் குறையாமல், அப்பிரேரணையை முன்மொழிகின்ற உறுப்பினரினால் அச்சபையின் செயலாளருக்கு எழுத்தில் கொடுக்கப்படுதல் வேண்டும்; அத்துடன் செயலாளர், அக்கூட்டத்துக்கான நிகழ்ச்சிநிரலில் அப்பிரேரணையைச் சேர்த்துக்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன், அக்கூட்டத் தேதிக்கு முன்னர் அப்பிரேரணையின் பிரதியொன்றைச் சபையின் ஒவ்வோர் உறுப்பினருக்கும் கொடுத்துதவுதலும் வேண்டும்.

(4) சம்பளச் சபையொன்றன் விசேட கூட்டமொன்று, ஆணையாளர் விரும்பத்தக்கதெனக் கொள்ளுகின்றபோதெல்லாம், அல்லது சபையின் இரண்டுக்குக் குறையாத உறுப்பினர்களினால் ஒப்பமிடப்பட்டதும், விசேட கூட்டம் கூட்டப்பட வேண்டிய நோக்கத்தைக் குறித்துரைக்கின்றதுமான எழுத்திலான தேவைப்பாடொன்று அவருக்கு முன்வைக்கப்படும்போதெல்லாம் செயலாளரினால் கூட்டப்படுதல் வேண்டும்.

(5) சம்பளச் சபையொன்றன் விசேட கூட்டம் ஒவ்வொன்றும் பற்றி ஏழுநாட்களுக்குக் குறையாத அறிவித்தல் சபையுறுப்பினர் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(6) சம்பளச் சபையொன்றன் கூட்டம் ஒவ்வொன்றினதுமான எல்லா நடவடிக்கைகளும்பற்றிய குறிப்புகள் சபைச் செயலாளரினால் குறிப்புப் புத்தகமொன்றில் பதிவிடு செய்யப்படுதல் வேண்டும்.

(7) சம்பளச் சபையொன்றன் கூட்டமெதுவும், சபையின் தீர்மானத்தின் மூலம் அல்லது சபைத் தவிசாளரினால் காலத்துக்குக் காலம் ஒத்திவைக்கப்படலாம்.

8. (1) எவரேனும் உறுப்பினரின் இறப்பின் மூலம், பதவி விலகுதலின் மூலம் அல்லது அகற்றுதலின் மூலம் ஏற்படும் சம்பளச் சபை உறுப்பாண்மையிலான வெற்றிடமொவ்வொன்றும் அவ்வுறுப்பினரின் நியமனம் எம்முறையில் செய்யப்பட்டதோ அதேமுறையில் நிரப்பப்படுதல் வேண்டும்.

(2) சம்பளச் சபையுறுப்பினராகவுள்ள ஆளொருவர், அமைச்சருக்கு அல்லது ஆணையாளருக்குத் தீவை விட்டுச்செல்லும் நிகழ்வைத் தெரிவிக்காமல் அவ்வாறு செல்லும்போதெல்லாம், அத்துடன் அத்தகைய உறுப்பினர் தீவில் இல்லாதிருக்கின்றமை, அமைச்சரின் அபிப்பிராயப்படி சம்பளச் சபையின் பணிகளுக்குப் பங்கமானதாகவிருக்கும் அத்தகைய காலப்பகுதிக்கானதாகவிருப்பின், அவரது இடத்தில் உறுப்பினரொருவராக இருக்கவென அமைச்சர் இன்னொருவரை நியமிக்கலாம் என்பதுடன், முதற்கூறப்பட்ட ஆள் அச்சபையில் அவரது உறுப்பாண்மையிலிருந்து விலகியுள்ளவராகக் கருதப்படுதலும் வேண்டும்.

9. சம்பளச் சபையொவ்வொன்றும், அச்சபை எத்தொழிற் சங்கத்துக்காகத் தாபிக்கப்பட்டதோ அத்தொழிற் சங்கத்திலுள்ள தொழில்தருநர்களின் அல்லது வேலையாளர்களின் ஏதேனும் தொழிற்சங்கம், கழகம் அல்லது வேறு ஒழுங்கமைப்பு இருக்குமிடத்து, கட்டளைச் சட்டத்தின் 22, 23, 24, 25 அல்லது 27 ஆகிய பிரிவுகளின் கீழ் அச்சபை முடிவுசெய்வதற்குத் தத்துவமளிக்கப்பட்ட ஏதேனும் கருமம்பற்றி முடிவொன்றைச் செய்யுமுன்னர் அத்தகைய சங்கத்தை, கழகத்தை அல்லது ஒழுங்கமைப்பைக் கலந்தாலோசித்தல் வேண்டும்.

10.(1) கட்டளைச் சட்டத்தின் கீழும் இவ்வொழுங்கு விதிகளின் கீழும் ஏதேனும் சம்பளச் சபையின் கடமை அல்லது பணி எதனையும் புரியும் அல்லது நிறைவேற்றும் நோக்கத்துக்காக, ஏதேனும் சம்பளச் சபையின் அல்லது ஏதேனும் மாவட்டச் சம்பளக் குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும், அத்தகைய சபையினால் அல்லது அத்தகைய குழுவினால் அத்தகைய பொருள்பட்ட தீர்மானமொன்று நிறைவேற்றப்படுவதன் மேலும், அத்தகைய

சபையினால் அல்லது அத்தகைய குழுவினால் முடிபுசெய்யப்படும் ஒரு தேதியிலும் நேரத்திலும் —

(அ) ஏதேனும் தொழிலை எவரேனுமான் கொண்டுநடாத்து கின்ற இடமெதனுள்ளும் பகலில் அல்லது இரவில் பிர வேசித்துச் சோதனையிடுவதற்கும் ;

(ஆ) எவரேனுமானின் அறிவுக்குட்பட்டதாகவுள்ள ஏதேனும் தகவலாகவுள்ளதும், ஏதேனும் தொழிலிலான வாழ்க் கைத் தரங்களும், வேலை நிலைமைகளும் தொடர்பானதும் ஆன அத்தகைய தகவலைக் கொடுத்துதவுமாறு அத்தகைய ஆளுக்கு வேண்டுகோள் விடுப்பதற்கும்; அத்துடன்

(இ) அத்தகைய தகவலை நிச்சயிக்கும் கருத்துடன் அத்தகைய இடத்தில் காணப்படும் எவரேனுமானை விசாரணை செய் வதற்கும் அல்லது வினவுவதற்கும்.

தத்துவமுடையவராதல் வேண்டும்; அத்துடன், (2)ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட இடத்துக்கு அப்போதைக் கெனப் பொறுப்பாகவுள்ள ஒவ்வோராளும், அத்தகைய இடத் தினுள் பிரவேசித்துச் சோதனையிட அத்தகைய உறுப்பினருக்குத் தேவைப்படக்கூடிய அத்தகைய உதவியளித்தலும் அத்தகைய வசதிகளைக் கொடுத்துதவுதலும் அவரது கடமையாதல் வேண்டு மென்பதுடன், அத்தகைய உறுப்பினரால் கேட்கப்பட்ட தக வலைக் கொடுத்துதவுதல், (ஆ) என்னும் பந்தியில் அல்லது (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆள் ஒவ்வொரு வரினதும் கடமையாதலும் வேண்டும்.

(2) இவ்வொழுங்கு விதிகளின் கீழ் தனது பணிகளை அல்லது கடமைகளைப் புரிவதில் அல்லது நிறைவேற்றுவதில் ஏதே னும் உற்பத்தி செய்தல் அல்லது வர்த்தக இரகசியம் பற்றிய அறிவை, அல்லது அது சம்பந்தமான தகவலை அறிந்துகொள்ளு கின்ற அல்லது பெறுகின்ற ஏதேனும் சம்பளச் சபையின் அல்லது மாவட்டச் சம்பளக் குழுவின் உறுப்பினரெவரும் ஒன்றில், அத்தகைய சபையில் அல்லது குழுவில் அவரது உறுப்பாண்மை உளதாயிருக்கையில் அல்லது அவர் அத்தகைய சபையின் அல்லது குழுவின் உறுப்பினராக இல்லாதொழிந்த பின்னர், அத்தகைய இரகசியம் எத்தொழில் தொடர்பானதோ அத்தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற ஆளிடமிருந்து பெறப்பட்ட எழுத் திலான சம்மதத்துடனன்றி வேறெவரேனுமானுக்கு அத்தகைய இரகசியத்தை வெளியிடுதலோ அல்லது தெரிவித்தலோ ஆகாது;

11. ஏதேனும் தொழிலுக்காகத் தாபிக்கப்பட்ட சம்பளச் சபை யொன்று இலங்கையிலுள்ள ஏதேனும் இடப்பரப்பில் அல்லது மாவட்டத்தில் அத்தொழிலுக்கான மாவட்டச் சம்பளக் குழு வொன்றை அமைப்பதற்கு விரும்புகின்றவிடத்து, அத்தகைய சபையானது பின்வருவனபற்றி அமைச்சருக்கு எழுத்திலான தகவல் கொடுத்தல் வேண்டும் :—

(அ) அத்தகைய இடப்பரப்பு அல்லது மாவட்டம்,

(ஆ) மாவட்டச் சம்பளக் குழுவில் அத்தகைய சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தவுள்ள அத்தகைய சபையுறுப்பினர்களின் எண்ணிக்கை, அத்துடன்

(இ) அத்தகைய இடப்பரப்பில் அல்லது மாவட்டத்தில் முறையே தொழில்தருநர்களையும், வேலையாளர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தவுள்ள மாவட்டச் சம்பளக் குழுவுறுப்பினர்களின் எண்ணிக்கை.

12. விடயத்துக்கேற்ப, தொழில்தருநர்களை அல்லது வேலையாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவுள்ள மாவட்டச் சம்பளக் குழுவொன்றன் உறுப்பினர்கள், அமைச்சரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

13. ஏதேனும் சம்பளச் சபை எந்தத் தொழிலுக்காகத் தாபிக்கப்பட்டுள்ளதோ அந்தத் தொழிலிலுள்ள ஒரு தொழில்தருநராக அல்லது வேலையாளராக இல்லாதிருப்பினும், அச்சம்பளச் சபையினால் எந்த இடப்பரப்புக்கு அல்லது மாவட்டத்துக்கு மாவட்டச் சம்பளக் குழுவொன்று அமைக்கப்படுகின்றதோ அந்த இடப்பரப்பிலுள்ள அல்லது மாவட்டத்திலுள்ள தொழில் தருநர்களை அல்லது வேலையாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கென அத்தகைய ஆள் அத்தகைய குழுவுக்கு நியமிக்கப்படலாம் : ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஆள் ஒவ்வொருவரும் விடயத்துக்கேற்ப தொழில்தருநர்களின் அல்லது வேலையாளர்களின் எந்தத் தொழிற்சங்கத்தை, கழகத்தை அல்லது வேறு ஒழுங்கமைப்பை (ஏதேனுமிருப்பின்) பிரதிநிதித்துவப்படுத்தவுள்ளாரோ அந்தத் தொழிற் சங்கத்தினால், கழகத்தினால் அல்லது வேறு ஒழுங்கமைப்பினால் அவர்கள் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

14. கட்டளைச் சட்டத்தின் 18 (2)ஆம் பிரிவின் (அ) அல்லது (ஆ) என்னும் பந்தியின் கீழ் நியமிக்கப்படுகின்ற மாவட்டச் சம்பளக் குழுவொன்றன் உறுப்பினர் ஒவ்வொருவரும் நியமனத் தேதியிலிருந்து இரண்டாண்டுக் காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய உறுப்பினரெவரும் —

(அ) எந்நேரத்திலும் அத்தகைய குழுவின் உறுப்பாண்மையிலிருந்து விலகலாம் அல்லது அதிலிருந்து அமைச்சரினால் அகற்றப்படலாம்;

(ஆ) எவரேனும் உறுப்பினரின் இறப்பினால், பதவி விலகலினால் அல்லது அகற்றுதலினால் ஏற்பட்ட ஏதேனும் வெற்

றிடத்தை நிரப்புவதற்கு நியமிக்கப்படுவன், இறந்துள்ள, பதவிவிலகியுள்ள அல்லது அகற்றப்பட்டுள்ள உறுப்பின ரின் பதவிக் காலத்தில் முடிவுறுதெஞ்சியுள்ள பாகத்துக்குச் சமமான காலப்பகுதியின்போது பதவிவகித்தல் வேண்டும்; அத்துடன்

(இ) பதவிக்காலம் முடிவுற்ற பின்னர், அடுத்துறுபவரொருவர் நியமிக்கப்படும்வரை தொடர்ந்து பதவிவகித்தல் வேண்டும்.

15. கட்டளைச் சட்டத்தின் 18 (2)ஆம் பிரிவின் (அ) அல்லது (ஆ) என்னும் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட மாவட்டச் சம்பளக் குழுவொன்றன் உறுப்பினர் ஒவ்வொருவரும், அத்தகைய குழு வின் அடுத்தடுத்த மூன்று கூட்டங்களுக்கு நியாயமான காரண மின்றி வராதிருப்பின், அத்தகைய குழுவின் உறுப்பாண்மை யிலிருந்து விலகியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பது டன், அத்தகைய உறுப்பினர் பதவி நீக்கம் அத்தகைய கூட்டங் களுள் இறுதிக்கூட்டம் நடைபெற்ற தேதியன்று பயனுறுவதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

16. மாவட்டச் சம்பளக் குழுவொன்றன் உறுப்பினராக இல்லா தொழியும் எவரேனுமாள் அதற்கு மீளநியமிக்கப்படுதற்குத் தக வுடையவராதல் வேண்டும்.

17. எவரேனும் உறுப்பினரின் இறப்பு, பதவிநீக்கம் அல்லது அகற்றுகை என்பவற்றினுல் ஏற்பட்ட மாவட்டச் சம்பளக் குழு வின் உறுப்பாண்மையிலான வெற்றிடம் ஒவ்வொன்றும், அவ் வுறுப்பினரின் நியமனம் செய்யப்பட்ட அதே முறையில் நிரப்பப் படுதல் வேண்டும்.

18. மாவட்டச் சம்பளக் குழுவொன்றன் ஏதேனும் கூட்டத்துக் கான கூட்டநடப்பெண், அத்தகைய குழுவுறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையின் மூன்றிலொன்றுக்குக் குறையவிருத்த லாகாது;

ஆயின், எவ்வாறுயினும், கூட்டநடப்பெண் இல்லாமை காரணமாக மாவட்டச் சம்பளக் குழுக்கூட்டமெதுவும் ஏதேனும் தேதிக்குப் பின்போடப்பட்டு, அத்தேதியில் சமூகமாயிருக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை கூட்டநடப்பெண்ணுக்குக் குறை வாகவிருக்குமிடத்து, அவ்வாறு சமூகமாயிருக்கும் உறுப்பினர் களின் கூட்டம், அத்தகைய குழுவின் செல்லுபடியான கூட்ட மாக அமைதல் வேண்டும்.

19. ஒரு மாவட்டச் சம்பளக் குழுவின் ஒவ்வொரு கூட்டத்தினு தும் தவிசாளர், அக்கூட்டத்தின் முன்னர், கொணரப்பட்ட ஏதேனும் பிரச்சினை மீது வாக்களிப்பதற்கு உரித்துடையவராத லாகாது.

20. (1) மாவட்டச் சம்பளக் குழுக்கூட்டம் எதனையும் நடாத்தும் நோக்கத்திற்காக, உறுப்பினர்களின் வருகையில் தொழில்தருநர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களின் எண்ணிக்கை, வேலையாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு அதிகமாக அல்லது குறைவாக இருக்குமிடத்து, தொழில்தருநர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் அல்லது வேலையாளர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் உறுப்பினர்கள், இவர்களுள் எவர்கள் பெரும்பான்மையினராக இருக்கின்றனரோ அவர்கள், கூட்டம் தொடங்கு முன்னர், கூட்டத்தில் வாக்களிப்பதற்கு உரித்துள்ளவராயிருக்க வேண்டிய தொழில்தருநர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் அவ்வாறு உரித்துடையவராயிருக்க வேண்டிய வேலையாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் சமமாகவிருப்பதனை உறுதிப்படுத்துமுகமாக, கூட்டத்தில் வாக்களிக்காது தவிர்க்கவேண்டிய உறுப்பினரை அல்லது உறுப்பினர்களைத் தம்முள்ளிருந்து தெரிவு செய்தல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், கூட்டத்தில் வாக்களிக்காது தவிர்க்கவேண்டிய உறுப்பினரை அல்லது உறுப்பினர்களை உடன்பாட்டின் மூலம் தெரிவுசெய்ய முடியாதவிடத்து, அத்தகைய உறுப்பினர் அல்லது உறுப்பினர்கள் கூட்டத் தவிசாளரின் முன்னிலையிலும் அவரது பணிப்புக்களின் கீழுமான திருவுளச் சீட்டிழுப்பின் மூலம் தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.

(2) மாவட்டச் சம்பளக் குழுவொன்றன் கூட்டம் எதிலும் வாக்களிக்காது தவிர்ப்பதற்கு முற்போந்த பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தெரிவுசெய்யப்பட்டுள்ள மாவட்டச் சம்பளக் குழுவின் பிரதிநிதித்துவ உறுப்பினரொருவர், அக்கூட்டத்தில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலாகாது, ஆனால் சமூகமாயிருப்பதற்கும் அக்கூட்டத்திலான ஏதேனும் கலந்துரையாடலில் பங்குபற்றுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்;

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய பிரதிநிதித்துவ உறுப்பினர், அத்தகைய கூட்டத்தின் போது எந்நேரத்திலும் உறுப்பினர்களின் வருகையிலான அதிகரிப்பொன்றன் விளைவாகத் தொழில்தருநர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவராய் சமூகமாயிருக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை, வேலையாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவராய் சமூகமாயிருக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்குச் சமமாகவிருப்பின், வாக்களிக்க உரித்துடையவராதல் வேண்டும்.

(3) இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் எம்முடிவை ஆக்குவதற்கு மாவட்டச் சம்பளக் குழுவானது தத்துவமளிக்கப்பட்டு உள்ளதோ அல்லது கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதோ அம்முடிபு ஒவ்வொன்றும், அக்குழுக் கூட்டமெதிலும் சமூகமாயிருந்து வாக்

களிக்க உரித்துள்ள உறுப்பினர்களுள் பெரும்பான்மையினரால் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், மாவட்டச் சம்பளக் குழுவின் முடிபெதுவும், ஏதேனும் விதிமுறைப்பாடான்மை காரணமாக அல்லது படிவத்திலான வழு காரணமாக அல்லது அத்தகைய முடிபைச் செய்வதற்கு முதனிலையாகச் செய்யும்படி இக்கட்டளைச் சட்டத்திலுல் அல்லது இவ்வொழுங்குவிதிகளினால் கேட்டுக்கொள்ளப்பட்ட எதனையும் செய்யத் தவறியமை காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாதலுமாகாது.

21. சம்பளச் சபையொன்றினால் மாவட்டச் சம்பளக் குழுவொன்றுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமத்தின் மீது அத்தகைய குழுவின் அறிக்கை அக்கருமத்தைச் சீர்தூக்கிப் பார்த்தனம் அத்தகைய குழுவின் எக்கூட்டத்தில் முடிபுற்றதோ அக்கூட்டத்தவிசாளரினால் ஒப்பம் இடப்பட்டு அத்தகைய சபைக்குக் கொடுத்துதவப்படுதல் வேண்டும்.

22. சம்பளச் சபையொன்றன் அல்லது மாவட்டச் சம்பளக் குழுவொன்றன் உறுப்பினராகவுள்ள வேலையாளரொருவரின் தொழில்தருநர், சம்பளச் சபையின் அல்லது மாவட்டச் சம்பளக் குழுவின் ஏதேனும் கூட்டத்தில் வருகைதருவதற்கு அவர் கேட்டுக் கொள்ளப்படுகின்ற அல்லது அத்தகைய சபையின் அல்லது குழுவின் உறுப்பினராக ஏதேனும் கடமையை அல்லது பணியை நிறைவேற்றுவதற்குக் கேட்டுக்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு நாளன்றும் அத்தகைய வேலையாளருக்கு லீவு அனுமதித்தல் வேண்டும்.

23. (1) கட்டளைச் சட்டத்தின் 39 (1)ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒவ்வொன்றும் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமையவிருத்தல் வேண்டும் :—

(அ) அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் வேலையாளருக்கு அந்த அனுமதிப்பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்ட வீதத்திலும் பார்க்க அனுகூலங் குறைந்ததாகவிராத வீதத்தில் தொழில்தருநரினால் சம்பளம் செலுத்தப்படுதல் வேண்டும்;

(ஆ) அனுமதிப்பத்திரமானது, கட்டளைச் சட்டத்தின் 39 (3)ஆம் பிரிவின் கீழ் ஒழிக்கப்பட்டாலொழிய, அனுமதிப் பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியின் போது வலுவிலிருத்தல் வேண்டும்.

(2) கட்டளைச் சட்டத்தின் 39 (3)ஆம் பிரிவின் கீழ் தொழில்தருநருக்கான அறிவித்தலொவ்வொன்றும், இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவம் 11இல் இருத்தல் வேண்டுமென்பதுடன், பதிவுக்கடித மூலம் அஞ்சலில் தொழில்தருநருக்கு அனுப்பப்படுதலும் வேண்டும்.

24. (1) தொழில்தருநர் ஒவ்வொருவரும், கட்டளைச் சட்டத்தின் 41ஆம் பிரிவினால் கேட்டுக்கொள்ளப்பட்ட விபரங்களுடன் சேர்த்து மேலதிகமாக, அப்பிரிவின் கீழ் வைத்திருக்கப்படும் இடாப்பில் அல்லது இடாப்புக்களில், அவரினால் ஊழியத்துக்கமர்த்தப்பட்ட ஒவ்வொரு வேலையாளருக்கும் செலுத்தப்பட்ட சம்பள வீதத்தையும், அவ்வேலையாளரினால் உழைக்கப்பட்ட மொத்தச் சம்பளத்தையும், அத்தகைய மொத்தச் சம்பளத்திலிருந்து செய்யப்பட்ட கழிப்பனவுகளையும் தருதல் வேண்டும்.

(2) ஐந்தாம் ஒழுங்குவிதியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வோர் அலுவலரும், கட்டளைச் சட்டத்தின் 41 (2)ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக விதித்துரைக்கப்பட்ட அலுவலரொருவராகவிருத்தல் வேண்டும்.

25. சம்பளச் சபையொன்று எந்தத் தொழிலுக்காகத் தாபிக்கப்படுகின்றதோ அந்தத் தொழிலிலுள்ள எவரேனும் வேலையாளர்களின் தொழில்தருநரொருவர், கட்டளைச் சட்டத்தின் 42ஆம் பிரிவின் கீழ் எந்த அறிவித்தலை வெளிக்காட்டிவைப்பதற்குக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளரோ அந்த அறிவித்தலானது —

(அ) பொருளளவில் இதற்கான அட்டவணையிடத்தரப்பட்டுள்ள படிவம் 11இல் இருத்தல் வேண்டும்.;

(ஆ) சிங்கள, தமிழ், அத்துடன் ஆங்கில மொழிகளில் இருத்தல் வேண்டும்;

(இ) அத்தொழில் தொடர்பாக அத்தகைய சபையின் வலுவிலுள்ள முடிபுகளுடன் சேர்த்து மேலதிகமாக, அத்தொழில்தருநரினால் அத்தொழிலில் ஊழியத்துக்கமர்த்தப்பட்ட ஒவ்வொரு வேலையாளரினதும் சம்பளத்திலிருந்து செய்யப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட கழிப்பனவுகள் தொடர்பிலான கருமங்களையும், இவ்வொழுங்குவிதிகளின் 2ஆம் ஒழுங்குவிதியின் கீழான சம்பளத்திலிருந்து எந்த உணவுப்பொருள் தொடர்பில் கழிப்பனவுகள் செய்யப்படுகின்றனவோ அந்த ஏதேனும் உணவுப் பொருளின் விலையையும் தருதல் வேண்டும்;

(ஈ) அத்தொழில் கொண்டு நடாத்தப்படுகின்ற இடத்தில் துலாம்பரமாக வெளிக்காட்டி வைக்கப்படுதல் வேண்டும்.

26. கட்டளைச்சட்டத்தின் 46(1)ஆம் பிரிவின் கீழான கட்டளையொவ்வொன்றும் இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவம் 111இல் இருத்தல் வேண்டும்.

27. ஆணையாளரும் 5ஆம் ஒழுங்குவிதியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வோர் அலுவலரும், கட்டளைச் சட்டத்தின் 55 (1)ஆம் பிரிவின் நோக்கத்துக்காக விதித்துரைக்கப்பட்ட அலுவலரொருவராதல் வேண்டும்.

28. (1) கட்டளைச் சட்டத்தில் அல்லது இவ்வொழுங்குவிதிகளில் வேறுவகையில் வெளிப்படையாக ஏற்பாடுசெய்யப்பட்டிருப்பதனைத் தவிர, கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலை, பணிப்பை அல்லது தேவைப்பாட்டைத் தொழில்தருநரொருவருக்கு அல்லது வேறுநருக்குச் சேர்ப்பித்தல், நேரடியாகக் கொடுப்பதன் மூலம், அல்லது பதிவஞ்சலில் அதனை அனுப்புவதன் மூலம், அல்லது அத்தகைய அறிவித்தலை, பணிப்பை அல்லது தேவைப்பாட்டை அவர் கடைசியாக வதிந்ததாக அறியப்பட்ட இடத்தின் வாசலில் ஒட்டிவிடுவதன் மூலம் பயனுறுத்தப்படுதல் வேண்டும்.

(2) அத்தகைய அறிவித்தல், பணிப்பு அல்லது தேவைப்பாடு பதிவஞ்சலில் அனுப்பப்படுமிடத்து, 1934ஆம் ஆண்டின் உண்ணாட்டு அஞ்சல் விதிகளின் 67ஆம் விதியின் கீழ் வழங்கப்பட்ட ஒப்படைப்பு அறிவிப்பு, அத்தகைய அறிவித்தலின், பணிப்பின் அல்லது தேவைப்பாட்டின் ஒப்படைப்புப் பற்றிப் போதிய சான்றாகவிருத்தல் வேண்டும்.

29. கட்டளைச் சட்டத்தில் அல்லது இவ்வொழுங்கு விதிகளின் வேறுவகையில் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டதனைத் தவிர, ஏதேனும் தொழிலில் வேலையாளர்களை ஊழியத்துக் கமர்த்துகின்ற அல்லது ஊழியத்துக்கமர்த்தியுள்ள தொழில்தருநரொருவருக்கு அல்லது வேறுளுக்குக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அறிவித்தல், பணிப்பு அல்லது தேவைப்பாடு ஒவ்வொன்றும் பின்வருமாறு சேர்ப்பிக்கப்படலாம் :—

(அ) தொழில்தருநருக்கு, அல்லது வேறுளுக்கு அதனை நேர்முகமாக ஒப்படைப்பதன் மூலம், அல்லது

(ஆ) தொழில்தருநர் அல்லது வேறுள், கூட்டுத்தாபனமொன்றாகவுள்ளவிடத்து, கூட்டுத்தாபனத்தின் செயலாளரிடம், அல்லது அதேபோன்ற அலுவலரொருவரிடம், அல்லது பணிப்பாளரொருவரிடம், அல்லது கூட்டுத்தாபனத்தின் பிரதான தொழிலிடத்துக்குப் பொறுப்பாகவுள்ள ஆளிடம் அதனை ஒப்படைப்பதன் மூலம், அல்லது

(இ) தொழில்தருநர் அல்லது வேறுள் கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவொன்றாக உள்ளவிடத்து, அத்தகைய குழுவின் தலைவரிடம், செயலாளரிடம், அல்லது அதேபோன்ற அலுவலரொருவரிடம் அதனை ஒப்படைப்பதன் மூலம்.

30. ஒவ்வொரு சம்பளச் சபையினதும், ஒவ்வொரு மாவட்டச் சம்பளக் குழுவினதும் எல்லா உறுப்பினர்களினதும் பெயர்கள், வர்த்தகமானியிலும், ஒரு சிங்கள, ஒரு தமிழ், அத்துடன் ஓர் ஆங்கிலச் செய்தித் தாளிலும் அமைச்சரினால் வெளியிடப்படுதல் வேண்டும்.

31. (அ) சம்பளச் சபையொன்றன் பிரதிநிதித்துவ உறுப்பினரொவ்வொருவருக்கும் அந்நோக்கத்துக்கெனப் பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்பட்ட நிதிகளிலிருந்து, அத்தகைய உறுப்பினர் அத்தகைய சபையின் கூட்டத்திற்கு எந்நாளன்று வருகை தருகிறாரோ அந்நாள் ஒவ்வொன்றுக்கும் எழுபது ரூபாக் கொண்ட ஓர் உணவுப்படி ஆணையாளரினால் செலுத்தப்படுதல் வேண்டும்; 01-02-1989 ன் 66 ஆம் இலக்க வர்த்தமானி

(ஆ) பகிரங்க அலுவலரொருவரல்லாதவரான சம்பளச் சபையொன்றன் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவருக்கும், அத்தகைய உறுப்பினர் அத்தகைய கூட்டத்திற்கு எந்நாளன்று வருகை தருகிறாரோ அந்நாள் ஒவ்வொன்றுக்கும் பாராளுமன்றத்தினால் அந்நோக்கத்துக்கென வாக்களிக்கப்பட்ட நிதிகளிலிருந்து இருநூறு ரூபாக் கொண்ட ஓர் உணவுப்படி ஆணையாளரினால் செலுத்தப்படுதல் வேண்டும். 1-2-1989 543-10 இல விசேட வர்த்தமானி

(இ) பகிரங்க அலுவலரொருவரல்லாதவரான சம்பளச் சபையின் பிரதிநிதித்துவ உறுப்பினர் அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவருக்கும், அந்நோக்கத்துக்கெனப் பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்பட்ட நிதிகளிலிருந்து, அவரது கடமைகளைப் புரிவதில் அவரினால் செய்யப்பட்ட ஏதேனும் பிரயாணத்துக்காக, பின்வரும் ஏற்பாடுகளுக்கிணங்கக் கணக்கிடப்பட்ட பிரயாணப்படியொன்று ஆணையாளரினால் செலுத்தப்படுதல் வேண்டும் :—

(i) புகைவண்டி மூலம் நியாயமாகச் செய்யப்பட்டிருக்கக் கூடியதான ஏதேனும் பயணம் தொடர்பில் அல்லது ஏதேனும் பயணத்தின் பாகம் தொடர்பில், முதலாம் வகுப்புப் புகையிரதக் கட்டணத்துக்கு மேற்படாத தொகையினதான பிரயாணப்படியொன்று;

(ii) அத்தகைய பயணம் புகைவண்டி மூலம் நியாயமாகச் செய்யப்பட்டிருக்கமுடியாதவிடத்து, தனிப்பட்ட அல்லது வாடகைப் போக்குவரத்து மூலம் செய்யப்பட்ட ஏதேனும் பயணம் தொடர்பில் அல்லது ஒரு பயணத்தின் ஏதேனும் பாகம் தொடர்பில், பகிரங்க அலுவலர்களுக்குச் செலுத்தப்படற்பாலதான வீதத்தில் கணக்கிடப்பட்ட பிரயாணப் படியொன்று;

(iii) பசுவண்டி மூலம் அல்லது வேறு பொதுப் போக்குவரத்து மூலம் செய்யப்பட்ட ஏதேனும் பயணம் தொடர்பில் கட்டணமாகச் செலுத்தப்பட்ட உண்மையான தொகைக்குச் சமமான பிரயாணப்படியொன்று;

ஆயின், எவ்வாறுயினும், அடுத்தடுத்த நாட்களில் நடாத்தப்படும், ஒரு சம்பளச் சபையின் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சம்பளச் சபைகளின் கூட்டங்களுக்கு வருகை தருகின்ற அச்சபையின் பிரதிநிதித்துவ அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவருக்கு, கூட்டங்களுக்கு வருகைதருவதில் அவ்வுறுப்பினரால் செய்யப்பட்ட முதலாவது உள்முகப் பயணத்துக்கும் இறுதி வெளிப்புறப் பயணத்துக்கும் மட்டுமே முற்போந்த ஏற்பாடுகளுக்கிணங்கப் பிரயாணப்படி செலுத்தப்படுதல் வேண்டும்;

ஆயின் மேலும், முற்போந்த காப்புவாசகம், அத்தகைய சபையின் கூட்டம் நடைபெறும் இடத்திலிருந்து 15மைல் ஆரைக்கு மேற்பட்ட ஒரு தூரத்திலிருந்து பிரயாணஞ் செய்கின்ற எவரேனும் உறுப்பினருக்கு ஏற்புடையதாதலாகாது.

(ஈ) பகிரங்க அலுவலரொருவராகவுள்ள பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், அவரது கடமைகளை நிறைவேற்றுதல் சம்பந்தமாக, அவருக்கேற்புடையனவான அரசாங்க நிதி ஒழுங்கு விதிகளின் அத்தகைய ஏற்பாடுகளுக்கிணங்கக் கணக்கிடப்பட்ட பிரயாணப்படிக்கும் உணவுப்படிக்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

32. ஏதேனும் தொழிலான வாழ்க்கைத் தரங்களையும், வேலை நிலைமைகளையும் நுண்ணாய்வு செய்யும் நோக்கத்துக்காக, ஆணையாளர் அல்லது 5ஆம் ஒழுங்குவிதியிற் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனுமலுவலர். -

(அ) எவரேனுமாள் அத்தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற ஏதேனுமிடத்தினுட் பிரவேசித்துச் சோதனையிடலாம்;

(ஆ) அவ்வாளினால் வைத்திருக்கப்பட்டதும், அத்தகைய தரங்களும், நிலைமைகளும்பற்றிய தகவலைக் கொண்டுள்ளதுமான ஏதேனும் இடாப்பின் அல்லது பதிவேட்டின் முழுமையையும் அல்லது ஏதேனும் பாகத்தைப் பரிசோதனை செய்து அதன் பிரதிநிதிகளை எடுக்கலாம்; அத்துடன்

(இ) அவரது அறிவுக்குட்பட்ட தகவலாகவுள்ள அத்தகைய ஏதேனும் தகவலைக் கொடுத்துதவும்படி அவ்வாளை வேண்டலாம்;

அத்துடன் அந்த ஆள், அத்தகைய இடத்தினுட் பிரவேசித்துச் சோதனையிடவும் அத்தகைய ஏதேனும் இடாப்பின் அல்லது பதிவேட்டின் முழுமையையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தைப் பரிசோதனைசெய்து பிரதிகளை எடுக்கவும் ஆணையாளரை அல்லது அத்தகைய அலுவலரை அனுமதித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தகவலைக் கொடுத்துதவுதலும் வேண்டும்.

33. காலத்துக்காலம் திருத்தப்பட்டவாறாக 1943, திசெம்பர் 3ஆம் தேதிய 9,209ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1943ஆம் ஆண்டின் சம்பளச் சபை ஒழுங்குவிதிகளும், 1943, ஓகத்து 27ஆம் தேதிய 9,162ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகளும் இத்தால் நீக்கப்படுகின்றன.

34. (1) இவ்வொழுங்குவிதிகளில் —

"ஆணையாளர்", "பிரதிநிதித்துவ உறுப்பினர்" என்பன, கட்டளைச் சட்டத்திலுள்ள அதே பொருளையுடையன;

"உள்ளூரதிகாரசபை" என்பது, ஏதேனும் மாநகரசபை, நகரசபை, பட்டினசபை அல்லது கிராமசபை என்று பொருளாகும்; அத்துடன்

"கட்டளைச்சட்டம்" என்பது, (136ஆம் அத்தியாயமான) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம் என்று பொருளாகும்.

(2) இவ்வொழுங்கு விதிகளின் நோக்கத்துக்காக, சம்பளச் சபையொன்று தொடர்பாக "செயலாளர்" என்பது, சம்பளச் சபைகளின் கூட்டுச் செயலாளர்களுள் ஒவ்வொருவரையும் உதவிச் செயலாளரையும் உள்ளடக்குதல் வேண்டும்.

## அட்டவணைகள்

### நிரல் அ

முடிவெட்டுபவர்,
சலவைக்காரர்,
என்போரின் சேவை.

### நிரல் ஆ

மாதாந்தச் சம்பளம்பெறும் வேலையாளர்களின் விடயத்தில் நியாயமான காரணமின்றி வேலைக்கு வராதிருத்தல்.
நியாயமான காரணமின்றி வேலைக்குத் தாமதப்பட்டு வருகைதருதல்.

சேதம் அல்லது இழப்பு, வேலையாளரின் கவலையீனம், வேண்டுமென்ற செயல் அல்லது தவறுகை என்பன வற்றுக்கு நேரடியாக ஏற்றிக்கூறப்படற்பாலதாகவிருக்கு மிடத்து, தொழில்தருநருக்குச் சொந்தமான பண்டங் களுக்கு அல்லது பொருட்களுக்குச் சேதம் விளைவித்தல் அல்லது அவற்றின் இழப்பை ஏற்படுத்துதல்.

வேலையில் திறமையின்மை அல்லது கவலையீனம்.

கடமையின் போது உறங்குதல்,

வேலையாளரின் வேலைதொடர்பாக அவருக்குக் கொடுக்கப் பட்ட ஏதேனும் சட்டமுறையான கட்டளைக்கிணங்கி யொழுகுவதற்கு வேலையாளர் வேண்டுமென்று தவறுதல்.

தொழில்தருநருக்குச் சொந்தமான பண்டங்களை அல்லது பொருட்களைத் திருடுதல், அல்லது தொழில்தருநரின் தொழில் சம்பந்தமான மோசடி அல்லது நேர்மையீனம்.

வேலை நேரங்களின் போது மதுபோதையிலிருத்தல்.

வேண்டுமென்று கீழ்ப்படியாதிருத்தலும் ஒழுக்காற்று வேண்டுமென்று மீறுதலும்.

தொழில் கொண்டுநடாத்துவதற்குத் தொழில்தருநரின் வளவுகளுக்குவரும் எவரேனும் பொதுமக்களுக்கு மரியாதையீனமாக நடத்தல் அல்லது வசதியீனம் ஏற் படுத்துதல்.

பொய்யான அல்லது பிறழ்வழி உய்க்கும் கூற்றுக்கள் நோய்ப்பாசாங்கு செய்தல்.

தொழில்தருநரின் வளவுகளில் நிறுவப்பட்ட எவையேனும் பாதுகாப்பு உபாயங்களுடன் தலையிடுதல்:

வளவுகளுக்குப் பொறுப்பாகவுள்ள ஆளின் முன்னனுமதி யின்றி, கைத்துண்டுகளை, துண்டுப் பிரசுரங்களை அல்லது சுவரொட்டிகளைத் தொழில்தருநரின் வளவுகளினுள் விநி யோகித்தல் அல்லது வெளிக்காட்டி வைத்தல்.

தொழில்தருநரின் வளவுகளில் துப்பரவைப் பேணுவதற் காகக் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களை மீறுதல். தடைசெய்யப்பட்ட இடத்தில் புகைத்தல்.

## படிவம் I

ஒழுங்குவிதி 23 (2)

(136ஆம் அத்தியாயமான) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 39 (3)ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

உம்மால் ஊழியத்துக்கமர்த்தப்பட்ட வேலையாளரொருவராகவுள்ள.........................................என்பவருக்கு (136ஆம் அத்தியாயமான) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 39 (1)ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரம்,........ ..........................................*ஆகிய என்னால்......................ஆம் தேதியிலிருந்து ஒழிக்கப்படுமென அக்கட்டளைச் சட்டத்தின் 39 (3)ஆம் பிரிவுக்கிணங்க..................................................ஆகிய நீர் இத்தால் அறிவிக்கப்படுகின்றீர்.

ஒப்பம் :..................................................

..................................................

தேதி :..........................

*ஒழிப்பனவைச் செய்யும் அலுவலரின் பதவிப் பெயர்.

## படிவம் II

(ஒழுங்குவிதி 25)

(136ஆம் அத்தியாயமான) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42ஆம் பிரிவின் கீழான அறிவித்தல். –

| | |
|---|---|
| அத்தகைய சம்பளச் சபையின் வலுவிலுள்ள குறிப்பனவுகள் முடிபுகள். | தொழில்தருநரினால் வேலையாளருக்கு விற்கப்பட்ட உணவுப் பொருட்களின் விலைகள். |

## படிவம் III

(ஒழுங்குவிதி 26)

(136ஆம் அத்தியாயமான) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 46 (1)ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்.

.................................................இலுள்ள.................................................

நீதிமன்றத்தில் (136ஆம் அத்தியாயமான) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 (1)* 44 (1)* 44 (2)* ஆம் பிரிவின் கீழ் உமக்கெதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குக்கான விளக்கத்தில்

......................................................................................... ஆகிய நான் (பெயரும், பதவிப்பெயரும்) உம்மால் ஊழியத்துக்கமர்த்தப்பட்ட வேலையாளர்களாகவுள்ளவரும் இதற்கான அட்டவணையின் நிரை 1இல் குறித்துரைக்கப்பட்டவருமான வேலையாளர்களுக்கு அவ்வட்டவணையின் நிரை 11இலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு அக்கட்டளைச் சட்டத்தின்...............ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க நீர் சம்பளம் செலுத்தத்தவறியமை பற்றிய சான்றை எடுத்துக்கூற முன்னங்கொண்டுள்ளேன் என அக்கட்டளைச் சட்டத்தின் 46 (1)ஆம் பிரிவுக்கிணங்க.................................................................................

நீர் இத்தால் அறிவிக்கப்படுகின்றீர்.

.................................................
(ஒப்பமும் பதவிப்பெயரும்)

அட்டவணை

| நிரல் I | நிரல் II |
|---|---|
| வேலையாளர்களின் பெயர்கள் | எக்காலப்பகுதிகளுக்குச் சம்பளம் செலுத்தப்படவில்லை என்பது. |

*பொருத்தமற்றவற்றைக் கீறிவிடுக.

2019